ஆண்டறிக்கை
2022



ரணவிரு சேவா அதிகாரசபை

பாதுகாப்பு அமைச்சு

ரணவிரு சேவா அதிகாரசபை

ரணவிரு சேவா அதிகாரசபையானது 1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் மனிதாபிமான நடவடிக்கையின் போது உயிர்த் தியாகம் செய்த படைவீரர்களின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் அவயவங்களை இழந்த படைவீரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்குத் தேவையான நலன்களை வழங்குவதற்காக நிறுவப்பட்டது.

படை வீரர்களது நலனுக்காகத் தாபிக்கப்பட்ட ஒரேயொரு நியதிச்சட்ட நிறுவனமான ரணவிரு சேவா அதிகாரசபையானது, நாடு முழுவதும் பரந்துபட்டு வாழும் படைவீரர் சமூகத்தை அணிதிரட்டி அவர்களின் அனைத்து நடவடிக்கைகளிலும் தலையீடு செய்வதில் முன்னணி பங்குதாரராக இரண்டு தசாப்தங்களுக்கு மேற்பட்ட காலமாக தனது பணியை நிறைவேற்றி வருகின்றது.

நாடளாவிய ரீதியில் படைவீரர் சமூகத்தை அணிதிரட்டி செயற்படும் ரணவிரு மன்ற வலையமைப்பின் ஊடாக படைவீரர் சமூகத்தினரின் தேவைகளை ஆராய்ந்து, அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகள், நிதி உதவிகள் மற்றும் கடன் வசதிகளை ரணவிரு சேவா அதிகார சபை வழங்கி வருகின்றது.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நிலவிய கொடூர யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களாகப் போருக்குப் பின்னரான பேரழிவின் பின்னர் பல்வேறு மனநிலைகளுக்கு முகங் கொடுத்த படைவீரர் சமூகத்தைப் பொருளாதார, சமூக ரீதியில் வலுப்படுத்தும் தேசிய பணியானது கடந்த இரண்டு தசாப்தங்களில் ரணவிரு சேவா அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது. அந்தப் பொறுப்பை உன்னத சேவையாக மாற்றிய ரணவிரு சேவா அதிகாரசபையினால் 2022 ஆம் ஆண்டு இறுதிக்குள் பல வெற்றிகரமான நலன்புரிச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியுமாக இருந்தது.

நாட்டில் நிலவிய நெருக்கடியான சூழ்நிலையிலும் படைவீரர் சமூகத்திற்கு இயன்றளவு உயர்தர சேவையை உச்சபட்சம் வழங்கி படைவீரர் எனும் நாமத்திற்கு வழங்க வேண்டிய மிக உயர்ந்த கௌரவத்தை ரணவிரு சேவை அதிகாரசபையானது கடந்த 21 வருடங்களில் வழங்கியுள்ளதுடன், எதிர்காலத்திலும் தனது பணியைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு உத்தேசித்துள்ளது. அதே போன்று அரச நிறுவனம் என்ற வகையில் படைவீரர் சமூகத்தின் தேவைகளைக் கண்டறிந்து, அவற்றுக்குத் துரித தீர்வுகளை வழங்கும் பெருமைமிகு நிறுவனமாக ரணவிரு சேவா அதிகார சபையானது இதுவரை காலமும் படைவீரர்களின் இதயங்களில் தனது நாமத்தைப் பதித்துள்ளது.

1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் ரணவிரு சேவா அதிகார சபையின் பங்கு

(அ) யுத்தத்தின் போது அங்கவீனமுற்றுள்ள ஆயுதப் படைகளினதும் பொலிஸ் படை உறுப்பினர்களினதும் அங்கவீனமுற்றுள்ளவர்களின் பின்னலம் பேணல் மற்றும் அவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் ;

(ஆ) (i) யுத்தத்தின் போது அங்கவீனமுற்றுள்ள ஆயுதப் படைகளின் மற்றும் பொலிஸ் படையினர்கள் மற்றும் ;

(ii) யுத்தத்தின் போது இறந்த அல்லது காணாமல் போன ஆயுதப் படைகள் மற்றும் பொலிஸ் படை உறுப்பினர்களைத் தங்கி வாழ்வோருக்கும் ;

வீட்டுவசதி மற்றும் அதற்கான உதவிகளை வழங்குதல்;

(இ) (i) யுத்தத்தின் போது அங்கவீனமுற்ற ஆயுதப்படை மற்றும் பொலிஸ் படை அங்கத்தவர்களுக்கு மற்றும் ;

(ii) யுத்தத்தின் போது இறந்த அல்லது காணாமல் போயுள்ள பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிஸ் படை உறுப்பினர்களில் தங்கி வாழ்வோருக்கும்

மருத்துவ வசதிகள் மற்றும் அதற்கான உதவிகளை வழங்குதல்;

(ஈ) (i) யுத்தத்தின் போது அங்கவீனமுற்ற ஆயுதப்படை மற்றும் பொலிஸ் படையின் உறுப்பினர்கள் ; மற்றும்

(ii) யுத்தத்தின் போது இறந்த அல்லது காணாமல் போன ஆயுதப்படை மற்றும் பொலிஸ் படையினது உறுப்பினர்களில் தங்கி வாழ்வோருக்கும்,

புலமைப்பரிசில் உதவித்தொகை மற்றும் பிற உதவிகள் மூலம் அவர்களுக்குக் கல்வி மற்றும் உயர் கல்விக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் ;

(உ) (i) யுத்தத்தின் போது அங்கவீனமுற்ற ஆயுதப்படை மற்றும் பொலிஸ் படையின் உறுப்பினர்கள்; மற்றும்

(ii) யுத்தத்தின் போது மரணித்த அல்லது இன்று வரை காணாமல் போன ஆயுதப்படை மற்றும் பொலிஸ் படையினது உறுப்பினர்களில் தங்கி வாழ்வோருக்கும்,

பயனுள்ள வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு உதவுதல்;

(ஊ) யுத்தத்தின் போது அங்கவீனமுற்ற ஆயுதப்படை மற்றும் பொலிஸ் படையின் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் நோக்கத்துடன் தொழில்துறை, விவசாய அல்லது வியாபார நிறுவனங்களை நிறுவுதல்; மற்றும்

(ஊ) அதிகார சபையின் பணியை அடைவதற்குத் தேவையான அல்லது சாதகமான அனைத்து செயல்கள் மற்றும் விடயங்களைச் செய்தல்.

நோக்கு

"இராணுவ வீரர்களுக்குத் தேசத்தின் நன்றிக் கடனை நிறைவேற்றுதல்”

செயற்பணி

“இலங்கையின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதற்காக உயிர்த் தியாகம் செய்த, காணாமல் போன மற்றும் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களினதும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களினதும் சமூக மற்றும் உளவியல் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவதும் சேவையிலுள்ள இராணுவ வீரர்களிடமும் அவர்களின் குடும்பங்களிலும் உளவியல் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் விதத்தில் செயற்படுதல்”

ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவரின் ஆசிச்செய்தி



தாய்நாட்டின் பாதுகாப்பிற்காகத் தமது உயிரைப் பணயம் வைத்து போர்க்களத்தில் போராடி உயிர்த் தியாகம் செய்த, வீரம் செறிந்த படைவீரர்களின் நெருங்கிய உறவினர்களுக்கும், மருத்துவக் காரணங்களுக்காக ஓய்வுபெற்ற படைவீரர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றை நிறைவேற்றுவதன் பொருட்டு 1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் ரணவிரு சேவா அதிகார சபையானது தாபிக்கப்பட்டது.

பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும் படைவீரர் சமூகத்திற்குத் தரமான மற்றும் உயர் விளைத்திறனுடனான சேவையினை வழங்குவதன் பொருட்டு ஒரு நிறுவனம் என்ற வகையில் ரணவிரு சேவா அதிகார சபைக்குக் கடந்த 2022 ஆம் ஆண்டானது கடினமாக உழைக்க வேண்டிய ஓர் ஆண்டாக அமைந்தது.


நாட்டில் அப்போது நிலவிய சூழ்நிலையில் 2022 ஆம் ஆண்டிற்காகத் திறைசேறியினால் ரணவிரு சேவா அதிகார சபைக்கு ஏற்பாடுகள் ஒதுக்கப்படாத போதிலும் ரணவிரு சேவா அதிகார சபையிடம் அப்போதிருந்த பண இருப்பின் மூலம் மற்றும் லொத்தர் சீட்டுக்களின் விற்பனை மூலம் கிடைக்கப்பெற்ற வருமானத்தின் மூலம் படைவீரர் சமூகத்தைப் பாதுகாக்க நேரிட்ட ஓர் ஆண்டாக 2022 ஆம் ஆண்டைக் குறிப்பிடலாம். மேலும், இதன் காரணமாக எமது நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த குறிப்பிட்ட சில கருத்திட்டங்களைக் கூட தற்காலிகமாக இடைநிறுத்த நேரிட்டதோடு, எமது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன்கொடையாளர்களின் பங்களிப்பின் மூலம் நிறுத்தி வைக்கப்பட்ட சில கருத்திட்டங்களை மீளவும் நடைமுறைப்படுத்த முடிந்தது.

ரணவிரு நலன்புரிச் சேவைகளை நடைமுறைப்படுத்துவதனை முன்னிட்டு ஏற்பாடுகளைத் திரட்டும் நோக்கில் அரச மற்றும் தனியார் என இரு தரப்பு நிறுவனங்களையும் ஒன்றிணைத்த, முறையான மற்றும் வெற்றிகரமான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி ரணவிரு கொடி விற்பனையை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் இந்த ஆண்டு எடுக்கப்பட்டன.

2021 ஆம் ஆண்டில் பெற்றுக் கொண்ட ஏற்பாடுகள் மூலம் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் நாட்டில் நிலவிய சூழ்நிலைகளினால் பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் காணப்பட்ட சிரமங்கள் காரணமாக அதுவரை ரணவிரு சேவா அதிகார சபைக்குக் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்த ஊனமுற்றோருக்கான உபகரணங்களை இந்த ஆண்டில் எம்மால் பெற்றுக் கொள்ள முடிந்ததோடு, நாம் அவ் உபகரணங்களை படைவீரர்களின் வீடுகளுக்கேச் சென்று அவர்களிடம் கையளித்தோம்.

பெற்றோர் பராமரிப்புக் கொடுப்பனவு, படைவீரர் மானிய வீட்டுக் கடன் திட்டம், பெற்றோர் பாதுகாப்பு (மாபிய சுரகும்), சுயதொழில் கடன் திட்டம் போன்ற கருத்திட்டங்களைக் குறைந்த ஏற்பாடுகளைக் கொண்டும் முன்னெடுத்துச் செல்வதற்கு எமது நிறுவனத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. படைவீரர் சமூகத்தின் விவசாய அறிவைப் போன்றே சேதன உற்பத்தியின் முக்கியத்துவம் குறித்த செயன்முறை அறிவை விருத்தி செய்து அத் துறையில் வெற்றிகரமான முறையில் முன்னோக்கிச் செல்வதற்கான இயலுமை தொடர்பான விடயங்களை 2022 ஆம் ஆண்டில் எம்மால் படைவீரர் சமூகத்திற்குப் புரிய வைக்க முடிந்தது.

2022 ஆம் ஆண்டில் ரணவிரு சேவா அதிகார சபையினால் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் படைவீரர் சமூகத்தின் நலன்புரி நடவடிக்கைளைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்த முடிந்தது. இந் நடவடிக்கைகளை வெற்றிகரமாக்குவதற்கு உறுதுணையாக இருந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அவர்கள் உட்பட பணிக்குழுவினருக்கும், ரணவிரு சேவா அதிகார சபையின் பணிக்குழுவினருக்கும் முகாமைத்துவ சபை சார்பாக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர (ஓய்வுநிலை)
டப்ளியூடப்ளியூவீ ஆர்டப்ளியூபி ஆர்எஸ்பி வீஎஸ்வீ யூஎஸ்பி என்டீயூ
தலைவர்
ரணவிரு சேவா அதிகாரசபை

பணிப்பாளர் சபை

1. மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர (ஓய்வுநிலை)	- தலைவர், ரணவிரு சேவா அதிகார சபை
2. திருமதி. சோனியா கோட்டேகொட	- உப தலைவர் ரணவிரு சேவா அதிகார சபை
3. ஜயந்த எதிரிசிங்க	- மேலதிக செயலாளர் (அரச பாதுகாப்பு) அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு
4. திரு.எச்.ஜீ.டீ.எம் அலுத்வத்த	- பிரதிப் பணிப்பாளர், நிதி அமைச்சு
திருமதி.எச்.எம்.பி.சீ.குமாரிஹாமி	- பணிப்பாளர், முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம், நிதி அமைச்ச
திருமதி. எம்.டீ.என்.எஸ். ஜயரத்ன	- பணிப்பாளர் அரச கணக்கு திணைக்களம், நிதி அமைச்சு
5. மேஜர் ஜெனரல் எச்.எல்.வீ.எம். லியனகே	-பதவிநிலை பிரதானி, இலங்கை இராணுவம்
மேஜர் ஜெனரல் ஜகத் கொடிதுவக்கு	- பதவிநிலை பிரதானி, இலங்கை இராணுவம்
6. ரியர் அட்மிரல் வை.என். ஜயரத்ன	-பதவிநிலை பிரதானி, இலங்கை கடற்படை
ரியர் அட்மிரல் ஏ.யூ.சீ.டீ சில்வா	- பதவிநிலை பிரதானி, இலங்கை கடற்படை
ரியர் அட்மிரல் யூ.வீ.எம்.பி.பெரேரா	- பதவிநிலை பிரதானி, இலங்கை கடற்படை
7. எயார் வைஸ் மார்ஷல் எம்.டீ.ஏ.பி பாயோ	- பதவிநிலை பிரதானி, இலங்கை விமானப்படை

8. பிரதி பொலிஸ்மாஅதிபர் டப்ளியூ.ஜே பத்மினி	-பொலிஸ் நலன்புரி மற்றும் மருத்துவ சேவைகள் பிராந்தியம் இலங்கை பொலிஸ்
9. மேஜர் ஜெனரல் டிஎம்எஸ் திஸாநாயக்க (ஓய்வுநிலை)	- நியமிக்கப்பட்ட உறுப்பினர்
10. திரு. கனிஷ்க டீ சில்வா	- நியமிக்கப்பட்ட உறுப்பினர்
11. திருமதி. பிரஜீவா அல்விஸ்	- நியமிக்கப்பட்ட உறுப்பினர்

பொருளடக்கம்

01. அவயங்களை இழந்த படைவீரர்களின் புணர்வாழ்வு மற்றும் பின்னலம் பேணல்

1.1. அறிமுகம்

1.2. அவயங்களை இழந்த படைவீரர்களுக்கு உதவி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்

1.2.1 சக்கர நாற்காலிகள் வழங்குதல்

1.2.2. ஊன்றுகோல் வழங்குதல்

1.2.3. கவட்டுக்கட்டை வழங்குதல்

1.2.4. கொமட் நாற்காலிகள் வழங்குதல்

1.2.5. கைத்தடிகள் வழங்குதல்

1.2.6. காற்றுமெத்தை வழங்குதல்

1.2.7. செயற்கைக் கால்கள் வழங்குதல்

1.2.8. செவித்திறன் கருவிகளை வழங்குதல்

1.2.9. மூக்குக் கண்ணாடிகள் வழங்குதல்

1.2.10. ரோஹோ குஷன்களை வழங்குதல்

1.2.11. மருத்துவக் காலணிகள் வழங்குதல்

1.2.12. செயற்கைக் கரங்கள் வழங்குதல்

1.2.13. ஜெல் காலுறைகள் மற்றும் ஜெல் லைனர்கள் வழங்குதல்

1.3. நன்கொடைகள் மூலம் மின்சார சார்ஜ் செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் வழங்குதல்

1.4. இந்து லங்கா நட்புறவின் மூலம் படைவீரர்களுக்கு செயற்கை கரங்கள், கால்கள் வழங்குதல்

1.5. மாகாண மற்றும் மாவட்ட ரீதியாக உபகரணங்களை வழங்குதல்

02. அவயவங்களை இழந்த படைவீரர்களது வீடுகளுக்கான துப்பரவு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்

2.1. அறிமுகம்

2.2. துப்பரவு வசதிக்கான உதவி தொகைகள் வழங்கும் வழிமுறைகள்

03. விளையாட்டு பிரிவு

3.1. அறிமுகம்

3.2. ரணவிரு சேவா அதிகார சபையின் விளையாட்டுக் குழு

3.3 விளையாட்டுப் பிரிவின் மூலம் பெற்றுக் கொண்ட வெற்றிகள்

3.3.1. இந்திய பரா மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியின் TF42 100 மீற்றர் பிரிவில் ரணவிரு சேவா அதிகார சபைக்கு சர்வதேச வெற்றி கிட்டியமை

.3**.3.2** தேசிய பரா மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியின் TF42 100 மீற்றர் போட்டியில் சாம்பியன்ஷிப் பெற்றுக் கொண்டமை

3.3.3. டேபிள் டென்னிஸ் போட்டியில் ரணவிரு சேவா அதிகார சபைக்கு வெற்றி கிட்டியமை

3.4. விளையாட்டு பிரிவு மூலம் மேற்கொள்ளப்பட்ட நன்கொடைகள்

3.4.1. விளையாட்டு வீரர் அனில் பிரசன்ன அவர்களுக்கு ஊக்க பானங்கள் மற்றும் வேறு தேவைப்பாடுகளை வழங்குதல்.

3.4.2. டீ.எஸ்.ஐ. கூட்டு வியாபாரத்தின் ஊடாக விளையாட்டு அனுசரணை வழங்குதல்.

3.4.3.ரணவிரு சேவா அதிகார சபையின் நீச்சல் குழுவின் வீரர்களுக்கு ஊக்கமளித்தல்.

3.4.5. படைவீரர் ஒருவரின் புதல்விக்குத் தேவையான ஊக்க பானங்கள் வழங்குதல்.

3.4.6. டேபிள் டென்னிஸ் வீரரான படைவீரர் டீ.ரீ.ரீ.அபேசிங்ஹ அவர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை நன்கொடையாக வழங்குதல்.

3.5. 2022 ஆம் ஆண்டில் விளையாட்டு மற்றும் ஊக்க பானங்கள் வழங்குவதற்கான செலவினங்களை மேற்கொள்ளல்

04. வீடமைப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் நலன்புரி மற்றும் தொழில் அபிவிருத்தி பெற்றோர் பாதுகாப்பு (மாபிய சுரகும்) கடன் பிரிவு

4.1. விரு சுமிதுரு வீட்டுத் திட்டம்

4.1.1. விரு சுமிதுரு வீட்டு திட்டம் தொடர்பாக ரணவிரு சேவா அதிகார சபையின் பணிகள்

4.1.2. 2022 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் பட்டியல்

4.1.3 விரு சுமிதுரு வீட்டுத் திட்டத்தின் மூலம் 2017 ஆம் வருடம் தொடக்கம் 2022 ஆம் வருடம் வரை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடம் சமர்ப்பிக்கப்பட்ட முழுமையான மற்றும் பகுதியளவிலான வீடுகளின் எண்ணிக்கை

4.1.4. 2022 ஆம் வருடத்தினுள் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடம் சமர்ப்பிக்கப்பட்ட பயனாளிகள் (மாவட்ட ரீதியாக)

4.1.5. 2022 ஆம் வருடத்தினுள் விரு சுமிதுரு வீட்டுத் திட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை – சேவைகளின் பிரகாரம்

4.1.5. விரு சுமிதுரு வீட்டுத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் புகைப்படங்கள்

4.2. "விரு சஹன " வீட்டுக் கடன் நிகழ்ச்சி திட்டம்

4.2.1. சேவைகளின் பிரகாரம் வீட்டுக் கடன் வழங்குதல்

4.2.2. வீட்டுக் கடன் வழங்குதல் 2021 – மாகாண மற்றும் மாவட்ட ரீதியாக

4.3. "ரணவிரு திரிய" சுயதொழில் கடன் திட்டம்

4.3.1. நோக்கம் மற்றும் அறிமுகம்

4.3.2.நடைமுறைப்படுத்தும் முறை

4.3.3. ரணவிரு திரிய கடன் வழங்கலின் முன்னேற்றம் மாவட்ட ரீதியில்

4.4. படைவீரர் பெற்றோர் பாதுகாப்பு (மாபிய சுரகும்) நிகழ்ச்சி திட்டம்

4.4.1. ரூ.1500 வீதம் செலுத்துதல்

4.4.2. ரூ. 2250 வீதம் செலுத்துதல்

4.4.3. மொத்தத் தொகையை வரவு வைத்தல்

4.5. காணிப் பிரிவு

4.5.1. அறிமுகம்

4.5.2.பலன்களை வழங்கும் முறை

4.5.3. 2022 ஆம் ஆண்டில் செயலாற்றுகை

4.5.3.1. பலாங்கொடையில் தெரிவு செய்யப்பட்ட படைவீரர்களுக்குக் கொடை உறுதிப் பத்திரங்களை வழங்குதல்

4.5.3.2. படைவீரர் குடும்பம் ஒன்றிற்கு மீரிகமையில் காணி வழங்குதல்

4.5.3.3. வத்துமுல்லையில் தெரிவு செய்யப்பட்ட படைவீரரின் மனைவிக்குக் கொடை உறுதிப் பத்திரம் வழங்குதல்

4.5.3.4. மாலம்பே காணியை தற்காலிக உறுதிப்பத்திரம் மூலம் அங்கவீனமுற்ற படைவீரர் ஒருவருக்கு கொடையாக அளித்தல்

05. மருத்துவ உதவி மற்றும் கடன் வழங்குதல்

5.1. மருத்துவ உதவி வழங்குதல்

5.2. மருத்துவக் கடன் வழங்குதல்

5.3. மருத்துவக் கடன் மற்றும் உதவி வழங்கும் முறைகள்

5.4. மருத்துவ உதவி பலன்களை பகிர்ந்தளித்தல்

5.4.1. மாவட்ட ரீதியாக மருத்துவ உதவி வழங்குதல்

5.5. மருத்துவக் கடன் பலன்கள் பகிர்ந்தளித்தல்

5.5.1. மாவட்ட ரீதியாக மருத்துவக் கடன் வழங்குதல்

06. கல்வி புலமைப் பரிசில் மற்றும் இளைஞர் விவகார பிரிவு

6.1. பிரிவின் கீழ் செயல்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள்

6.1.1. 6 - 11 ஆம் ஆம் தரங்களுக்கான உதவித்தொகை திட்டங்கள்

6.1.1.1. 2022 ஆம் ஆண்டில் 6 - 11 ஆம் தரங்கள் வரை மாவட்டங்கள் மற்றும் மாகாணங்கள் ரீதியாக உதவித்தொகை பகிர்ந்தளித்தல்

6.1.2. க.பொ.த. உயர்தர புலமைப் பரிசில்

6.1.2.1. 2022 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தர புலமைப் பரிசில் வழங்குதல்

6.1.3. உயர் கல்வி உதவித்தொகை

6.1.4. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி பாடநெறி உதவித் திட்டம்

6.1.5. திறன் மேம்பாட்டுக் கடன்களை வழங்குதல்

6.1.6. 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற பிள்ளைகளின் மதிப்பீடு

6.1.7. 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

6.1.7.1. 32 அழியா வீரர்கள் நூலின் நூலாசிரியர் வருமானத்திலிருந்து படைவீரர் ஒருவரின் புதல்வியொருவருக்கு கல்வி சார் உதவி வழங்குதல்

6.1.7.2 "32 அழியா வீரர்கள்" நூல் மூலம் மேலும் மூன்று படைவீரர்களின் பிள்ளைகளுக்கு கல்வி உதவி வழங்குதல்

6.1.7.3. தலைவரின் தனிப்பட்ட அனுசரணையில் இரண்டு படைவீரர்களின் பிள்ளைகளுக்கு இரண்டு மடிக் கணனிகள் நன்கொடையாக வழங்குதல்.

6.1.7.4. மேல் மாகாணத்தைச் சேர்ந்த படைவீரர்களின் பிள்ளைகளுக்கு முத்துஹர மூலம் பாடசாலை உபகரணங்களை நன்கொடையாக வழங்குதல்

6.1.8. பெற்றோர் பாதுகாவலர் புலமைப்பரிசில் திட்டம்

6.1.8.1. அறிமுகம் மற்றும் நோக்கம்

6.1.8.2. நிகழ்ச்சித் திட்டத்தின் பலன்களை வழங்கும் முறைகள்

6.1.8.3. மாவட்ட ரீதியில் 2022 ஆம் ஆண்டில் புலமைப்பரிசில் வழங்கல் -2022

6.1.8.4. 2022 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்ட புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை

6.1.8.5. 2022 ஆம் ஆண்டில் உதவித்தொகைகளை வழங்குவதற்காக மாதாந்தம் ஏற்க நேரிட்ட ஆகுசெலவு

6.1.8.6. உதவித்தொகைகளை வழங்குவதற்கான நன்கொடையாளர்களின் பங்களிப்பு

6.1.8.7. 2022 ஆம் ஆண்டில் பெற்றோர் பாதுகாவலர் புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வேறு பணிகள்

07. மாகாண மற்றும் சிறப்புத் திட்டப் பிரிவு

7.1. அறிமுகம்

7.2. திடீர் அனர்த்த உதவி வழங்கல் திட்டம்

7.2.1. பலன்களை வழங்கும் முறைகள்

7.2.2. இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளான படைவீரர்களின் குடும்பங்களுக்கு உதவி வழங்கல்

7.2.3. திடீர் மரணமடைந்த படைவீரர்களுக்கு உதவி வழங்கல்

7.3. ரணவிரு கிராமங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்

7.3.1. நாடளாவிய ரணவிரு கிராமங்கள்

7.4. ஹெலவிரு சுவதரணி பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டம்

7.4.1. பலன்களை வழங்கும் முறைகள்

7.4.1.1. ஹெலவிரு சுவ தரணி பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டம் - கம்பஹா

7.4.1.2.ஹெலவிரு சுவ தரணி பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டம்– பதுளை

7.4.1.3. ஹெலவிரு சுவ தரணி பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டம்– நுவரெலியா

7.4.1.4. ஹெலவிரு சுவ தரணி பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டம்- அநுராதபுரம்

7.4.1.5. ஹெலவிரு சுவ தரணி பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டம்- உடுபில

7.4.1.6. ஹெலவிரு சுவ தரணி பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டம்- காலி

7.4.1.7.ஹெலவிரு சுவ தரணி பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டம்– மாத்தளை

7.4.1.8.ஹெலவிரு சுவ தரணி பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டம்– அம்பாறை

7.4.1.9.ஹெலவிரு சுவ தரணி பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டம்– மாத்தறை

7.4.1.10. ஹெலவிரு சுவ தரணி பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டம்- புத்தளம்

08. படைவீரர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சி

8.1. அறிமுகம்

8.2. தேசிய படைவீரர் நினைவேந்தல் மாதத்தைப் பிரகடனப்படுத்தல்

8.3. தேசிய படைவீரர் நினைவேந்தல் தினம்

8.4. மயிலப்பிட்டி ரணவிரு நினைவு பூங்காவின் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்

8.4.1. 2022 ஆம் ஆண்டில் மயிலப்பிட்டி பூங்காவின் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

09. ஓய்வுபெற்ற படைவீரர் நலன்புரிப் பிரிவு

9.1. அறிமுகம்

9.2.2022 ஆம் ஆண்டில் செயலாற்றுகை

9.2.1. தேனீ பெட்டிகள் வழங்குதல்

9.3. 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

9.3.1.தேனீ வளர்ப்பு பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – மாத்தளை

9.3.2. கரிம உரம், வீட்டுத் தோட்டச் செய்கை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – பொலன்னறுவை

9.3.3. கரிம உரம், வீட்டுத் தோட்டச் செய்கை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – பொலன்னறுவை மாவட்டம் (தியபெதும)

9.3.4. கரிம உரம், வீட்டுத் தோட்டச் செய்கை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – எம்பிலிபிட்டிய

9.3.5. கரிம உரம், வீட்டுத் தோட்டச் செய்கை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – எஹெலியகொட

9.3.6. கரிம உரம், வீட்டுத் தோட்டச் செய்கை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – இரத்தினபுரி மாவட்டம் (கஹவத்தை, நிவித்திகல)

9.3.7. 2022.03.11 ஆம் திகதி கரிம நெற்செய்கை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் இரத்தினபுரி மாவட்டம்

– எம்பிலிபிட்டிய மன்றம்

9.3.8. கரிம உரம் மற்றும் வீட்டுத் தோட்டச் செய்கை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – அனுராதபுரம்

9.3.9. கரிம உரம் மற்றும் வீட்டுத் தோட்டச் செய்கை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – அம்பாறை மாவட்டம்

9.3.10. உஹன ரணவிரு மன்ற உறுப்பினர்களுக்கான கரிம நெற்செய்கை குறித்த விசேட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்

9.3.11. கறவை மாடு வளர்ப்பு பற்றிய பயிற்சி செயலமர்வு – அம்பாறை மாவட்டம்
9.3.12. கரிம விவசாயம் குறித்த விசேட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் – நுவரெலியா
9.3.13. கரிம உரம், வீட்டுத் தோட்டச் செய்கை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – குருநாகல் மாவட்டம்
9.3.14. கரிம உரம், வீட்டுத் தோட்டச் செய்கை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – இரத்தினபுரி மாவட்டம் (இரத்தினபுரி நகரம்)
9.3.15. கரிம உரம், வீட்டுத் தோட்டச் செய்கை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – குருநாகல் மாவட்டம் அலவ்வ
9.3.16. சகல மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் 7000 தென்னங் கன்றுகளை படைவீரர்களுக்குப் பகிர்ந்தளித்தல்

10. பெற்றோர் பராமரிப்பு திட்டம்

10.1. அறிமுகம்
10.2. நிகழ்ச்சித் திட்டத்தின் பலன்களை வழங்கும் முறை
10.2.1. கொடுப்பனவிற்கான தகைமைகள்
10.2.2. பெற்றோர் பராமரிப்புக் கொடுப்பனவிற்குத் தேவையான ஆவணங்கள்
10.2.3 அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் முறை
10.3. 2022 ஆம் ஆண்டில் பணத்தை வரவு வைத்தல்
10.4.2022 ஆம் ஆண்டில் பயனாளிகளின் எண்ணிக்கை

11. விருசர சிறப்புரிமை அட்டைகள் பிரிவு

11.1. நோக்கம் மற்றும் அறிமுகம்
11.2. விருசர அட்டைகளை வழங்கும் கட்டங்கள்
11.3.2022 சனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை அச்சிடப்பட்ட விருசர சிறப்புரிமை அட்டைகளின் எண்ணிக்கை
11.4. விருசர அட்டைக்கான சிறப்புரிமைகளை வழங்கும் நிறுவனங்கள்
11.5. விருசர அட்டைக்கான சிறப்புரிமைகளை வழங்கும்/தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு இதுவரை கடிதங்களை சமர்ப்பித்துள்ள நிறுவனங்கள்
11.6. 2022 ஆம் ஆண்டின் சனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை அச்சிடப்பட்ட அட்டைகளின் எண்ணிக்கை

நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள்

01

அவயவங்களை இழந்த படைவீரர்களின் புனர்வாழ்வு மற்றும் பின்னலம் பேணல்

1.1. அறிமுகம்

செயற்பாட்டுக் கடமையின் போது மற்றும் அவயவங்களை இழந்து வைத்திய காரணங்களினால் ஓய்வு பெற்ற படைவீரர்களுக்கு புனர்வாழ்வளித்தல், பின்னலம் பேணல் மற்றும் பராமரிப்பானது ரணவிரு சேவா அதிகாரசபையினால் நிறைவேற்றப்படும் பிரதான பணியாகும். அவயவங்களை இழந்த படைவீரர்களை உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும், சமூக ரீதியாகவும் வலுவூட்டுவதல் மற்றும் அவர்களை ஊக்கப்படுத்தி, சமூகமயப்படுத்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்ந்த மட்டத்தில் பேணுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் இத் திட்டங்களினால் மேற்கொள்ளப்படுகின்றன.

1.2 அவயவங்களை இழந்த படைவீரர்களுக்கு உதவி உபகரணங்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்

யுத்தத்தின் போது அவயவங்களை இழந்த படைவீரர்களின் தற்போது எஞ்சியுள்ள வேலை செய்யும் திறனை மேம்படுத்துவதற்குத் துணையாக அமையும் உதவி உபகரணங்கள் அன்றாட நடவடிக்கைகளின் போது பயன்படுத்தப்படுகின்றன. படைவீரர்களின் உடல் ஊன நிலைமையை தவிர்ப்பதற்குத் துணையாக அமையும் தற்போது பயன்படுத்தப்படும் உபகரணங்கள் தொழில்நுட்ப ரீதியில் உயர்ந்த தரத்தில் காணப்படுதலானது படைவீரரின் ஆரோக்கியத்தை சிறந்த நிலையில் பேணுவதற்கு உதவுகிறது.

யுத்தத்தின் போது அவயவங்களை இழந்த படைவீரர்களின் தற்போது எஞ்சியுள்ள வேலை செய்யும் திறனை மேம்படுத்துவதற்குத் துணையாக அமையும் செயற்கைக் கால்கள், செயற்கைக் கரங்கள், சக்கர நாற்காலிகள், ஊன்றுகோல், கவட்டுக் கட்டைகள், கண்ணாடி, மருத்துவக் காலணிகள், செவிபுலன் கருவிகள், வெள்ளைப் பிரம்புகள், கைத்தடிகள் , கொமட் நாற்காலிகள், ரோஹோ குஷன், காற்று மெத்தைகள், ஜெல் காலுறைகள், ஜெல் லைனர், மின்சார சார்ஜ் செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பிற உதவி உபகரணங்கள் இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன.

அவயவங்களை இழந்த படைவீரர்கள் சமூக புனர்வாழ்வு முறையின் கீழ் வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளதோடு, அவர்களது உடல் ஊன நிலைமையுடன் நாளாந்த வேலைகளை செய்கையில் ஏற்படும் சிரமங்களைத் தவிர்ப்பதற்குத் தேவையான ஒத்துழைப்பு இந்த உபகரணங்களை வழங்குவதன் மூலம் கிடைக்கிறது. உதவி உபகரணங்களை வெறுமனே தொழிநுட்ப உபகரணமொன்றாக அல்லாது படைவீரரின் உடலின் ஓர் அங்கமாகவே கருதலாம். அதற்கமைய அவயவங்களை இழந்த படைவீரரின் தேவைக்கேற்ப உதவி

உபகரணங்கள் தொடர்ச்சியாகக் கிடைக்காமை மற்றும் அவயவங்களை இழந்த படைவீரர்கள் சிறந்த நிலையில் காணப்படாத, பழுதடைந்த உதவி உபகரணங்களைப் பயன்படுத்துவதன் காரணமாக பக்க விளைவுகளுக்கு உள்ளாவதைத் தடுப்பதற்குத் தேவையான உதவி உபகரணங்களை வழங்குவது இதன் நோக்கமாகும்.

இந்தத் திட்டத்தின் மூலம் அவயவங்களை இழந்த படைவீரர் நேரடியாக உடல் மற்றும் உள ரீதியில் வலுப்படுத்தப்படுவதோடு, இதன் மூலம் மறைமுகமாகப் படைவீரரின் குடும்ப அங்கத்தவர்களுக்கும் நேர்மறையான தாக்கம் ஏற்படுகிறது. இதன் மூலம் அவயவங்களை இழந்த படைவீரர்கள் மற்றும் சமூகத்தினரிடையே தொடர்புகளை விருத்தி செய்தல் நோக்கமாகக் கொள்ளப்படுகிறது.

2022 ஆம் ஆண்டில் அவயவங்களை இழந்த படைவீரர்களுக்கு உதவி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படாத காரணத்தினால் 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட உதவி உபகரணங்கள் 2022 ஆம் ஆண்டில் படைவீரர்களுக்கு வழங்கப்பட்டன.


நாட்டில் நிலவிய தொற்று நிலைமையானது இந்த உதவி உபகரணங்களின் உற்பத்தியில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் போது உபகரணங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான மூலப் பொருட்களின் பற்றாக்குறை, எரிபொருள் நெருக்கடி என்பவற்றுக்கு மத்தியில் போக்குவரத்து வசதிகளில் காணப்பட்ட சிக்கல்கள், போக்குவரத்துக் கட்டணங்களின் விலை சடுதியாக அதிகரித்தமை மற்றும் உதவி உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கு அதிக தீர்வைக் கட்டணத்தை செலுத்த நேரிட்டமை காரணமாக உரிய காலத்தில் உபகரணங்களை இறக்குமதி செய்ய முடியாமை மற்றும் உபகரணங்களின் விலை உச்ச அளவு அதிகரித்தமை என்பன இந்த திட்டத்தின் நடவடிக்கைகளை முன்னெடுக்கையில் ஏற்பட்ட சவால்களாகும்.

2021 ஆம் ஆண்டில் ரணவிரு சேவா அதிகார சபைக்குத் திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் 2022 ஆம் ஆண்டில் படைவீரர்களுக்கு வழங்கப்பட்டன.

1.2.1. சக்கர நாற்காலிகள் வழங்குதல்

அங்கவீன உதவி உபகரணங்களை வழங்கும் அளவுகோல்களின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சக்கர நாற்காலிகளுள் சாதாரணமான 329 சக்கர நாற்காலிகள் மற்றும் 23 கொமட் சக்கர நாற்காலிகள் படைவீரர்களுக்கு வழங்கப்பட்டன.

தற்போது பயன்படுத்தப்படும் சக்கர நாற்காலி பழுதடைந்த (உடைந்து/ கிழிந்து/நசிந்து/துருப்பிடித்த) நிலையிலுள்ள மற்றும் சுகயீனமுற்றதன் காரணமாக அவசரத் தேவை (அவசர சத்திர சிகிச்சைகள், விபத்துக்கள், உடற் குறைபாடுகள்) ஏற்பட்ட படைவீரர்களுக்கு 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 13 சாதாரண சக்கர நாற்காலிகள், 2 கொமட் சக்கர நாற்காலிகள் மற்றும் 80 மோட்டிவேஷன் சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன.








செயற்பாட்டு சக்கர நாற்காலிகளின் தரம் குறித்து விசாரித்தறியும் மற்றும் விநியோகிக்கும் திட்டங்களை வகுக்கும் சந்தர்ப்பம்

1.2.2. ஊன்றுகோல்கள் வழங்குதல்

2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 1208 ஊன்றுகோல்கள் 2022 ஆம் ஆண்டில் 604 படை வீரர்களுக்கு வழங்கப்பட்டன.

தொ.இ.	மாகாணம்	ஊன்றுகோல்களின் எண்ணிக்கை	பயனாளிகளின் எண்ணிக்கை
1	மேல் மாகாணம்	372	186
2	தென் மாகாணம்	342	171
3	மத்திய மாகாணம்	630	315


4	வட மேல் மாகாணம்	536	268
5	வட மத்திய மாகாணம்	582	291
6	ஊவா மாகாணம்	246	123
7	சப்பிரகமுவ மாகாணம்	332	166
8	கிழக்கு மாகாணம்	168	84
மொத்தம்		3208	1604



1.2.3. கவட்டுக் கட்டைகள் வழங்குதல்

2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 7 கவட்டுக் கட்டை சோடிகள் 2022 ஆம் ஆண்டில் படை வீரர்களுக்கு வழங்கப்பட்டன.


தொ.இ.	மாவட்டம்	பயனாளிகளின் எண்ணிக்கை
1	கொழும்பு	1
2	கம்பஹா	2
3	மாத்தறை	1
4	அம்பாந்தோட்டை	1
5	மாத்தளை	1
6	இரத்தினபுரி	1



1.2.4. கொமட் நாற்காலிகள் வழங்குதல்

அவயவங்களை இழந்த படைவீரர்களுக்கு 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 09 கொமட் நாற்காலிகள் 2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன.


தொ.இ.	மாவட்டம்	பயனாளிகளின் எண்ணிக்கை
1	கம்பஹா	1
2	குருநாகல்	3
3	அனுராதபுரம்	2
4	இரத்தினபுரி	2
5	அம்பாறை	1



1.2.5. கைத்தடிகள் வழங்குதல்

2022 ஆம் ஆண்டில் 96 படைவீரர்களுக்கு கைத்தடிகள் வழங்கப்பட்டன.


தொ.இ.	மாகாணம்	பயனாளிகளின் எண்ணிக்கை
1	மேல் மாகாணம்	23
2	தென் மாகாணம்	11
3	மத்திய மாகாணம்	27
4	வட மேல் மாகாணம்	19
5	வட மத்திய மாகாணம்	26
6	ஊவா மாகாணம்	12
7	சப்பிரகமுவ மாகாணம்	14
8	கிழக்கு மாகாணம்	1



1.2.6. காற்று மெத்தைகள் வழங்குதல்

2022 ஆம் ஆண்டில் நான்கு படைவீரர்களுக்கு காற்று மெத்தைகள் வழங்கப்பட்டன.

தொ.இ.	மாவட்டம்	பயனாளிகளின் எண்ணிக்கை
1	குருநாகல்	1
2	அனுராதபுரம்	2
3	பொலன்னறுவை	1




1.2.7. செயற்கைக் கால்கள் வழங்குதல்

2021 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் மூலம் 664 செயற்கைக் கால்கள் கொள்வனவு செய்யப்பட்டதோடு, அவற்றுள் 151 செயற்கைக் கால்கள் கடந்த வருடத்தில்

படைவீரர்களுக்கு வழங்கப்பட்டன. மேலும், நன்கொடையாளர்களின் உதவிகள் மூலம் 03 செயற்கைக் கால்கள் படைவீரர்களுக்கு வழங்கப்பட்டன.

தொ.இ.	மாவட்டம்	செயற்கைக் கால்களின் எண்ணிக்கை
1	கொழும்பு	24
2	கம்பஹா	33
3	களுத்துறை	29
4	காலி	19
5	மாத்தறை	20
6	அம்பாந்தோட்டை	22
7	கண்டி	47
8	மாத்தளை	29
9	நுவரெலியா	3
10	குருநாகல்	74
11	புத்தளம்	13
12	அனுராதபுரம்	51
13	பொலன்னறுவை	19
14	பதுளை	11
15	மொணராகலை	19
16	இரத்தினபுரி	35
17	கேகாலை	34
18	அம்பாறை	29
19	மட்டக்களப்பு	1
20	திருகோணமலை	4







செயற்கைக் கால்களைப் பரிசீலித்தல்






1.2.8. செவிபுலன் கருவிகள் வழங்குதல்

2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 86 செவிபுலன் கருவிகள் 52 படைவீரர்களுக்கு வழங்கப்பட்டன.

தொ.இ.	மாவட்டம்	பயனாளிகளின் எண்ணிக்கை
1	கொழும்பு	1
2	கம்பஹா	5
3	களுத்துறை	6
4	காலி	2
5	மாத்தறை	4
6	அம்பாந்தோட்டை	8
7	கண்டி	4
8	மாத்தளை	2
9	நுவரெலியா	1
10	குருநாகல்	7
11	புத்தளம்	1
12	அனுராதபுரம்	3
13	பொலன்னறுவை	1
14	பதுளை	1
15	கேகாலை	2
16	அம்பாறை	2
17	திருகோணமலை	2








1.2.9. மூக்குக் கண்ணாடிகள் வழங்குதல்

2021 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற நிதி ஏற்பாடுகள் மூலம் 1.37 மில்லியன் ரூபா செலவில் 300 படைவீரர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.


தொ.இ.	மாவட்டம்	பயனாளிகளின் எண்ணிக்கை
1	கொழும்பு	24
2	கம்பஹா	50
3	களுத்துறை	17
4	காலி	8
5	மாத்தறை	16
6	அம்பாந்தோட்டை	7
7	கண்டி	25
8	மாத்தளை	29
9	நுவரெலியா	7
10	குருநாகல்	37
11	அனுராதபுரம்	42
12	பொலன்னறுவை	14
13	இரத்தினபுரி	9
14	கேகாலை	1
15	அம்பாறை	10
16	மட்டக்களப்பு	2
17	திருகோணமலை	2



1.2.10. ரோஹோ குஷன் உறைகள் வழங்குதல்

2021 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற நிதி ஏற்பாடுகள் பிரகாரம் 720,000.00 ரூபா பெறுமதியான 08 ரோஹோ குஷன் உறைகள் படைவீரர்களுக்கு வழங்கப்பட்டன. இந்த குஷன் உறைகள் முற்றிலும் ஊனமுற்ற, சக்கர நாற்காலிகளுக்கு முடக்கப்பட்ட படைவீரர்களின் ஆரோக்கியத்திற்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்ட குஷன் உறை வகையை சார்ந்தவை என்பதோடு, நீண்ட காலமாக உட்கார்ந்த வண்ணமே இருப்பதால் காயம் ஏற்படுவதைத் தடுப்பதற்குப் பெரிதும் உதவுகிறது.


தொ.இ.	மாவட்டம்	பயனாளிகளின் எண்ணிக்கை
1	கொழும்பு	2
2	கம்பஹா	1
3	மாத்தளை	1
4	குருநாகல்	2
5	அனுராதபுரம்	1
6	மொணராகலை	1



1.2.11. மருத்துவக் காலணிகள் வழங்குதல்

2021 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற நிதி ஏற்பாடுகள் பிரகாரம் 925,000.00 ரூபா பெறுமதியான 53 மருத்துவக் காலணிகள் படைவீரர்களுக்கு வழங்கப்பட்டன.


தொ.இ.	மாவட்டம்	பயனாளிகளின் எண்ணிக்கை
1	கொழும்பு	4
2	கம்பஹா	6
3	களுத்துறை	3
4	மாத்தறை	2
5	அம்பாந்தோட்டை	2
6	கண்டி	3
7	மாத்தளை	2
8	நுவரெலியா	6
9	குருநாகல்	8
10	அனுராதபுரம்	1
11	பொலன்னறுவை	5
12	பதுளை	2
13	மொணராகலை	2
14	இரத்தினபுரி	2
15	கேகாலை	3
16	அம்பாறை	1
17	திருகோணமலை	1



1.2.12. செயற்கைக் கரங்கள் வழங்குதல்

2021 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் மூலம் 524,000.00 ரூபா பெறுமதியான முழங்கைக்குக் கீழே மின்சாரத்தினால் செயற்படும் செயற்கைக் கரங்கள் வழங்கப்பட்டன.

தொ.இ.	மாவட்டம்	மின்சாரத்தினால் செயற்படும் செயற்கைக் கரங்கள்	சாதாரண செயற்கைக் கரங்கள் முழங்கைக்குக் கீழ்	சாதாரண செயற்கைக் கரங்கள் முழங்கைக்குக் மேல்
1	கொழும்பு	1	-	-
2	கம்பஹா	1	1	1
3	காலி	-	-	2
4	மாத்தறை	2	1	-
5	கண்டி	4	2	
6	நுவரெலியா	2	-	-
7	குருநாகல்	3	2	2
8	புத்தளம்	-	1	-
9	அனுராதபுரம்	3	1	-
10	பொலன்னறுவை	1	-	-
11	இரத்தினபுரி	1	-	-
12	கேகாலை	1	-	1


1
1 1 1
2 2 1
4 2
2
3 2 2
1
3 1
1
1
1 1
கொழும்பு
கம்பஹா
காலி
மாத்தறை
கண்டி
நுவரெலியா
குருநாகல்
புத்தளம்
அனுராதபுரம்
பொலன்னறுவை
இரத்தினபுரி
கேகாலை
மின்சாரத்தினால் செயற்படும் செயற்கைக் கரங்கள்
சாதாரண செயற்கைக் கரங்கள் முழங்கைக்குக் கீழ்
சாதாரண செயற்கைக் கரங்கள் முழங்கைக்குக் மேல்










1.2.13. ஜெல் காலுறைகள் மற்றும் ஜெல் லைனர் வழங்குதல்

தொ.இ.	மாவட்டம்	ஜெல் காலுறைகள்	ஜெல் லைனர்
1	கொழும்பு	6	-
2	கம்பஹா	5	-
3	களுத்துறை	5	-
4	காலி	1	-
5	மாத்தறை	3	-
6	அம்பாந்தோட்டை	8	-
7	கண்டி	4	-
8	மாத்தளை	4	-
9	குருநாகல்	15	1
10	அனுராதபுரம்	1	1
11	பொலன்னறுவை	1	-
12	பதுளை	2	-
13	மொணராகலை	3	-
14	இரத்தினபுரி	3	1
15	கேகாலை	8	-



1.3. நன்கொடைகள் மூலம் மின்சார சார்ஜ் செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள் வழங்குதல்

பாரம்பரியமான புனர்வாழ்வு முறைக்கு அப்பால் சென்று படைவீரருக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் சமூக செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான போக்குவரத்து வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கு மற்றும் சமூக பங்கேற்புக்குள்ள தடைகளைத் தவிர்ப்பதற்கு உதவும் புதிய புனர்வாழ்வு முறையாக கௌரவ தலைவர் அவர்களின் எண்ணக்கருவின் அடிப்படையில் மின்சார மோட்டார் சைக்கிள்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. அதன் முதற் கட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டில் ஐந்து படைவீரர்களுக்கு மின்சார சார்ஜ் செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் தொடர்ச்சியாக பிரபல எழுத்தாளரும் வங்கியியலாளருமான "அமரணீய சொல்தாதுவன் 32" நூலின் ஆசிரியர் திரு.பிரசாத் பொல்வத்தை அவர்களினால் படைவீரர்களின் பொருட்டு மேற்கொள்ளப்படும் நலன்புரி திட்டங்கள் மேலும் ஒரு படி முன்னேறி அவயவங்களை இழந்த படைவீரர் ஒருவருக்குத் தேவையான புதிய மின்சார சார்ஜ் செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றை வழங்குவதற்காக நிதி அனுசரணை வழங்கப்பட்டது.

அதற்கமைய பொலன்னறுவை மாவட்டத்தின் ஹிங்குரக்கொடை ரணவிரு மன்றத்தின் படைவீரர் திரு.ஜீ.ஏ.எஸ்.சத்துரங்க அவர்களுக்கு மின்சார சார்ஜ் செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று வழங்கும் நிகழ்வானது திரு.பொல்வத்தை அவர்கள் உட்பட குடும்ப உறுப்பினர்களின் பங்களிப்புடன் இடம்பெற்றது.





1.4. இந்து லங்கா நட்புறவின் மூலம் படைவீரர்களுக்கு செயற்கை கரங்கள், கால்கள் வழங்கும் நடமாடும் நிகழ்ச்சித் திட்டம்

அவயவங்களை இழந்த முப்படையினர், பொலிஸ் படைவீரர்கள் மற்றும் அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் தலையீட்டில் ஜெய்பூரின் பகவத் மஹாவீர் சஹாயத்த மன்றத்தினால் இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்துடன் இணைந்ததாக 37 தினங்களாக செயற்கை கரங்கள், கால்கள் தயாரிக்கும் வேலைத்தளம் பாதுகாப்பு அமைச்சர் சமல் ராஜபக்ஷ

அவர்களினதும் இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பக்லே அவர்களினதும் தலைமையில் 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி ராகம ரணவிரு செவணவில் ஆரம்பிக்கப்பட்டது.

அவயவங்களை இழந்த படைவீரர்களினதும் நெருங்கிய உறவினர்களினதும் நலனுக்காக பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின் அடிப்படையில் ரணவிரு சேவா அதிகார சபையின் முழுமையான ஒருங்கிணைப்புடன் முப்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் 37 நாட்கள் ராகம ரணவிரு செவண – இராணுவ புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது. இந்த செயற்கை கரங்கள் மற்றும் கால்களை தயாரிக்கும் வேலைத்தளத்தின் மூலம் அவயவங்களை இழந்த முப்படையினர், பொலிஸ் படைவீரர்கள் மற்றும் அவர்களின் நெருங்கிய உறவினர்கள் 494 பேருக்கு 499 செயற்கை கால்கள் மற்றும் 10 செயற்கை கரங்கள் தயாரித்து வழங்கப்பட்டன.

தொ.இ.	விபரம்		பயனாளிகளின் எண்ணிக்கை	செயற்கை கால்களின் எண்ணிக்கை	செயற்கை கரங்களின் எண்ணிக்கை
1	சேவை	இராணுவம்	285	293	2
		கடற்படை	17	17	
		விமானப்படை	33	32	1
		பொலிஸ்/விசேட படையணி	73	72	3
		சிவில் பாதுகாப்பு திணைக்களம்	7	7	
2	சிவில்	படைவீரர்களினது நெருங்கிய உறவினர்கள்	43	42	4
		சமூக சேவைகள் திணைக்களம்	36	36	
மொத்தம்			**494**	**499**	**10**

இந்த வேலைத்தளத்தின் நடவடிக்கைகளுக்காக வருகை தந்த ஜெய்பூரின் பகவத் மஹாவீர் சஹாயத்த மன்றத்தைச் (ஜெயபூர் பூட்ஸ்) சார்ந்த ஏழு இந்தியப் பிரதிநிதிகளின் சேவையைப் பாராட்டி விசேட நினைவுச் சின்னம் வழங்கும் நிகழ்வும் ராகம ரணவிரு செவணவில் நடைபெற்றது. ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவர் ஜெனரல் நந்தன சேனாதீர அவர்களின் (ஓய்வுநிலை)அழைப்பின் பேரில் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன அவர்களின் (ஓய்வுநிலை) தலைமையில் இந்தியப் பிரதிநிதிகளின் சேவையைப் பாராட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன் ஊடாக படைவீரர்களைப் போன்றே விசேட தேவையுடைய சிவில் சமூகத்தின் மக்களுக்கும் கரங்கள், கால்களைத் தயாரித்து வழங்குவதற்காக ஒரு நாள் சேவை மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் விசேட விருந்தினராக பாதுகாப்பு பதவிநிலை பிரதானி மற்றும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அவர்கள் கலந்து கொண்டார். இதன் போது ரணவிரு சேவா அதிகார சபையின் உப தலைவர் திருமதி. சோனியா கோட்டேகொட, பணிப்பாளர், ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கித்சிறி ஏக்கநாயக்க மற்றும் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர், கெப்டன் விகாஷ் சூட்,

முப்படை, பொலிஸ் மற்றும் பாதுகாப்பு திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் உட்பட படைவீரர்களின் குடும்ப அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.
















ஜெய்பூர் செயற்கைக் கரங்கள் மற்றும் கால்கள் தயாரிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் விசேட நிகழ்வுகள்

1.5. மாகாண மற்றும் மாவட்ட ரீதியாக உபகரணங்களை வழங்குதல்

மேல் மாகாணம்




கொழும்பு மாவட்டத்தின் படைவீரர்களுக்கு உபகரணங்கள் வழங்குதல்




கம்பஹா மாவட்டத்தின் படைவீரர்களுக்கு உபகரணங்கள் வழங்குதல்




களுத்துறை மாவட்டத்தின் படைவீரர்களுக்கு உபகரணங்கள் வழங்குதல்

வடமேல் மாகாணம்




குருநாகல் மாவட்டத்தின் படைவீரர்களுக்கு உபகரணங்கள் வழங்குதல்





புத்தளம் மாவட்டத்தின் படைவீரர்களுக்கு உபகரணங்கள் வழங்குதல்

வடமத்திய மாகாணம்




அனுராதபுர மாவட்டத்தின் படைவீரர்களுக்கு உபகரணங்கள் வழங்குதல்




பொலன்னறுவை மாவட்டத்தின் படைவீரர்களுக்கு உபகரணங்கள் வழங்குதல்

ஊவா மாகாணம்




பதுளை மாவட்டத்தின் படைவீரர்களுக்கு உபகரணங்கள் வழங்குதல்




மொணராகலை மாவட்டத்தின் படைவீரர்களுக்கு உபகரணங்கள் வழங்குதல்

சப்பிரகமுவ மாகாணம்




இரத்தினபுரி மாவட்டத்தின் படைவீரர்களுக்கு உபகரணங்கள் வழங்குதல்




கிழக்கு மாகாணம்





திருகோணமலை மாவட்டத்தின் படைவீரர்களுக்கு உபகரணங்கள் வழங்குதல்





அம்பாறை மாவட்டத்தின் படைவீரர்களுக்கு உபகரணங்கள் வழங்குதல்

தென் மாகாணம்





மாத்தறை மாவட்டத்தின் படைவீரர்களுக்கு உபகரணங்கள் வழங்குதல்




அம்பாந்தோட்டை மாவட்டத்தின் படைவீரர்களுக்கு உபகரணங்கள் வழங்குதல்




காலி மாவட்டத்தின் படைவீரர்களுக்கு உபகரணங்கள் வழங்குதல்

மத்திய மாகாணம்




மாத்தளை மாவட்டத்தின் படைவீரர்களுக்கு உபகரணங்கள் வழங்குதல்




கண்டி மாவட்டத்தின் படைவீரர்களுக்கு உபகரணங்கள் வழங்குதல்





நுவரெலியா மாவட்டத்தின் படைவீரர்களுக்கு உபகரணங்கள் வழங்குதல்

02

அவயவங்களை இழந்த படைவீரர்களது வீடுகளுக்கான துப்பரவு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்

2.1. அறிமுகம்

யுத்த செயற்பாட்டு காரணங்களின் அடிப்படையில் தமது உடல் உறுப்புக்களைத் தியாகம் செய்த அவயவங்களை இழந்த படைவீரர்களை உடல் மற்றும் உள ரீதியாக வலுப்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதலானது ரணவிரு சேவா அதிகார சபையின் பிரதான பணியாகும்.

அங்கவீனமுற்ற படைவீரரின் அங்கவீனத்திற்குப் பொருந்தும் மற்றும் படைவீரர்களின் பயன்பாட்டிற்குப் பொருந்தும் வகையில் சுகாதார வசதிகள் அபிவிருத்தியடையவில்லை என்பது கள ஆய்வுகளின் போது இனங் காணப்பட்டுள்ளது. நாளாந்தம் சாதாரண கழிவறை வசதிகளைப் பயன்படுத்துவதன் காரணமாக படைவீரரின் உடல் பலவீனத்திற்கு எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதற்கமைய அங்கவீனமுற்ற படைவீரர்களின் வீட்டில் காணப்படும் கழிவறை வசதிகளை படைவீரரின் தற்போதைய அங்கவீனத்திற்குப் பொருந்தும் வகையில் கைப்பிடியுடன், சக்கர நாற்காலியில் பாதுகாப்பாக இருக்கும் வகையில் தயாரிப்பதற்கு நிலவும் தேவைப்பாடுகளைத் துரிதமாக இனங்கண்டு அந்த வசதிகளுடன் கூடிய குளியலறையை நிர்மாணித்து வழங்குவது இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதன் பொருட்டு அங்கவீனமுற்ற படைவீரர்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கு அங்கவீனத்திற்குப் பொருந்தும் வகையில் சுகாதாரமான முறையில் குளியலறையை நிர்மாணிப்பதற்கு இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

யுத்த செயற்பாட்டின் போது அங்கவீனமுற்ற படைவீரர்களுக்குத் தற்போது காணப்படும் சுகாதார வசதிகளை தமது அங்கவீனத்திற்குப் பொருந்தும் வகையில் கொமட் வசதிகளுடன் அங்கவீனத்திற்குப் பொருந்தும் உதவி உபகரணங்கள் பொருத்தப்பட்ட குளியலறையாக நிர்மாணிப்பதற்கு ரூ.100,000.00 நிதியுதவியும், 10 வருடங்களுக்கு முன்னர் ரணவிரு சேவா அதிகார சபையினால் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கு நிதியுதவிகள் வழங்கப்பட்ட படைவீரர்களுக்கு புதுப்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ரூ.50,000.00 நிதியுதவியும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன.

சுகாதார உதவித் தொகை வழங்குவதற்கென 2022 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படாததோடு, 2022 ஆம் ஆண்டில் 195 படைவீரர்கள் உதவிகளைக் கோரியுள்ளனர். அவயவங்களை இழந்த படைவீரர்கள் வயோதிப நிலையை அடைதல் மற்றும் பல்வேறு தொற்றா நோய்கள் மற்றும் திடீர் விபத்துகளுக்கு உள்ளாவதன் காரணமாக தற்போதைய உடல் செயற்பாட்டுத் திறனானது ஓய்வு பெறுகையில் இருந்த அங்கவீன நிலையை விடவும்

முன்னேற்றமடைந்துள்ளமையை இனங் காணலாம். இந்தப் படைவீரர்களை இனங்கண்டு இந்த வசதிகளைத் துரிதமாக வழங்குதல் வேண்டும் என்பதோடு, இந்த நிதியுதவியை வழங்குவதற்கு நிதி ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாத காரணத்தினால் 2022 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தின் பணிகளுக்கு இடையூறு ஏற்பட்டது.

2.2 பலன்களை வழங்கும் முறை

மாவட்ட மட்டத்தில் விண்ணப்பப் படிவங்களை வழங்குதல் → விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக குறைபாடுகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் கோவையைப் பூர்த்தி செய்தல் → அளவுகோல்களின் அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களைக் குழுவிடம் சமர்ப்பித்தல் → குழுவின் பரிந்துரையைப் பெற்ற விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக படைவீரரின் கணக்கிற்குப் பணம் வழங்குதல் → சுகாதார வசதிகளின் முன்னேற்றம் குறித்த பின்னூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்









03

விளையாட்டு பிரிவு

3.1. கருத்திட்ட அறிமுகம்

அவயவங்களை இழந்த படைவீரர்களை உடல் மற்றும் உள ரீதியாக வலுப்படுத்துவதற்கு அவர்களை விளையாட்டில் ஈடுபடுத்தி அவர்களது விளையாட்டுத் திறன்களை மேம்படுத்துவதைப் போன்றே படைவீரர்களின் பிள்ளைகளது விளையாட்டுத் திறன்களை மேம்படுத்துவதற்கு உதவுதலானது விளையாட்டு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

தெரிவு செய்யப்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு செயலமர்வுகள்/பயிற்சி அமர்வுகள் நடாத்துதல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றச் செய்து வெற்றி பெறுவதற்கு ஊக்கமளித்தல் மற்றும் விளையாட்டு வீரர்களுக்குத் தேவையான ஊக்கப் பான வகைகள், ஆடைகள், பாதணிகள் போன்றவை மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்கி விளையாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் விளையாட்டுப் பிரிவு மூலம் வழங்கப்படுகின்றன.

3.2. ரணவிரு சேவா அதிகாரசபையின் விளையாட்டுக் குழு

தொ.இ.	விளையாட்டு வீரரின் பெயர்	பங்கு கொள்ளும் விளையாட்டு	விளையாட்டு வகைப்பாடு	அங்கவீன நிலை/வகை
1	வை.பி.அனில் பிரசன்ன ஜயலத்	தடகள	T/42/F42	வலது காலை முழங்காலிலிருந்து மடிக்க முடியாமை
2	ஓ.ஏ.புஷ்பகுமார	தடகள	F/T 44	இடது காலின் முழங்காலுக்குக் கீழ் துண்டிக் கப்பட்டுள்ளமை
3	ஏ.எம்.ஏ.அத்தநாயக்க	தடகள	F46/47	வலது கையை முழங்கையிலிருந்து மடிக்க முடியாமை
4	டீ.பர்னாந்து	பேட்மிண்டன்	SU 5	இடது கை முழங்கையிலிருந்து செயலிழந்துள்ளமை
5	ஜீ.ஆர்.சந்திமால்	பேட்மிண்டன்	SL 3	இடது கால் கணுக்காலுக்கு முன்பகுதி துண்டிக் கப்பட்டுள்ளமை
6	எம்.கே.ஏ.எஸ்.பெரேரா	பேட்மிண்டன்	SL 4	இடது காலின் முழங்காலுக்குக் கீழ் துண்டிக் கப்பட்டுள்ளமை
7	எச்.ரீ.ஜீ.கிரிஷாந்த	பேட்மிண்டன்	SU 5	இடது கை மணிக்கட்டுக்குக் கீழ் செயலிழந்துள்ளமை
8	யூ.என்.டீ.குமாரசிறி	நீச்சல்	S 9	வலது காலின் முழங்காலுக்குக் கீழ் துண்டிக் கப்பட்டுள்ளமை
9	ஆர்.டீ.ஏ.எஸ்.எல்.திசாநாயக்க	நீச்சல்	S 8	வலது கையின் முழங்கைக்குக் கீழ்

				செயலிழந்துள்ளமை
10	டப்ளியூ.டீ.ஆர்.சீ.மெண்டிஸ்	நீச்சல்	S 10	இடது காலின் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டுள்ளமை
11	ரீ.எம்.எம்.பி.எம்.பண்டார	அம்பெய்தல்	A 4	இடது காலின் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டுள்ளமை
12	கே.ஓ.பி.ஏ.நீல் பிரேமரத்ன	அம்பெய்தல்	A 4	இடது காலின் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டுள்ளமை
13	கே.பி.தெமட்டகே	அம்பெய்தல்	A 4	இடது காலின் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டுள்ளமை
14	டீ.ரீ.ரீ.அபேசிங்ஹ	டேபிள் டென்னிஸ்	A 68	இடது கை முழங்கைக்குக் கீழ் துண்டிக்கப்பட்டுள்ளமை
15	டப்ளியூ.ஏ.ஏ.உதய புஷ்ப குமார	கரப்பந்து	A 4	வலது கால் கணுக்காலுக்கு கீழ் துண்டிக்கப்பட்டுள்ளமை
16	எம்.ஜீ.விக்கிரமரத்ன	கரப்பந்து	A 4	இடது காலின் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டுள்ளமை
17	டீ.எம்.குலசூரிய	கரப்பந்து	A 4	காலின் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டுள்ளமை
18	கே.ஆர்.ஆர்.சந்தன குமார	கரப்பந்து	A 4	இடது கால் செயலிழந்துள்ளமை
19	டீ.பி.கே.சோமசேகர	கரப்பந்து	A 4	இடது காலின் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டுள்ளமை
20	ஜீ.எல்.ஏ.எம்.குணசேகர	கரப்பந்து	A 4	இடது காலின் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டுள்ளமை
21	டப்ளியூ.எம்.ஜயவீர குமாரதுங்க	கரப்பந்து	A 4	இடது காலின் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டுள்ளமை
22	எஸ்.பி.அஜந்த பண்டார	கரப்பந்து	A 4	வலது காலின் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டுள்ளமை
23	டப்ளியூ.என்.ஜே.பர்னாந்து	காற்று ரைப்பள்	SH2	உடலின் இடுப்புக்கு கீழ் செயலிழந்துள்ளமை

3.3 விளையாட்டுப் பிரிவின் மூலம் பெற்றுக் கொண்ட வெற்றிகள்

3.3.1. இந்திய பரா மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியின் TF42 100 மீற்றர் பிரிவில் ரணவிரு சேவா அதிகாரசபைக்கு சர்வதேச வெற்றி கிட்டியமை

2022.08.02 ஆம் திகதி இந்தியாவின் பெங்களூரில் நடைபெற்ற நான்காவது இந்திய சர்வதேச பரா (para) மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் இலங்கை தேசிய அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்ட ரணவிரு சேவா அதிகாரசபையின் விளையாட்டுக் குழுவின் உறுப்பினரான படைவீரர் அனில் பிரசன்ன ஜயலத் TF42 100 மீற்றர் போட்டியை 12.95 விநாடிகளில் பூர்த்தி செய்து இரண்டாமிடத்தை வெற்றி கொண்டு வெள்ளிப் பதக்கம் பெற்றார்.





3.3.2. .தேசிய பரா மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியின் TF42 100 மீற்றர் போட்டியில் சாம்பியன்ஷிப் பெற்றுக் கொண்டமை

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் 2022.06.08 ஆம் திகதி நடாத்தப்பட்ட தேசிய பரா மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி – 2022 இல் ரணவிரு சேவா அதிகாரசபையின் விளையாட்டுக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட படைவீரர் அனில் பிரசன்ன ஜயலத் TF42 100 மீற்றர் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்று அந்தப் போட்டியின் சாம்பியன்ஷிப்பைப் பெற்றுக் கொண்டார்.





3.3.3. டேபிள் டென்னிஸ் போட்டியில் ரணவிரு சேவா அதிகாரசபைக்கு வெற்றி கிட்டியமை

2022.03.12 ஆம் திகதி விஜயபாகு காலாட்படை படையணியின் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற 2022 ஆசிய பரா டேபிள் டென்னிஸ் தெரிவுப் போட்டியில் ரணவிரு சேவா அதிகாரசபையின் டேபிள் டென்னிஸ் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தி தகைமை பெறுவதற்கான போட்டியில் பங்குபற்றிய அவயவங்களை இழந்த ப.வீ./483074 கோப்ரல் அபேசிங்ஹ டீரீ A6/8 போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டார்.





3.4. விளையாட்டு பிரிவு மூலம் மேற்கொள்ளப்பட்ட நன்கொடைகள்

3.4.1. விளையாட்டு வீரர் அனில் பிரசன்ன அவர்களுக்கு ஊக்க பானங்கள் மற்றும் வேறு தேவைப்பாடுகளை வழங்குதல்.

ரணவிரு சேவா அதிகாரசபையின் விளையாட்டுக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தி T42 /F42 100 மீற்றர் பிரிவில் போட்டியிடும் படைவீரர் அனில் பிரசன்ன ஜயலத் அவர்களுக்கு ஊக்க பானங்கள் மற்றும் விளையாட்டு ஆடைகள் ரணவிரு சேவா அதிகாரசபையில் வழங்கப்பட்டன. அனில் பிரசன்ன அவர்களின் எதிர்கால விளையாட்டு நடவடிக்கைகளுக்கான அடிப்படைத் தேவைகள் குறித்த நட்பு ரீதியான கலந்துரையாடலொன்று இதற்கு இணையாக இடம்பெற்றது.

ரணவிரு சேவா அதிகாரசபையின் தலைவர் மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர (ஓய்வுநிலை), ரணவிரு சேவா அதிகாரசபையின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கித்சிறி ஏக்கநாயக்க (ஓய்வுநிலை), விளையாட்டுப் பிரிவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரான மேஜர் ஹினிதுமகே சந்தன மற்றும் விளையாட்டு வீரர் அனில் பிரசன்ன ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.




3.4.2. டீ.எஸ்.ஐ. கூட்டு வியாபாரத்தின் ஊடாக விளையாட்டு அனுசரணை வழங்குதல்.

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெறவுள்ள தேசிய மெய்வல்லுனர் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ள ரணவிரு சேவா அதிகாரசபையின் விளையாட்டுக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓய்வுபெற்ற சார்ஜன்ட் மேஜர் அனில் பிரசன்ன ஜயலத் அவர்களுக்குத் தேவையாகவிருந்த விளையாட்டுப் பாதணி சோடியொன்று 2022.08.05 ஆம் திகதி ரணவிரு சேவா அதிகாரசபையின் தலைவர் மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர (ஓய்வுநிலை) அவர்களின் தலைமையில் நன்கொடையாக வழங்கப்பட்டது.

ரணவிரு சேவா அதிகாரசபையின் மாபிய கெப்பகரு (பெற்றோர் பாதுகாவலர்) பிரிவின் தலைவர் திருமதி. டுலானி தேவமித்த அவர்களின் ஒருங்கிணைப்பில் டீ.எஸ்.ஐ. கூட்டு வியாபாரத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் துசித்த ராஜபக்ஷ அவர்களினால் இந்தப் பாதணி சோடிக்குத் தேவையான அனுசரணை வழங்கப்பட்டது.



3.4.3.ரணவிரு சேவா அதிகாரசபையின் நீச்சல் குழுவின் வீரர்களுக்கு ஊக்கமளித்தல்.

2022 ஆசிய பரா நீச்சல் தெரிவுப் போட்டியில் ரணவிரு சேவா அதிகாரசபையின் விளையாட்டுக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்ட விளையாட்டுக் குழுவின்

வீரர்களுக்குத் தேவையான நீச்சல் விளையாட்டு உபகரணங்கள் ரணவிரு சேவா அதிகாரசபையின் தலைவர் மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர (ஓய்வுநிலை) அவர்களின் தலைமையில் 2022.06.10 ஆம் திகதி பகிர்ந்தளிக்கப்பட்டன.

ரணவிரு சேவா அதிகாரசபையின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கித்சிறி ஏக்கநாயக்க (ஓய்வுநிலை), தலைவரின் செயலாளர் பிரிகேடியர் ரோஷன் திரிமான்ன, விளையாட்டுக் குழுவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரான மேஜர் ஹினிதுமகே சந்தன மற்றும் நீச்சல் வீரர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.




3.4.5. படைவீரர் ஒருவரின் புதல்விக்குத் தேவையான ஊக்க பானங்கள் வழங்குதல்.

1998 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி கிளிநொச்சி பிரதேசத்தில் பயங்கரவாத தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த இராணுவப் படையின் ப.வீ/408397 லா/கோப்ரல் எச்.ஏ.பெரேரா அவர்களின் புதல்வியான எச்.ஏ. தாரக்கா சந்தரேணு பெரேரா உடற் கட்டமைப்பு விளையாட்டில் ஈடுபடுவதோடு, அவரது விளையாட்டுத் தேவைகளுக்கு அனுசரணை வழங்குமாறு ரணவிரு சேவா அதிகாரசபையினால் செய்யப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க அவருக்குத் தேவையான ஊக்க பானங்கள் 2022.08.16 ஆம் திகதி வழங்கப்பட்டன.

ரணவிரு சேவா அதிகாரசபையின் தலைவர் மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர (ஓய்வுநிலை), ரணவிரு சேவா அதிகாரசபையின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கித்சிறி ஏக்கநாயக்க (ஓய்வுநிலை), விளையாட்டுப் பிரிவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரான மேஜர் ஹினிதுமகே சந்தன மற்றும் களுத்துறை மாவட்டத்தின் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் செல்வி.கயேஷி லக்ஷிக்கா ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.





3.4.6. டேபிள் டென்னிஸ் வீரரான படைவீரர் டீ.ரீ.ரீ.அபேசிங்ஹ அவர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை நன்கொடையாக வழங்குதல்.

ரணவிரு சேவா அதிகாரசபையின் விளையாட்டுக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் டேபிள்

டென்னிஸ் வீரரான படைவீரர் டீ.ரீ.ரீ.அபேசிங்ஹ அவர்களுக்கு டேபிள் டென்னிஸ் விளையாட்டுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் ரணவிரு சேவா அதிகாரசபையின் தலைவர் மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர (ஓய்வுநிலை) அவர்களின் தலைமையில் 2022.03.09 ஆம் திகதி ரணவிரு சேவா அதிகாரசபையில் வழங்கப்பட்டன. ரணவிரு சேவா அதிகாரசபையைப் பிரதிநிதித்துவப்படுத்தி A6/8 பிரிவில் பரா டேபிள் டென்னிஸ் விளையாட்டில் ஈடுபடும் அவயவங்களை இழந்த படைவீரர் டீ.ரீ.ரீ. அபேசிங்ஹ அவர்களின் திறன்களை விருத்தி செய்து சிறந்த மன வலுவுடன் போட்டியிடுவதற்குத் தேவையான சூழலை உருவாக்கும் நோக்கில் இந்த விளையாட்டு உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

ரணவிரு சேவா அதிகாரசபையின் தலைவர் மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர (ஓய்வுநிலை), ரணவிரு சேவா அதிகாரசபையின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கித்சிறி ஏக்கநாயக்க (ஓய்வுநிலை), விளையாட்டுப் பிரிவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரான மேஜர் ஹினிதுமகே சந்தன மற்றும் விளையாட்டு வீரர் டீ.ரீ.ரீ. அபேசிங்ஹ ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.





3.5. 2022 ஆம் ஆண்டில் விளையாட்டு மற்றும் ஊக்க பானங்கள் வழங்குவதற்கான செலவினங்களை மேற்கொள்ளல்

தொ.இ.	பலன்கள்	மாவட்டம்	பயனாளிகளின் எண்ணிக்கை	செலவினை மேற்கொள்ளல் (ரூ)
1	விளையாட்டு உபகரணங்கள் / ஊக்க பானங்கள் கொள்வனவு செய்தல்	அம்பாறை	1	18,8000.00
2		கொழும்பு	1	5,160.00
3		களுத்துறை	1	72,000.00
4		காலி	2	33,000.00
மொத்தம்			**5**	**298,360.00**





04

வீடமைப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் நலன்புரி மற்றும் தொழில் அபிவிருத்தி பெற்றோர் பாதுகாப்பு (மாபிய சுரகும்) கடன் பிரிவு

4.1. விரு சுமிதுரு வீட்டுத் திட்டம்

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் ரணவிரு சேவா அதிகாரசபை மற்றும் தேசிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு ஒன்றிணைந்து நடைமுறைப்படுத்தும் "விரு சுமிதுரு" தேசிய வீடமைப்புத் திட்டமானது 2017 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 2022 ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தப்படவிருந்த கருத்திட்டமாகும். செயற்பாட்டுக் கடமையின் போது பயங்கரவாத தாக்குதல்களுக்கு இலக்காகி உயிர் நீத்த படைவீரர்களின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் செயற்பாட்டுக் கடமையின் போது பயங்கரவாத தாக்குதல்களுக்கு இலக்காகி அங்கவீன நிலைமைக்கு உள்ளாகி அதன் காரணமாக ஓய்வு பெற்ற ஊனமுற்ற ஓய்வுநிலை படைவீரர்களின் வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இந்தக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

முப்படை மற்றும் பொலிஸ் ஆகிய ஆயுதப் படைகளின் செயற்பாட்டுப் பிரதேசங்களில் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில் பயங்கரவாத தாக்குதல்களுக்கு இலக்காகி உயிர் நீத்த படைவீரர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு மற்றும் செயற்பாட்டுப் பிரதேசங்களில் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில் பயங்கரவாத தாக்குதல்களுக்கு இலக்காகி அங்கவீன நிலைமைக்கு உள்ளாகி அதன் காரணமாக ஓய்வு பெற்ற ஊனமுற்ற ஓய்வுநிலை படைவீரர்களின் வீடொன்றிற்கான தேவையைப் பூர்த்தி செய்வதற்கு உதவி வழங்கல், படைவீரர்களினால் மேற்கொள்ளப்பட்ட சேவைக்கு மதிப்பளித்தல் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு அரசாங்கத்தின் மூலமும் மக்கள் மூலமும் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் படைவீரர்களின் வீடுகளை நிர்மாணிக்கும் மற்றும் பூர்த்தியாக்கும் சிக்கல் குறித்து அரசாங்கம் தலையிடுவதன் மூலம் நிலைபேறான தேசிய தீர்வொன்றைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதன் பொருட்டு விரு சுமிதுரு வீடமைப்புத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

விரு சுமிதுரு வீடமைப்புத் திட்டத்தின் மூலம் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை 6 வருடங்களில் முழுமையான 450 வீடுகள் மற்றும் பகுதியளவிலான 4000 வீடுகளை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதோடு, கருத்திட்டத்தின் மொத்த ஆகுசெலவு 3192 மில்லியன் ரூபாவாகும். முழுமையான வீடுகளுக்கு 1,200,000.00 ரூபாவுடன் உழைப்பும், பகுதியளவிலான வீடுகளுக்கு 500,000.00 ரூபாவும் வழங்கப்படுகிறது. வீடொன்றிற்கான தேவையுடைய படைவீரர்கள் ரணவிரு சேவா அதிகார சபையினால் தெரிவு செய்யப்படுவதோடு, தேசிய வீடமைப்பு அதிகார சபை மூலம் பயனாளிகளுக்கு நிதி வழங்கப்படுகிறது.

4.1.1. விரு சுமிதுரு வீட்டு திட்டம் தொடர்பாக ரணவிரு சேவா அதிகாரசபையின் பணிகள்

விரு சுமிதுரு வீடமைப்புத் திட்டமானது ரணவிரு சேவா அதிகார சபை மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபை இணைந்து நடைமுறைப்படுத்தும் ஒரு கருத்திட்டமாகும். பொருத்தமான பயனாளிகளைத் தெரிவு செய்து வீடமைப்பு அதிகார சபையிடம் முன்வைத்தல் ரணவிரு சேவா அதிகார சபைக்குரிய பிரதான கடமையாகும்.

பிரதேச மட்டத்தில் பயனாளிகள் தெரிவு செய்யப்படுவதோடு, ஆவணங்கள் முழுமையாக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களுக்கு ரணவிரு மன்ற உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தரின் பரிந்துரை, பிரதேச செயலாளரின் பரிந்துரை மற்றும் மாவட்ட மற்றும் மாகாண உத்தியோகத்தர்களின் பரிந்துரையைப் பெற்றுக் கொடுத்ததன் பின்னர் கருத்திட்டம் முன்வைக்கப்படும். முழுமையாக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ரணவிரு சேவா அதிகார சபையின் பணிப்பாளரின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவிடம் சமர்ப்பித்து குழுவின் பரிந்துரையைப் பெற்றுக் கொண்டு இசைவு அறிக்கையைப் பெறுவதற்காக முப்படை மற்றும் பொலிசிற்கு அனுப்பி வைக்கப்படும். இசைவு அறிக்கை கிடைத்த பின்னர் தலைவரின் அங்கீகாரத்தின் பின்னர் உதவித் தொகையை வழங்குவதற்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையிடம் பெயர்ப்பட்டியலுடன் சமர்ப்பிக்கப்படும்.


தேசிய வீடமைப்பு அதிகார சபை மூலம் 4 தவணைகளில் பயனாளிகளுக்குக் கொடுப்பனவு செய்யப்படும். ரணவிரு சேவா அதிகார சபையின் தலையீட்டுடன் முப்படையினால் முழுமையான வீடுகளுக்கான உழைப்பு வழங்கப்படுவதோடு, தேவையேற்படின் திட்டத்தை மாற்றுவதற்கும் அளவுகோல்களுக்கு உட்பட்டு அனுமதி வழங்கப்படும்.

4.1.2. 2022 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் பட்டியல்

தொ.இ.	வருடம்	ஆவணம்	முழுமையான வீடுகள்	பகுதியளவிலான வீடுகள்	மொத்தம்
1	2022	14 ஆவது ஆவணம்	12	155	167
2		15 ஆவது ஆவணம்	11	149	160
	மொத்தம்		**23**	**304**	**327**


4.1.3 விரு சுமிதுரு வீட்டுத் திட்டத்தின் மூலம் 2017 ஆம் வருடம் தொடக்கம் 2022 ஆம் வருடம் வரை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கப்பட்ட முழுமையான மற்றும் பகுதியளவிலான வீடுகளின் எண்ணிக்கை

தொ.இ.	வருடம்	முழுமையான வீடுகள்	பகுதியளவிலான வீடுகள்
1	2017	203	52
2	2018	106	1162
3	2019	25	741
4	2020	12	499
5	2021	29	121
6	2022	23	304
மொத்தம்		398	2879




4.1.4. 2022 ஆம் வருடத்தினுள் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கப்பட்ட பயனாளிகள் (மாவட்ட ரீதியாக)

தொ.இ.	வருடம்	முழுமையான வீடுகள்	பகுதியளவிலான வீடுகள்	மொத்தம்
1	கொழும்பு	2	3	5
2	களுத்துறை	3	3	6
3	கம்பஹா	-	1	1
4	கண்டி	-	10	10
5	மாத்தளை	3	37	40
6	நுவரெலியா	-	4	4
7	புத்தளம்	2	-	2
8	குருநாகல்	3	15	18
9	அனுராதபுரம்	1	75	76
10	பொலன்னறுவை	-	2	2
11	இரத்தினபுரி	-	17	17
12	கேகாலை	-	14	14
13	மாத்தறை	1	8	9
14	காலி	-	24	24
15	அம்பாந்தோட்டை	1	29	30
16	பதுளை	-	4	4
17	மொணராகலை	1	15	16
18	அம்பாறை	5	28	33
19	திருகோணமலை	1	14	15
20	வவுனியா	-	1	1
	மொத்தம்	**23**	**304**	**327**



4.1.5. 2022 ஆம் வருடத்தினுள் விரு சுமிதுரு வீட்டுத் திட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை (சேவைகளின் பிரகாரம்)

தொ.இ.	சேவை	முழுமையான வீடுகள்	பகுதியளவிலான வீடுகள்	மொத்தம்
1	இராணுவம்	18	266	284
2	கடற்படை	1	10	11
3	விமானப் படை	-	2	2
4	பொலிஸ்	4	26	30
5	**மொத்தம்**	**23**	**304**	**327**



4.1.5. விரு சுமிதுரு வீட்டுத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் புகைப்படங்கள்










4.2. "விரு சஹன" வீட்டுக் கடன் நிகழ்ச்சி திட்டம்

ரணவிரு மன்றங்களில் உள்ள படைவீரர்களின் குடும்ப உறுப்பினர்களின் வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்கான கனவை நனவாக்கும் நோக்கில் சலுகை அடிப்படையில் சேவைக் கட்டணம் மாத்திரம் அறவிட்டு ரணவிரு சேவா அதிகார சபையினால் "விரு சஹன வீட்டுக் கடன் நிகழ்ச்சி திட்டம்" நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பயனாளிகளின் தேவைக்கேற்ப புதிய வீடு ஒன்றை நிர்மாணித்தல், வீட்டு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் வீட்டைப் புதுப்பிப்பதற்கு விரு சஹன வீட்டுக் கடன் நிகழ்ச்சி திட்டம் மூலம் ஒருவருக்கு உச்ச பட்சம் 1,000,000.00 ரூபா கடன் தொகை வழங்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஏற்பாடுகள் பற்றாக்குறை காரணமாக ஆகக் கூடிய கடன் தொகையானது 500,000.00 வரை குறைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 2022 ஆம் ஆண்டில் 77 ஊனமுற்ற படைவீரர்கள் மற்றும் படைவீரர்களின் உறவினர்கள் 33 பேர் என்றவாறு 110 பயனாளிகளுக்கு வீட்டுக் கடன் வழங்கி வெற்றிகரமான முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளது.


4.2.1. சேவைகளின் பிரகாரம் விரு சஹன வீட்டுக் கடன் வழங்குதல் 2022

தொ.இ.	சேவை	எண்ணிக்கை
1	இராணுவம்	100
2	கடற்படை	03
3	விமானப் படை	03
4	பொலிஸ்	04
மொத்தம்		110



4.2.2. மாகாண மற்றும் மாவட்ட ரீதியாக விரு சஹன வீட்டுக் கடன் வழங்குதல் – 2022

தொ.இ.	மாகாணம்	மாவட்டம்	கடன் தொகை					மாவட்டத்தினுள் பயனாளிகளின் எண்ணிக்கை	மாகாணத்தினுள் மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை
			200,000	300,000	350,000	400,000	500,000		
1	மேல்	கொழும்பு	-	-	-	-	9	9	24
		கம்பஹா	1	-	-	-	9	10	
		களுத்துறை	-	-	-	-	5	5	
2	மத்திய	கண்டி	-	1	-	-	2	3	18
		மாத்தளை	-	1	-	1	10	12	
		நுவரெலியா	-	1	-	-	2	3	
3	தென்	காலி	-	-	-	-	5	5	11
		மாத்தறை	-	-	-	-	5	5	
		அம்பாந்தோட்டை	-	-	1	-		1	
4	ஊவா	மொணராகலை	-	-	-	-	5	5	10
		பதுளை	-	-	-	-	5	5	
5	சப்பிரகமுவ	இரத்தினபுரி	-	-	-	-	13	13	16
		கேகாலை	-	-	-		3	3	
6	கிழக்கு	அம்பாறை	-		-	-	2	2	2
7	வட மேல்	புத்தளம்	1	-	-	-	1	2	15
		குருநாகல்	-	2	-	-	11	13	
8	வட மத்திய	அனுராதபுரம்	-	-	-	-	6	6	14
		பொலன்னறுவை	-	-	-	-	8	8	
மொத்தம்			**2**	**5**	**1**	**1**	**101**	**110**	**110**


வீட்டுக் கடன் வழங்குதல் - 2022
9
10
5
3
12
3
5
5
1
5
5
13
3
2
2
13
6
8
கொழும்பு
கம்பஹா
களுத்துறை
கண்டி
மாத்தளை
நுவரெலியா
காலி
மாத்தறை
அம்பாந்தோட்டை
மொனராகலை
புத்தளை
இரத்தினபுரி
கேகாலை
அம்பாறை
பத்தளம்
குருநாகல்
அனுராதபுரம்
பொலன்னறுவை
பயனாளிகளின் எண்ணிக்கை









4.3. ரணவிரு திரிய சுயதொழில் கடன் திட்டம்

4.3.1. நோக்கம்

நாட்டின் வளங்களை நாட்டிற்குள்ளேயே சேமித்து உள்நாட்டு தொழில் முனைவோரை வலுப்படுத்தும் பெருளாதார எண்ணக்கருவின் கீழ் ஊனமுற்ற படைவீரர்கள் மற்றும் செயற்பாட்டின் போது மரணித்த படைவீரர்களின் நெருங்கிய உறவினர்கள் மத்தியில் மனப்பான்மை ரீதியில் மாற்றத்தை ஏற்படுத்தி அதன் மூலம் திறமையான தொழில் முனைவோராக உருவாக்குவது இந்தக் கருத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

படைவீரர்களின் குடும்ப உறுப்பினர்களின் உள்ளார்ந்த திறமைகளின் அடிப்படையில், பயிற்சித் தேவைப்பாடுகளை இனங்கண்டு சுயதொழிலுக்கான ஊக்கத்தை வழங்குதல், விவசாய ஏற்றுமதிப் பயிர்ச்செயகை மற்றும் பாற் பண்ணையை அறிமுகஞ் செய்து படைவீரர்களின் குடும்ப உறுப்பினர்களின் சிக்கனத்தை விருத்தி செய்தல், சேமிப்பினை விருத்தி செய்தல் என்பவற்றின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்திற்குப் பங்களிப்பு செய்தல் முதலான நோக்கங்களை முன்னோடியாகக் கொண்டு இந்தக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

சிறிய அளவிலான நிலப் பரப்பிலும் கூட குறைந்த உற்பத்திச் செலவில் உயர் தரத்திலான தொழிநுட்ப முறைகளின் பயன்பாட்டின் மூலம் சிறந்த தரத்துடன் கூடிய அதிக விளைச்சலை அல்லது வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் புதிய முறைகள் குறித்தான அறிவை வழங்குதல், பயிற்சிக்காக அரச நிறுவனங்கள் மற்றும் நபர்களை அறிமுகஞ் செய்தல், ஏற்புடைய அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களை அறிமுகஞ் செய்து உள்நாட்டு சந்தைக்கு உற்பத்திகளை முன் வைத்தல், ஏற்றுமதிச் சந்தையை அறிமுகஞ் செய்து தமது உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதிக்காக முன் வைத்தல் என்பன ரணவிரு திரிய கடன் திட்டம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன

.

4.3.2.நடைமுறைப்படுத்தும் முறை

- நாடு முழுவதும் பரந்து காணப்படும் மன்றங்கள் மூலம் மாவட்ட மற்றும் மாகாணங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் ஊடாக பயனாளிகளைத் தெரிவு செய்தல்.


- சுயதொழில் கடன் வழங்குவதற்காகத் தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு 55 வயதைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் ஆகக் குறைந்தது 03 வருட சேவைக் காலம் எதிர்காலத்தில் இருத்தல்.

- ஒருவருக்கு உச்சபட்சம் 10 இலட்சம் வரை கடன் தொகை வழங்கப்படுவதுடன், 5% வருடாந்த சலுகை வட்டி அறவிடப்படுவதைப் போன்றே கடனை அறவிடும் ஆகக் கூடிய கால எல்லை 4 வருடங்களாகும். (ஏற்பாடுகளின் பற்றாக்குறை காரணமாக 2022 ஆம் ஆண்டில் ஒருவருக்கு உச்சபட்சம் 5 இலட்சம் மாத்திரம் கடனாக வழங்கப்பட்டது.)

- கொள்கையொன்றாக இரண்டு தவணைகளில் கடன் தொகை விடுவிக்கப்படுவதுடன், இரண்டாவது தவணையை விடுவிப்பதற்கு முன்னர் முன்னேற்றம் பரிசீலிக்கப்படுவதுடன், சம்பளம் மற்றும் ஆவண பணிப்பாளர் குழுவினால் ஒரு தவணை அறவிடப்பட்டு எமக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் இரண்டாவது தவணைப் பணம் விடுவிக்கப்படும்.

4.3.3. 2022 மாவட்ட ரீதியில் திரிய கடன் வழங்குதல்

தொ.இ.	மாகாணம்	மாவட்டம்	பயனாளிகளின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை (ரூ)	மொத்தத் தொகை (ரூ)
1	மேல்	களுத்துறை	2	1,000,000.00	4,750,000.00
2		கொழும்பு	3	1,500,000.00	
3		கம்பஹா	4	2,250,000.00	
4	மத்திய	கண்டி	3	1,500,000.00	4,000,000.00
5		மாத்தளை	5	2,500,000.00	
6	தென்	காலி	2	1,000,000.00	3,500,000.00
7		மாத்தறை	2	1,000,000.00	
8		அம்பாந்தோட்டை	3	1,500,000.00	
9	ஊவா	மொணராகலை	1	500,000.00	1,500,000.00
10		பதுளை	2	1,000,000.00	
11	சப்பிரகமுவ	இரத்தினபுரி	6	3,000,000.00	4,000,000.00
12		கேகாலை	2	1,000,000.00	
13	கிழக்கு	அம்பாறை	4	2,000,000.00	2,000,000.00
14	வட மேல்	புத்தளம்	1	500,000.00	3,750,000.00
15		குருநாகல்	6	3,250,000.00	
16	வட மத்திய	அனுராதபுரம்	4	1,800,000.00	4,800,000.00
17		பொலன்னறுவை	6	3,000,000.00	
மொத்தம்			**56**	**28,300,000.00**	**28,300,000.00**





மஞ்சள் செய்கையை சுயதொழிலாக மேற்கொள்ளும் படைவீரரொருவர்



குடிநீர் போத்தல் உற்பத்தியை மேற்கொள்ளும் தொழில்முனைவோரான படைவீரரொருவர்



படைவீரரொருவரால் மேற்கொள்ளப்படும் தானிய ஆலை



படைவீரரொருவரால் மேற்கொள்ளப்படும் கொங்கிறீற் வேலைத் தளம்





4.4. படைவீரர் பெற்றோர் பாதுகாப்பு (மாபிய சுரகும்) நிகழ்ச்சி திட்டம்

செயற்பாட்டின் போது மரணித்த அல்லது காணாமற் போன திருமணமான படைவீரர்களின் பெற்றோர்களுக்கு 2007 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி முதல் படைவீரரின் சம்பளத்தில் 25% தொகை செலுத்தப்படுகிறது. எனினும், மேற்குறித்த காலப்பகுதிக்கு முன்னர் உயிரிழந்த திருமணமான படைவீரர்களின் பெற்றோர்களுக்கு எவ்விதக் கொடுப்பனவும் கிடைப்பதில்லை என்பதோடு, குறித்த பெற்றோர்களுக்கு நன்றி பாராட்டும் முகமாக அரச ஓய்வூதியம் பெறாத படைவீரர்களின் பெற்றோர்களுக்கு படைவீரர் பெற்றோர் பாதுகாப்பு (மாபிய சுரகும்) நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது.

இந்தப் பயனைப் பெற்றுக் கொள்ளும் ஒவ்வொரு பெற்றோருக்கும் ரணவிரு சேவா அதிகார சபையினால் தேசிய சேமிப்பு வங்கியில் தபால் வங்கிக் கிளை கணக்கு ஆரம்பிக்கப்படும். பெற்றோர்களுள் ஒருவர் மாத்திரம் உயிருடன் இருப்பின் மாதாந்தம் 2,250.00 வீதமும், பெற்றோர்கள் இருவரும் உயிருடன் இருப்பின் ஒருவருக்கு மாதாந்தம் 1,500.00 வீதம் 3000.00 ரூபாவும் வழங்கப்படுவதோடு, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் தபால் நிலையத்தில் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாதத்தினதும் இறுதியில் கணக்குகளுக்கு பணம் வரவு வைக்கப்படுவதோடு, கணக்கில் பணத்தை மீதம் வைக்காது ஏற்புடைய மாதத்திற்குரிய பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு பயனாளிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. கணக்கு உரிமையாளர் மரணமடைந்தால் மரணச் சான்றிதழ் மற்றும் கணக்குப் புத்தகத்தை சமர்ப்பித்ததன் பின்னர் கணக்கின் பணம் ரணவிரு சேவா அதிகார சபையின் கணக்கிற்கு வரவு வைக்கப்படும். ஏற்புடைய பயனாளி மாத்திரமே கணக்கிலிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதோடு, பெற்றோர்கள் இருவரும் உயிருடன் இருக்கையில் ஒருவர் மரணமடைந்ததாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் உயிர் வாழும் பயனாளிக்கு மாதாந்தம் செலுத்தப்படும் தொகையானது ரூ.2250 வரை அதிகரிக்கப்படும்.

4.4.1. ரூ.1500.00 வீதம் செலுத்துதல்

தொ. இ.	மாதம்	பயனாளிகளின் எண்ணிக்கை	மாதாந்தம் செலுத்தப்படும் தொகை (ரூ)	செலுத்தப்பட்ட தொகை (ரூ)	ஒவ்வொரு மாதத்திற்கும் உரிய நிலுவைத் தொகை (ரூ)	செலுத்தப்பட்ட மொத்தத் தொகை (ரூ)
1	**ஜனவரி**	**375**	**1500.00**	**562,500.00**	**0.00**	**562,500.00**
2	பெப்ரவரி	பயனாளிகள் 08 பேருக்கு 05 நிலுவைத் தவணைகள் வீதம் செலுத்தல் (40 தவணைகள்)	1500.00	-	60,000.00	60,000.00
		375	1500.00	562,500.00	0.00	562,500.00
3	மார்ச்	289	1500.00	433,500.00	0.00	433,500.00
4	ஏப்பிரல்	295	1500.00	442,500.00	9,000.00	451,500.00
5	மே	301	1500.00	451,500.00	42,000.00	493,500.00
6	ஜூன்	295	1500.00	442,500.00	0.00	442,500.00
7	ஜூலை	295	1500.00	442,500.00	0.00	442,500.00
8	ஆகஸ்ட்	301	1500.00	451,500.00	45,000.00	496,500.00
9	செப்டெம்பர்	306	1500.00	459,000.00	0.00	459,000.00
10	ஒக்டோபர்	310	1500.00	465,000.00	0.00	465,000.00
11	நவம்பர்	312	1500.00	468,000.00	0.00	468,000.00
12	டிசம்பர்	305	1500.00	457,500.00	0.00	457,500.00
மொத்தம்				**5,698,500.00**	**96,000.00**	**5,794,500.00**

4.4.2. ரூ. 2250.00 வீதம் செலுத்துதல்

தொ .இ.	மாதம்	பயனாளிகளின் எண்ணிக்கை	மாதாந்தம் செலுத்தப்படும் தொகை (ரூ)	செலுத்தப்பட்ட தொகை (ரூ)	ஒவ்வொரு மாதத்திற்கும் உரிய நிலுவைத் தொகை (ரூ)	செலுத்தப்பட்ட மொத்தத் தொகை (ரூ)
1	ஜனவரி	422	2250	949,500.00	-	949,500.00
2	பெப்ரவரி	18x5 பயனாளிகள் 18 பேருக்கு 05 நிலுவைத் தவணைகள் வீதம் செலுத்தல் (90 தவணைகள்)	2250	-	202,500.00	202,500.00
		2 புதிய கணக்குகள் 02 ஆரம்பித்தல்	2250	4,500.00	-	4,500.00

		426	2250	958,500.00	-	958,500.00
3	மார்ச்	357	2250	803,250.00	-	803,250.00
4	ஏப்பிரல்	361	2250	812,250.00	24,750.00	837,000.00
5	மே	362	2250	814,500.00	29,250.00	843,750.00
6	ஜூன்	370	2250	832,500.00	6,750.00	839,250.00
7	ஜூலை	375	2250	843,750.00	45,000.00	888,750.00
8	ஆகஸ்ட்	381	2250	857,250.00	67,500.00	924,750.00
9	செப்டெம்பர்	378	2250	850,500.00	-	850,500.00
10	ஒக்டோபர்	384	2250	864,000.00	-	864,000.00
11	நவம்பர்	383	2250	861,750.00	-	861,750.00
12	டிசம்பர்	390	2250	877,500.00	-	877,500.00
மொத்தம்				**10,532,250.00**	**10,532,250.00**	**10,705,500.00**

4.4.3. மொத்தத் தொகையை வரவு வைத்தல் – 2022 ஆம் ஆண்டு

தொ.இ.	மாதம்	பயனாளிகளின் எண்ணிக்கை	ரூ.1500 வீதம் பயன்கள் செலுத்தப்பட்ட தொகை	ரூ.2250 வீதம் பயன்கள் செலுத்தப்பட்ட தொகை	மாதாந்தம் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை (ரூ)
1	ஜனவரி	797	562,500.00	949,500.00	1,512,000.00
2	பெப்ரவரி	801	60,000.00	202,500.00	262,500.00
			-	4,500.00	4,500.00
			562,500.00	958,500.00	1,521,000.00
3	மார்ச்	646	433,500.00	803,250.00	1,236,750.00
4	ஏப்பிரல்	656	451,500.00	837,000.00	1,288,500.00
5	மே	663	493,500.00	843,750.00	1,337,250.00
6	ஜூன்	665	442,500.00	839,250.00	1,281,750.00
7	ஜூலை	670	442,500.00	888,750.00	1,331,250.00
8	ஆகஸ்ட்	682	496,500.00	924,750.00	1,421,250.00
9	செப்டெம்பர்	684	459,000.00	850,500.00	1,309,500.00
10	ஒக்டோபர்	694	465,000.00	864,000.00	1,329,000.00
11	நவம்பர்	695	468,000.00	861,750.00	1,329,750.00
12	டிசம்பர்	695	457,500.00	877,500.00	1,335,000.00
மொத்தம்			5,794,500.00	10,705,500.00	16,500,000.00

4.5. காணிப் பிரிவு

4.5.1. கருத்திட்ட அறிமுகம்

படைவீரர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு நலன்புரி நடவடிக்கைகளை நிறைவேற்றுகையில் மற்றும் அவர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் கோரிக்கைகளைப் பரிசீலிக்கையில் காணி இல்லாத காரணத்தினால் நிரந்தர வதிவிடத்தை அமைத்துக் கொள்வதில் சில சிரமங்களுக்கு முகங் கொடுக்கின்றமையை இனங் காணலாம். வீடுகளை நிர்மாணிப்பதற்குக் கடன் மற்றும் உதவிகளை வழங்குவதற்காகப் பல்வேறு கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் வீடுகளை நிர்மாணிப்பதற்குக் காணி இல்லாத காரணத்தினால் இந்த சிக்கல் எழுகிறது. பெரும்பாலானவர்கள் கூட்டுக் காணிகளில் தற்காலிக வதிவிடங்களை அமைத்துக் கொண்டிருத்தல், அனுமதியற்ற காணிகளில் வதிதல், உரிமம் அல்லது உறுதிப் பத்திரங்கள் இன்றி காணிகளைக் கையகப்படுத்தியிருத்தல் போன்ற விடயங்களின் அடிப்படையில் படைவீரர்களுக்கு வீடுகளை வழங்குகையில் காணி குறித்த சிக்கலான நிலைகள் தோன்றியுள்ளன.

அதற்கான தீர்வாக ரணவிரு சேவா அதிகார சபையின் காணித் திட்டத்தின் மூலம் படைவீரர்களுக்கு காணிகளை உரித்தாக்கி நிரந்தர வதிவிடத்திற்கான தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு மத்தியஸ்தராக செயற்படுகிறது. வதிவதற்கு சட்ட ரீதியான காணியொன்று இல்லாத படைவீரர்களின் குடும்ப உறுப்பினர்களுக்குக் காணி உரிமையை உறுதி செய்தல், அரசாங்க காணிகளில் வதியும் படைவீரர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு அவர்கள் வதியும் காணியின் உரிமையை உறுதி மூலம் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான உதவியை வழங்குதல் மற்றும் வதியும் காணிகளில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை ஏற்புடைய நிறுவனங்களுடன் இணைந்து தீர்ப்பதற்கு உதவுதல் போன்றன காணித் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

4.5.2. நிகழ்ச்சித் திட்டத்தின் பலன்களை வழங்கும் முறை

I. காணி வழங்குதல்

- **i.** மன்றங்கள் மூலம் கிடைக்கப்பெறும் கோரிக்கைகள் ஊடாக காணியற்ற படைவீரர்கள் மற்றும் அந்தக் குடும்பங்களை இனங் காணல், அவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரல் மற்றும் பூர்தியாக்கப்பட்டு கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்களை மாவட்ட ரீதியாக தரவு முறைமையில் உள்ளடக்குதல்
- **ii.** கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக குறித்த படைவீரர்களுக்கு வேறு காணிகள் குறித்த உரித்துக்கள் உள்ளனவா என்பது பற்றி ஆராய்தல்
- iii. காணப்படும் காணித் துண்டுகளின் அளவுக்கு அமைய தகைமையுடைய விண்ணப்பதாரிகளை அந்தந்தப் பிரதேசங்களில் தெரிவு செய்வதற்காக காணி கச்சேரிகளுக்கு அனுப்பி வைத்தல்
- iv. அதன் போது தகைமை பெறும் படைவீரர்களின் பெயர்ப் பட்டியலைப் பரிந்துரை செய்து ஏற்புடைய பிரதேச செயலகம், காணி ஆணையாளர் அலுவலகம், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, மகாவலி அதிகார சபை போன்ற நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்தல்

v. அது தொடர்பில் விண்ணப்பதாரிகள் மற்றும் ஏற்புடைய சேவை குறித்து விழிப்புணர்வூட்டல் மற்றும் காணி வழங்கலை ஒருங்கிணைத்தல்

II. உறுதி/உரிமம் வழங்குவதற்குரிய பரிந்துரைகளை வழங்குதல்

அரசாங்க காணித் துண்டுகளில் வதியும் படைவீரர்களுக்கு அந்தக் காணிக்குரிய உறுதி/ உரிமத்தை காணி ஆணையாளர் நாயகத்தின் 2021/01 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக "படைவீரர் நிவாரண அடிப்படை" யில் பெற்றுக் கொள்வதற்குப் பரிந்துரைக் கடிதங்களை சமர்ப்பித்தல்.

III. நிறுவன ஒருங்கிணைப்பு

படைவீரர்களினால் வதிவிற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட காணியானது அரசாங்க காணியாக இருப்பதன் காரணமாக ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு ஏற்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

4.5.3. 2022 ஆம் ஆண்டில் செயலாற்றுகை

4.5.3.1. பலாங்கொடையில் காணி உரித்துடைய படைவீரர்களுக்குக் கொடை உறுதிப் பத்திரங்களை வழங்குதல்

காணியற்ற படைவீரர்களுக்கு வழங்குவதற்காக கல்கிசை பிரதேசத்தில் வதியும் நன்கொடையாளரான திருமதி. L.K.குசுமாவதி அவர்களினால் காலஞ்சென்ற தனது கணவரின் நினைவாக கொடை உறுதிப் பத்திரம் மூலம் ரணவிரு சேவா அதிகார சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட இரண்டு ரூட் 38 பேர்ச்சஸ் காணியில் 10 பேர்ச்சஸ் வீதம் கொண்ட ஒன்பது காணித் துண்டுகள் 8 ஊனமுற்ற படைவீரர்களுக்கு மற்றும் இறந்த படைவீரர் ஒருவரின் தாயாருக்கு வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர (ஓய்வுநிலை) அவர்களின் தலைமையில் 2022.02.23 ஆம் திகதி பலாங்கொடை ரணவிரு கிராமத்தில் நடைபெற்றது.

இதன் போது சப்பிரகமுவ மாகாணத்திற்கு உரித்தான இரத்தினபுரி மாவட்டத்தின், பலாங்கொடை பிரதேசத்தின், மெதகோரலே ஹெல உடபத்துவே, இலக்கம் 254, பஹல மஸ்சென்ன பலாங்கொடை கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள அபேசிங்ஹ ஹேன எனப்படும் விலேகொட பகுதியின் காணி (இரண்டு ரூட் 38 பேர்ச்சஸ்) தற்காலிக உரிமம் மூலம் வதிவதற்காக ஒன்பது படைவீரர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்தக் காணிகளில் வதிவோருக்கு அறுதி உறுதிப் பத்திரம் இதன் போது வழங்கப்பட்டது.

இந்தக் காணித் துண்டுகளுக்கான சட்ட ரீதியான உரிமை கைமாற்றலுக்கு ரணவிரு சேவா அதிகார சபையின் காணிப் பிரிவின் தலையீட்டில் இலங்கை இராணுவப் படையின் சட்ட சேவைகள் பணிப்பாளர் சபையின் உதவியுடன் பின்வரும் 09 படைவீரர் குடும்பங்களுக்கு அறுதி உறுதிப் பத்திரங்கள் ஒப்பமிடப்பட்டு கைமாற்றும் நடவடிக்கைகள் இங்கு இடம்பெற்றன.

i. அசமானலாகே நிமல் விஜேரத்ன
ii. மாரத்தொட்ட கமஎத்திராலகே திலக் விஜேநாயக்க

iii. விஜேதுங்க முதியன்சேலாகே சந்திர மார அபேசிங்ஹ பண்டார
iv. ரத்நாயக்க முதியன்சேலாகே பிரியந்த ரத்நாயக்க
v. டீ.எம்.குமாரசிறி
vi. குலதுங்க முதியன்சேலாகே நிஷாந்த குமார பண்டார
vii. உதுல்லகே சுசந்த முணசிங்ஹ
viii. பேரக்கெட்டிய மாதவ நந்தசிறி அத்துல
ix. கொப்பேவின்ன மனன்னலாகே விக்கிரமரத்ன





4.5.3.2. படைவீரர் குடும்பம் ஒன்றிற்கு மீரிகமையில் காணி வழங்குதல்

காணியற்ற இரண்டு படைவீரர் குடும்பங்களுக்கு மாலம்பே மற்றும் மீரிகமை பிரதேசங்களில் அமைந்துள்ள இரண்டு காணித் துண்டுகளுக்கான உறுதிப் பத்திரம் ஒப்பமிடும் ஆரம்ப நிகழ்ச்சித் திட்டமொன்று 2022 ஆகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி ரணவிரு சேவா அதிகார சபையில் இடம்பெற்றது.

காணியற்ற இரண்டு படைவீரர்களுக்கு வழங்குவதற்காக மீரிகமை பிரதேசத்தில் வதியும் நன்கொடையாளரான திருமதி.வினீதா விக்கிரமாரச்சி அவர்களினால் கொடை உறுதிப் பத்திரம் மூலம் ரணவிரு சேவா அதிகார சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 10 பேர்ச்சஸ் அளவிலான காணி கம்பஹா மாவட்டத்தின் மீரிகமை பிரதேசத்தில் வதியும் இலங்கை இராணுவப் படையின் ஊனமுற்ற படைவீரர் ஒருவரான திரு.எச்.டப்ளியூ.குமாரசிறி அவர்களிடம் வழங்கப்பட்டது.





4.5.3.3. வத்துமுல்லையில் தெரிவு செய்யப்பட்ட படைவீரரின் மனைவிக்குக் கொடை உறுதிப் பத்திரம் வழங்குதல்

காணியற்ற படைவீரர் குடும்பம் ஒன்றிற்கு கம்பஹா பிரதேசத்தில் காணித் துண்டொன்றை வழங்குவதற்கு ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர (ஓய்வுநிலை) அவர்களின் தலைமையில் 2022.11.09 ஆம் திகதி ரணவிரு சேவா அதிகார சபையில் வைத்து உறுதிப் பத்திரம் ஒப்பமிடப்பட்டது.

காணியற்ற படைவீரர் ஒருவருக்கு வழங்குவதற்காக வத்துப்பிட்டிவல பிரதேசத்தில் வதியும் நன்கொடையாளர்களான தனசீலி குமாரசிங்ஹ மற்றும் பியசீலி குமாரசிங்ஹ ஆகிய இரு நன்கொடையாளர்களினால் கொடை உறுதிப் பத்திரம் மூலம் ரணவிரு சேவா அதிகார சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 10.20 பேர்ச்சஸ் அளவிலான காணி கம்பஹா மாவட்டத்தின் மினுவாங்கொடை பிரதேசத்தில் வதியும் இலங்கை இராணுவப் படையி உயிர் நீத்த படைவீரரான மஹேஷ் பத்மகுமார அவர்களின் மனைவியான திருமதி.டீ.டீ.சமந்தி குமாரி பர்னாந்து அவர்களிடம் வழங்கப்பட்டது.

மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தின் அலுத்குரு கோரலே தாசிய பத்துவே மினுவாங்கொடை பிரதேச செயலாளர் பிரிவிற்குரித்தான வத்துமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள 10.20 பேர்ச்சஸ் அளவிலான காணித் துண்டுக்கான சட்ட ரீதியான உரிமையைக் கைமாற்றும் நிகழ்வானது இலங்கை இராணுவப் படையின் சட்ட சேவைகள் பணிப்பாளர் சபையின் உதவியுடன் ரணவிரு சேவா அதிகார சபையின் தலையீட்டில் திருமதி.டீ.டீ.சமந்தி குமாரி பர்னாந்து அவர்களுக்கு உறுதிப் பத்திரம் ஒப்பமிடப்பட்டு தற்காலிக உரிமம் மூலம் ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவரின் தலைமையில் இடம்பெற்றது.





4.5.3.4. மாலம்பே காணியை தற்காலிக உறுதிப்பத்திரம் மூலம் அங்கவீனமுற்ற படைவீரர் ஒருவருக்குக் கொடையாக அளித்தல்

கடுவளை பிரதேச சபை மூலம் ரணவிரு சேவா அதிகார சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 6.70 பேர்ச்சஸ் அளவிலான காணித் துண்டு தற்காலிக உரிமம் மூலம் அவயவங்களை இழந்த இராணுவப் படையின் படைவீரர் திரு.டீ.எம்.எஸ்.குமாரசிறி அவர்களுக்கு 2022.11.09 ஆம் திகதி வழங்கப்பட்டது.

இந்தக் காணித் துண்டிற்கான சட்ட ரீதியான உரிமை கைமாற்றலானது இலங்கை இராணுவப் படையின் சட்ட சேவைகள் பணிப்பாளர் சபையின் உதவியுடன் ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர (ஓய்வுநிலை) அவர்களின் தலைமையில் இடம்பெற்றது





05

மருத்துவ உதவி மற்றும் கடன் வழங்குதல்

5.1. மருத்துவ உதவி வழங்குதல்

செயற்பாட்டுக் காரணங்களினால் அவயவங்களை இழந்த ஊனமுற்ற ஓய்வு பெற்ற படைவீரர்கள், முப்படை அல்லது பொலிஸ் சேவையில் உயிர் நீத்த திருமணமான படைவீரர்களின் முழுச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளாத பெற்றோர்கள், முப்படை அல்லது பொலிஸ் சேவை மூலம் ஓய்வூதியம்/தங்கி வாழ்வோரின் கொடுப்பனவை மாத்திரம் உயிர் நீத்த படைவீரர்களின் மனைவிமார் மற்றும் 26 வயதுக்குக் குறைந்த திருமணமாகாத,தொழில் புரியாத பிள்ளைகளுக்கு மருத்துவ உதவி வழங்கப்படுகிறது.

படைவீரர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் கோரிக்கைகளுக்கு அமைய அவசர சத்திர சிகிச்சைகளுக்கு உதவி வழங்கல், மருத்துவப் பரிசோதனைகளுக்கு உதவி வழங்குதல், நோய் நிலைமைகளைத் தவிர்ப்பதற்குத் தேவையான மருத்துவ உபகரணங்களை வழங்குதல், பொருளாதார சிக்கல்களைக் கொண்ட நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ள அவயவங்களை இழந்த படைவீரர்கள் மற்றும் படைவீரர்களின் உறவினர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு உதவுதல் என்பன இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

அதற்கமைய அவர்களுக்குத் தேவையான சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வைத்தியசாலையிலிருந்து தேவையான சிகிச்சைகள், பரிசோதனைகள் அல்லது சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதற்குப் போதிய நிதி உதவியை வழங்குவது அத்தியாவசியமானதாகும். நோய்க்கான சிகிச்சையைப் பெறுவதற்குத் தேவையான வசதிகள் காணப்படும் நிறுவனங்களுக்கு சென்று உடனடியாக சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு நிதி சார்ந்த உதவியானது இந்தத் திட்டத்தினால் வழங்கப்படுகிறது. படைவீரருக்கு உச்ச பட்சம் ரூ.500,000.00, படைவீரரின் உறவினர்களுக்கு உச்ச பட்சம் ரூ.75,000.00 வீதம் இதன் கீழ் நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன.

5.2. மருத்துவக் கடன் வழங்குதல்

படைவீரர்கள் முகங்கொடுக்கும் பல்வேறு உடல் நலச் சிக்கல்கள் காரணமாக வருடாந்தம் பெருமளவானவர்கள் மருத்துவ உதவிகளுக்காக விண்ணப்பிக்கின்றனர். அவசர சத்திர சிகிச்சைகள் மற்றும் சிகிச்சைகளுக்குப் பெருமளவானவர்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதோடு, அவர்களுள் அதிகளவானவர்கள் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைப் பெறும் நபர்களாவர். மருத்துவக் காரணங்களினால் ஓய்வு பெறுவிக்கப்பட்ட படைவீரர்கள் குறித்த அங்கவீன நிலைகளுக்குக் காரணமான விடயங்களின் நேரடியான அல்லது மறைமுகமான தாக்கங்களினால் தொடர்ந்தும் நோய்களினால் பீடிக்கப்பட நேர்கிறது. படைவீரர்கள் மற்றும் படைவீரர்களின் உறவினர்களும் தவறான போசனைப் பழக்கங்களினால் தொற்றா நோய்களுக்கு உள்ளாகும் சதவீதம் உயர்டைவதோடு, திடீர்

விபத்துக்களுக்கு முகங் கொடுப்பதனாலும் உடல் நலப் பிரச்சினைகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. அத்துடன், முதுமை காரணமாக பல்வேறு நோய்களினால் பீடிக்கப்படுவதனால் ஆரோக்கியமும் கெடுகிறது.

இவ்வாறான காரணிகளினால் படைவீரர்கள் பாதிப்புக்குள்ளாகும் நோய்களுக்கு உடனடியாக சிகிச்சை பெறுவதற்கு அரச வைத்தியசாலைகளில் நோயாளிகளை நீண்ட காலத்திற்குக் காத்திருப்போர் பட்டியலில் உள்ளடக்குதல் போன்ற காரணங்களினால் நோய் நிலைமைகள் அதிகரித்தல் மற்றும் பிற பக்க விளைவுகளுக்கு உள்ளாகலாம் என்பதோடு, அதன் காரணமாக அகால மரணமும் நிகழலாம்.

அத்துடன், அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை வழங்கும் நடைமுறைகளுக்கு அப்பால் தனியார் துறையில் சிகிச்சை பெறுவதற்காகப் பணத்தை செலவிட வேண்டியுள்ளதோடு, அவ்வாறு தனியார் துறையின் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவதற்குப் பொருளாதார பலம் இல்லாத காரணத்தினால் உரிய நேரத்திற்கு நோய்க்கான சிகிச்சை கிடைக்காமையினால் நோய் நிலைமை அதிகரிக்கலாம்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் மருத்துவ பரிந்துரைக்கு அமைய அவசர பணத் தேவையுடைய படைவீரர்களுக்கு வட்டியற்ற கடன் வழங்குதலானது இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். நோய்க்கான சிகிச்சையைப் பெறுவதற்குத் தேவையான வசதிகளைக் கொண்ட நிறுவனங்களுக்குச் சென்று உடனடியாக சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு நிதி சார்ந்த பங்களிப்பு இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

உச்ச பட்சம் ரூ.500,000.00 ஐ மருத்துவக் கடனாகப் பெற்றுக் கொள்ளலாம். கடன் தொகையை அறவிடுவதற்கான காலம் உச்ச பட்சம் 36 தவணைகளாகும். இந்தக் கடன் தொகையை வழங்குகையில் எவ்வித சேவைக் கட்டணமும் அறவிடப்பட மாட்டாது.

5.3. மருத்துவக் கடன் மற்றும் உதவி வழங்கும் முறைகள்



5.4. மருத்துவ உதவி பலன்களை பகிர்ந்தளித்தல்



படைவீரர்கள் 09

ரூ.1.87 மில்லியன்




படைவீரர்களின் பெற்றோர்கள் - 03

படைவீரர்களின் மனைவிமார் - 04

படைவீரர்களின் பிள்ளைகள் - 04

5.4.1. மாவட்ட ரீதியாக மருத்துவ உதவி வழங்குதல்

தொ.இ.	மாவட்டம்	பயனாளிகளின் எண்ணிக்கை
1	அனுராதபுரம்	1
2	அம்பாறை	5
3	குருநாகல்	1
4	கொழும்பு	1
5	காலி	1
6	பொலன்னறுவை	3
7	கண்டி	3
8	மாத்தறை	1
9	மொணராகலை	1
10	இரத்தினபுரி	1
11	அம்பாந்தோட்டை	1



5.5. மருத்துவக் கடன் பலன்கள் பகிர்ந்தளித்தல்

படைவீரர் ஒருவருக்கு அவசர சத்திர சிகிச்சைக்காக செலவாகும் பணத் தேவையின் பொருட்டு மருத்துவக் கடனாக 500,000.00 ரூபா தொகையானது வட்டியின்றி செலுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ளது.

5.5.1. மாவட்ட ரீதியாக மருத்துவக் கடன் வழங்குதல்

தொ.இ.	மாவட்டம்	பயனாளிகளின் எண்ணிக்கை
1	அனுராதபுரம்	1
மொத்தம்		4

06

கல்வி புலமைப் பரிசில் மற்றும் இளைஞர் விவகார பிரிவு

செயற்பாட்டின் போது உயிர்த் தியாகம் செய்த மற்றும் அங்கவீன நிலைக்கு உள்ளான படைவீரர்களின் கல்வி கற்கும் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை உரியவாறு மேற்கொள்வதற்கு ஊக்கமளித்து நிதி சார்ந்த உதவியை வழங்குவதன் பொருட்டு இந்தக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாகப் பூர்த்தியாக்குவதற்கு பொருளாதார உதவியை வழங்கி சமூக மற்றும் தொழில்சார் ரீதியில் வலுப்படுத்தப்பட்ட சிறந்த பிள்ளைகளை சமூகமயப்படுத்தலானது கல்வி மற்றும் இளைஞர் விவகார பிரிவின் அடிப்படை நோக்கமாகும்.

6.1. பிரிவின் கீழ் செயல்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள்


6.1.1. 6 - 11 ஆம் தரங்களுக்கான உதவித்தொகை திட்டங்கள்

படைவீரர்களின் 6 - 11 வரையான தரங்களில் கல்வி கற்கும் பிள்ளைகளின் பொருட்டு நடைமுறைப்படுத்தப்படும் இந்தப் புலமைப் பரிசில் முறையின் போது தரம் 6 இலிருந்து க.பொ.த. சா/தரக் கல்வியைப் பூர்த்தி செய்யும் வரை மாதமொன்றிற்கு 500.00 ரூபா வீதம் பின்வரும் முறையில் புலமைப் பரிசில் வழங்கப்படுகிறது. பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தக் கூடியவாறு அந்தப் பிள்ளைகளின் பெயரில் தாய்/தந்தையின் பொறுப்பில் உள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கணக்கிற்கு மாதாந்தம் பணம் வைப்பிலிடப்படும்.

தொ.இ.	கல்வி கற்கும் தரம்	செலுத்தப்படும் தவணைப் பணம் (ரூ.)	செலுத்தப்படும் மொத்தத் தவணைகளின் எண்ணிக்கை	புலமைப் பரிசில்களின் பெறுமதி
1	தரம் 6	500.00	72	36,000.00
2	தரம் 7	500.00	60	30,000.00
3	தரம் 8	500.00	48	24,000.00
4	தரம் 9	500.00	36	18,000.00
5	தரம் 10	500.00	24	12,000.00
6	தரம் 11	500.00	12	6,000.00

6.1.1.1. 2022 ஆம் ஆண்டில் மாவட்ட ரீதியாக 6 - 11 ஆம் தரங்களுக்கு வழங்கப்பட்ட புலமைப் பரிசில் எண்ணிக்கை

தொ.இ.	மாகாணம்	மாவட்டம்	வழங்கப்பட்ட புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை	மொத்தப் புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை (மாகாண ரீதியாக)
1	மேல்	கொழும்பு	46	210
		கம்பஹா	87	
		களுத்துறை	77	
2	வட மேல்	குருநாகல்	174	194
		புத்தளம்	20	
3	தென்	காலி	60	168
		மாத்தறை	45	
		அம்பாந்தோட்டை	63	
4	சப்பிரகமுவ	கேகாலை	74	130
		இரத்தினபுரி	56	
5	ஊவா	பதுளை	71	131
		மொணராகலை	60	
6	வட மத்திய	அனுராதபுரம்	170	221
		பொலன்னறுவை	51	
7	மத்திய	கண்டி	109	212
		மாத்தளை	59	
		நுவரெலியா	44	
8	கிழக்கு	திருகோணமலை	11	82
		அம்பாறை	71	
மொத்தம்				1348




6.1.2. க.பொ.த. உயர்தர புலமைப் பரிசில்

படைவீரர்களின் க.பொ.த. உயர்தரம் கற்கும் பிள்ளைகளுக்காக நடைமுறைப்படுத்தப்படும் இந்தப் புலமைப் பரிசில் முறையின் கீழ் மாதம் ஒன்றிற்கு ரூ.1500.00 வீதம் உட்ச பட்சம் 24 தவணைகள் உள்ளடங்கும் வகையில் பிள்ளைகளின் பெயரில் உள்ள கணக்கிற்கு மாதாந்தம் பணம் வரவு வைக்கப்படும்

6.1.2.1. 2022 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தர புலமைப் பரிசில் வழங்குதல்

தொ.இ.	மாகாணம்	மாவட்டம்	வழங்கப்பட்ட புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை	மொத்தப் புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை (மாகாண ரீதியாக)
1	மேல்	கொழும்பு	23	105
		கம்பஹா	47	
		களுத்துறை	35	
2	வட மேல்	குருநாகல்	87	93
		புத்தளம்	6	
3	தென்	காலி	30	67
		மாத்தறை	12	
		அம்பாந்தோட்டை	25	
4	சப்பிரகமுவ	கேகாலை	44	72
		இரத்தினபுரி	28	
5	ஊவா	பதுளை	36	58
		மொணராகலை	22	
6	வட மத்திய	அனுராதபுரம்	64	83


		பொலன்னறுவை	19	
7	மத்திய	கண்டி	47	90
		மாத்தளை	27	
		நுவரெலியா	16	
8	கிழக்கு	திருகோணமலை	5	43
		அம்பாறை	37	
		மட்டக்களப்பு	1	
மொத்தம்				**611**



6.1.3. உயர் கல்வி உதவித்தொகை

படைவீரர்களின் குடும்பங்களில் பல்கலைக்கழகம், கல்வியியல் கல்லூரி மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு உயர் கல்விப் பாடநெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள பிள்ளைகளுக்கு அவர்களது கல்வியாண்டு 04 இல் உச்ச பட்சம் 48 தவணைகள் உள்ளடங்கும் வகையில் மாதம் ஒன்றிற்கு ரூ.3000.00 வீதம் நிதி உதவி வழங்குவதற்கு இந்த உதவித்தொகை திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

தொ.இ.	மாகாணம்	மாவட்டம்	உயர் கல்வி புலமைப் பரிசில் எண்ணிக்கை	உயர் கல்வி புலமைப் பரிசில் எண்ணிக்கை
1	மேல்	கொழும்பு	16	76
		கம்பஹா	36	
		களுத்துறை	24	
2	வட மேல்	குருநாகல்	40	47
		புத்தளம்	7	
3	தென்	காலி	27	57
		மாத்தறை	20	
		அம்பாந்தோட்டை	10	
4	சப்பிரகமுவ	கேகாலை	21	32
		இரத்தினபுரி	11	
5	ஊவா	பதுளை	26	38
		மொணராகலை	12	
6	வட மத்திய	அனுராதபுரம்	28	36
		பொலன்னறுவை	8	
7	மத்திய	கண்டி	26	36
		மாத்தளை	7	
		நுவரெலியா	3	
8	கிழக்கு	திருகோணமலை	6	17
		அம்பாறை	11	
மொத்தம்				339




6.1.4. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி பாடநெறி உதவித் திட்டம்

க.பொ.த. சா/த, உ/த சித்தி பெற்ற அல்லது சித்தி பெறாத அனைவருக்கும் தொழிற் கல்வியை வழங்கும் நோக்கில் தொழிற்கல்வி பாடநெறியைப் பயிலும் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு பாடநெறிக் கட்டணம் உள்ளடங்கும் வகையில் உச்ச பட்சம் 50,000.00 ரூபா பாடநெறி உதவித் தொகை இதன் கீழ் வழங்கப்படுகிறது. எனினும், 2022 ஆம் ஆண்டில் ஏற்பாடுகள் இல்லாத காரணத்தினால் இந்தப் பாடநெறி உதவித் தொகை வழங்கல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

6.1.5. திறன் மேம்பாட்டுக் கடன்

க.பொ.த. சா/த, மற்றும் உ/த மட்டத்தில் மற்றும் உயர் கல்வியைப் பூர்த்தி செய்த படைவீரர்களின் பிள்ளைகளுக்கு பல்வேறு பாடநெறிகளின் ஊடாக தமது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான நிதி சார்ந்த பங்களிப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு பாடநெறிக் கட்டணத்திற்கு அமைவாக இந்தக் கருத்திட்டத்தின் கீழ் கல்விக் கடன் வழங்கப்படுகிறது. உச்ச பட்சம் 500,000.00 ரூபா கடன் தொகை இதன் ஊடாக வழங்கப்படுகிறது.

தொ.இ.	மாகாணம்	மாவட்டம்	கல்விக் கடன் எண்ணிக்கை	மொத்தம்
1	மேல்	கொழும்பு	1	4
2		கம்பஹா	1	
3		களுத்துறை	2	
4	வட மேல்	குருநாகல்	1	1
5	தென்	காலி	1	1
6	சப்பிரகமுவ	கேகாலை	1	1
7	வட மத்திய	அனுராதபுரம்	2	2
மொத்தம்				9



6.1.6. பு அமைச்சுடன் இணை5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற பிள்ளைகளின் மதிப்பீடு (பாதுகாப் ந்து)

செயற்பாட்டின் போது மரணமடைந்த அல்லது ஊனமுற்ற படைவீரர்களின் 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற பிள்ளைகளை மதிப்பிடுவதற்குப் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்படும் புலமைப் பரிசில் திட்டத்திற்குத் தேவையான 31 விண்ணப்பப் படிவங்கள் இதன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

6.1.7. 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்

6.1.7.1. 32 அழியா வீரர்கள் (32 Immortal Soldiers) நூலின் நூலாசிரியர்

வருமானத்திலிருந்து படைவீரர் ஒருவரின் புதல்வியொருவருக்கு கல்வி சார் உதவி வழங்குதல்

பிரபல வங்கியியலாளரும் தொழில்முறைக் கணக்காளருமான பிரசாத் பொல்வத்தை அவர்களினால் எழுதப்பட்ட 32 அழியா வீரர்கள் **(32 Immortal Soldiers)** நூல் விற்பனை மூலம் கிடைக்கப்பெற்ற நூலாசிரியர் வருமானத்தைக் கொண்டு அவயவங்களை இழந்த படைவீரரின் புதல்வியொருவருக்குக் கல்வி சார் உதவியாக மடிக் கணனி ஒன்று 2022 பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி திங்கட் கிழமை அதிகார சபையில் வைத்து நன்கொடையாக வழங்கப்பட்டது.

தொம்பே கேரகல ரணவிரு கிராமத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போது ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவரிடம் அவயவங்களை இழந்த இந்தப் படைவீரரும் அவரது புதல்வியும் முன்வைத்த கோரிக்கைக்கு உடனடித் தீர்வாக 120,000.00 ரூபா பெறுமதியான மடிக் கணனி நன்கொடையாக வழங்கப்பட்டது.

ரணவிரு சேவா அதிகார சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட பிரசாத் பொல்வத்தை அவர்களினால் எழுதப்பட்ட நூலின் நூலாசிரியர் வருமானத்தைக் கொண்டு இந்த மடிக் கணனி கொள்வனவு செய்யப்பட்டு குறித்த படைவீரரின் புதல்வியின் கல்வித் தேவைகளுக்கு வசதியேற்படுத்தும் பொருட்டு ரணவிரு சேவா அதிகார சபையின் புலமைப் பரிசில் திட்டப் பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர (ஓய்வுநிலை) அவர்களின் அழைப்பின் பேரில் பிரசாத் பொல்வத்தை அவர்களினால் பெற்றோர்கள் முன்னிலையில் குறித்த படைவீரரின் புதல்விக்கு இந்த மடிக் கணனி வழங்கப்பட்டது. ரணவிரு சேவா அதிகார சபையின் பணிப்பாளர், மேஜர் ஜெனரல் கித்சிறி ஏக்கநாயக்க (ஓய்வுநிலை), மேல் மாகாண பிரதிப் பணிப்பாளர் திருமதி.தம்மிக்கா ஷெல்ட்டன், புலமைப் பரிசில் பிரிவின் தலைவர், செல்வி. சுரேக்கா பர்னாந்து மற்றும் படைவீரரின் குடும்ப உறுப்பினர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.





6.1.7.2 "32 அழியா வீரர்கள்" நூல் மூலம் மேலும் மூன்று படைவீரர்களின் பிள்ளைகளுக்குக் கல்வி உதவி வழங்குதல்

யுத்தத்தினால் உயிரிழந்த மற்றும் அவயவங்களை இழந்த இராணுவப் படை மற்றும் பொலிஸ் படைவீரர்களது பிள்ளைகள் மூவருக்கு உயர் கல்விக்குத் தேவையான மூன்று மடிக் கணனிகளை நன்கொடையாக வழங்கும் நிகழ்வு 2022.03.03 ஆம் திகதி ரணவிரு சேவா அதிகார சபையில் இடம்பெற்றது.

பிரபல வங்கியியலாளரும் தொழில்முறைக் கணக்காளருமான பிரசாத் பொல்வத்தை அவர்களினால் எழுதப்பட்ட 32 அழியா வீரர்கள் **(32 Immortal Soldiers)** நூல் விற்பனை மூலம் கிடைக்கப்பெற்ற நூலாசிரியர் வருமானத்தைக் கொண்டு அவயவங்களை இழந்த படைவீரர்களது பிள்ளைகள் மூவருக்குக் கல்வி ரீதியான உதவியாக 3 மடிக் கணனிகள் நன்கொடையாக வழங்கப்பட்டதுடன், இதற்கு முன்னர் ஒரு சந்தர்ப்பத்திலும் படைவீரர் ஒருவரது புதல்வியொருவருக்கு மடிக் கணனி வழங்கப்பட்டது.

ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர அவர்களின் அழைப்பின் பேரில் பிரசாத் பொல்வத்தை அவர்கள் மற்றும் அவரது மனைவி திருமதி. ஹர்ஷி பொல்வத்தை அவர்களினாலும் இந்தப் படைவீரர்களது பிள்ளைகளுக்கு கணனிகள் வழங்கப்பட்டன. ரணவிரு சேவா அதிகார சபையின் பணிப்பாளர், மேஜர் ஜெனரல் கித்சிறி ஏக்கநாயக்க (ஓய்வுநிலை), தலைவரின்செயலாளர் பிரிகேடியர் ரோஷன் திரிமான்ன, புலமைப் பரிசில் பிரிவின் தலைவர், செல்வி. சுரேக்கா பர்னாந்து மற்றும் படைவீரர்களின் குடும்ப உறுப்பினர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.





6.1.7.3. தலைவரின் தனிப்பட்ட அனுசரணையில் இரண்டு படைவீரர்களின் பிள்ளைகளுக்கு இரண்டு மடிக் கணனிகள் நன்கொடையாக வழங்குதல்.

செயற்பாட்டின் போது மரணமடைந்த அல்லது ஊனமுற்ற படைவீரர்களின் உயர் கல்வி கற்கும் பிள்ளைகளினால் முன்வைக்கப்பட்ட விசேட கோரிக்கைக்கான தீர்வாக அவர்களது கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான இரண்டு மடிக் கணனிகள் ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர அவர்களின் தனிப்பட்ட அனுசரணையில் 2022.08.27 ஆம் திகதி ரணவிரு சேவா அதிகார சபையில் வைத்து நன்கொடையாக வழங்கப்பட்டது.

கம்பஹா பிரதேசத்தில் வசிக்கும் 3 ஆவது இலங்கை காலாட்படைக்கு இணைப்பு செய்யப்பட்டு சாவகச்சேரி பிரதேசத்தில் செயற்பாட்டு கடமையில் ஈடுபட்டிருந்த வேளையில் பயங்கரவாத தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்து முழுமையான அங்கவீன நிலைமைக்கு உள்ளான படைவீரர் ஏ.எச்.சுசந்த அவர்களின் புதல்விக்கு இந்த மடிக் கணனி நன்கொடையாக வழங்கப்பட்டது. அவர் 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் சித்தி பெற்று ருஹுணு பல்கலைக்கழகத்தின் கைத்தொழில் புள்ளிவிபரவியலும் கணித நிதியும் பாடத்தைக் கற்கவுள்ளார்.

2007 ஆம் ஆண்டு மட்டக்களப்பு பிரதேசத்தில் பயங்கரவாத தாக்குதலுக்கு இலக்காகி அவயவங்களை இழந்த இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு இணைப்பு செய்யப்பட்டு கடமையாற்றிய உப பொலிஸ் பரிசோதகர் கே.எம்.குணரத்ன அவர்களின் மூத்த புதல்வர் 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில் தகவல் தொழிநுட்ப பிரிவில் மிகச் சிறந்த முறையில் சித்தி பெற்று கேகாலை மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்று ருஹுணு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழிநுட்ப பாடத்தைக் கற்கவிருப்பதோடு, அவருக்கும் அந்த நிகழ்வின் போது மடிக் கணனி நன்கொடையாக வழங்கப்பட்டது.





6.1.7.4. மேல் மாகாணத்தைச் சேர்ந்த படைவீரர்களின் பிள்ளைகளுக்கு முத்துஹர மூலம் பாடசாலை உபகரணங்களை நன்கொடையாக வழங்குதல்

ரூபவாஹினியின் சர்வதேச முத்துஹர சிறுவர் மன்றங்களுடன் இணைந்த டோஹா கட்டார், இங்கிலாந்தின் லண்டன், அவுஸ்திரேலியாவின் எடிலேட் மற்றும் சிட்னி நகரங்களில் வசிக்கும் இலங்கையைச் சேர்ந்த பிள்ளைகளால் நன்கொடையாக வழங்கப்பட்ட பாடசாலை

உபகரணங்கள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வின் முதற் கட்டமாக மேல் மாகாணத்தின் கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களைச் சேர்ந்த படைவீரர்களின் பிள்ளைகளுக்கு நன்கொடையளிக்கும் நிகழ்வு 2022 ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர (ஓய்வுநிலை) அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

ரூபவாஹினியின் முத்துஹர சிறுவர் நிகழ்ச்சித் திட்டத்தின் நிகழ்ச்சிப் பணிப்பாளர் உதாந்த கமல் குணதிலக்க அவர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் போது யுத்தத்தினால் மரணமடைந்த மற்றும் அவயவங்களை இழந்த முப்படையின் மற்றும் பொலிசுக்கு இணைப்பு செய்யப்பட்டு கடமையாற்றி யுத்தத்தினால் மரணமடைந்த மற்றும் அவயவங்களை இழந்த படைவீரர்களின் தெரிவு செய்யப்பட்ட 70 பிள்ளைகளுக்கு ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவரின் வழிகாட்டலின் கீழ் பாடசாலை உபகரணங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன.

ரணவிரு சேவா அதிகார சபையின் உப தலைவர் மற்றும் செனெஹச விசேட கல்வி மத்திய நிலையத்தின் தலைமை மேற்பார்வையாளர், திருமதி.சோனியா கோட்டேகொட ரணவிரு சேவா அதிகார சபையின் பணிப்பாளர், மேஜர் ஜெனரல் கித்சிறி ஏக்கநாயக்க (ஓய்வுநிலை), தலைவரின் செயலாளர், பிரிகேடியர் ரோஷன் திரிமான்ன, ரணவிரு சேவா அதிகார சபையின் மாகாண பிரதி பணிப்பாளர்கள், பிரிவுத் தலைவர்கள், நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர்கள், பணிக்குழுவின் உறுப்பினர்கள், முப்படையின் உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள், படைவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.









6.1.8. பெற்றோர் பாதுகாவலர் புலமைப்பரிசில் திட்டம்

6.1.8.1. திட்டத்தின் நோக்கம்

முப்படையின் மற்றும் பொலிஸ் சேவைக்கு இணைப்பு செய்யப்பட்டு செயற்பாட்டு சேவையில் ஈடுபட்டிருக்கையில் செயற்பாட்டுக் காரணங்கள் அல்லாத வேறு காரணங்களினால் மரணித்த மற்றும் செயற்பாடல்லாத காரணங்களினால் அங்கவீன நிலைக்கு உள்ளான படைவீரர்களின் பாடசாலை கல்வியைப் பெறும் பிள்ளைகளுக்கு கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஊக்கமளிக்கும் வகையில் இந்தக் கருத்திட்டத்தின் மூலம் புலமைப் பரிசில் வழங்கப்படுகிறது.

6.1.8.2. நிகழ்ச்சித் திட்டத்தின் பலன்களை வழங்கும் முறைகள்


1994 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ரணவிரு சேவா அதிகார சபையின் பயனாளிகள் வகுதியில் உள்ளடங்காத செயற்பாட்டுக் காரணங்கள் அல்லாத வேறு காரணங்களினால் மரணித்த மற்றும் ஊனமுற்ற படைவீரர்களின் பிள்ளைகளுக்கு இந்தக் கருத்திட்டத்தின் மூலம் புலமைப் பரிசில் வழங்கப்படுகிறது. கருத்திட்டத்திற்கென ஏற்பாடுகள் ஒதுக்கப்பட மாட்டாது என்பதோடு, நன்கொடையாளர்களின் நிதிப் பங்களிப்பின் அடிப்படையில் புலமைப் பரிசில் வழங்கப்படுகிறது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன்கொடையாளர்களினால் வழங்கப்படும் நிதி உதவிகளை பொருளாதார நெருக்கடிகளினால் தமது கல்வி நடவடிக்கைகளை தொடர முடியாதுள்ள படைவீரர்களின் பிள்ளைகளுக்கு மாதாந்தம் செலுத்தலானது இந்தக் கருத்திட்டத்தினால் நிறைவேற்றப்படும் பிரதான பணியாகும்.

மாவட்டங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களினால் அல்லது படைவீரர்களின் குடும்பங்களினால் நேரடியாக சமர்ப்பிக்கப்பட்டு கருத்திட்டத்திற்குக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களில் காணப்படும் குறைப்பாடுகள் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் புலமைப் பரிசில் பெறுவதற்கு தகுதியானவர்களைத் தெரிவு செய்யும் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும். குறித்த குழுவின் அனுமதியின் பின்னர் பிள்ளைகளின் விபரங்கள் நன்கொடையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன், அவர்களினால் தெரிவு செய்யப்படும் பிள்ளைகளுக்கு நன்கொடையாக வழங்கப்படும் தொகையானது மாதாந்தம் பிள்ளைகளின் கணக்கிற்கு வரவு வைக்கப்படும்.

6.1.8.3. மாவட்ட ரீதியில் 2022 ஆம் ஆண்டில் புலமைப்பரிசில் வழங்கல் -2022


தொ.இ.	மாகாணம்	மாவட்டம்	வழங்கப்பட்ட எண்ணிக்கை
1	மேல்	கொழும்பு	7
		களுத்துறை	20
		கம்பஹா	28
2	தென்	காலி	13

		மாத்தறை	8
		அம்பாந்தோட்டை	8
3	மத்திய	கண்டி	29
		மாத்தளை	18
		நுவரெலியா	12
4	சப்பிரகமுவ	இரத்தினபுரி	22
		கேகாலை	8
5	வட மேல்	குருநாகல்	42
		புத்தளம்	8
6	வட மத்திய	அனுராதபுரம்	64
		பொலன்னறுவை	10
7	ஊவா	பதுளை	21
		மொணராகலை	11
8	கிழக்கு	அம்பாறை	17
		வவுனியா	1




6.1.8.4.2022 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்ட புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை

தொ.இ.	மாதம்	வழங்கப்பட்ட புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை
1	ஜனவரி	78
2	பெப்ரவரி	78
3	மார்ச்	325
4	ஏப்பிரல்	78
5	மே	78
6	ஜூன்	75
7	ஜூலை	76
8	ஆகஸ்ட்	76
9	செப்டெம்பர்	77
10	ஒக்டோபர்	77
11	நவம்பர்	77
12	டிசம்பர்	77




6.1.8.5. 2022 ஆம் ஆண்டில் உதவித்தொகைகளை வழங்குவதற்காக மாதாந்தம் ஏற்க நேரிட்ட ஆகுசெலவு

தொ.இ.	மாதம்	செலவாகிய தொகை (ரூ)
1	ஜனவரி	104,000.00
2	பெப்ரவரி	104,000.00
3	மார்ச்	220,000.00
4	ஏப்பிரல்	104,000.00
5	மே	104,000.00
6	ஜூன்	95,000.00
7	ஜூலை	98,000.00
8	ஆகஸ்ட்	98,000.00
9	செப்டெம்பர்	100,500.00
10	ஒக்டோபர்	100,500.00
11	நவம்பர்	100,500.00
12	டிசம்பர்	100,500.00
மொத்தம்		1,329,000.00



6.1.8.6. உதவித்தொகைகளை வழங்குவதற்கான நன்கொடையாளர்களின் பங்களிப்பு

தொ.இ.	நன்கொடையளிக்கும் நாடுகள்	கிடைக்கப்பெற்ற புலமைப் பரிசில் எண்ணிக்கை
1	இலங்கை	266
2	டுபாய்	12
3	அவுஸ்திரேலியா	03
4	இங்கிலாந்து	50



6.1.8.7. 2022 ஆம் ஆண்டில் பெற்றோர் பாதுகாவலர் புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வேறு பணிகள்

i. வீடுகள் அற்ற மற்றும் வீட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்படாத 04 படைவீரர் குடும்பங்களின் வீடுகளை நன்கொடையாளர்களின் பங்களிப்பின் மூலம் நிர்மாணித்தல்.





ii. புலமைப் பரிசில் கிடைக்கப்பெறாத 165 பிள்ளைகளுக்கு நிப்பொன் புலமைப் பரிசிலை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர (ஓய்வுநிலை) அவர்களின் விசேட கோரிக்கையின் பேரில் இலங்கை நிப்பொன் கல்வி மற்றும் கலாசார மத்திய நிலையத்தின் பொதுச் செயலாளர் □ரீ ஜயவர்தனபுர பிரதான சங்கநாயக்க ஸ்தவிர வணக்கத்துக்குரிய மீகஹதென்னே சந்தசிறி நாஹிமிபாணன் அவர்களினால் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு கல்விப் புலமைப் பரிசில் வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக சேவைப் பணிகளில் விசேட ஆர்வமுடைய இந்த விகாரையின் விசேட பங்களிப்பாளராக செயற்படும் திருமதி. பிரபோதினி மாரசிங்ஹ அவர்களின் தலையீட்டில் இந்தக் கல்விப் புலமைப் பரிசில்களை படைவீரர்களின் பிள்ளைகள் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்பாட்டுக் காரணங்கள் அல்லாத வேறு காரணங்களினால் மரணித்த மற்றும் காயமடைந்த முப்படையின் மற்றும் பொலிஸ் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு பத்து வருடங்களுக்குக் கிடைக்கக் கூடியவாறு கல்விப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படுவதுடன், இதன் மூலம் படைவீரர்களின் பிள்ளைகளின் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான அனைத்து பாடசாலை உபகரணங்கள், சீருடைகள் மற்றும் நிதி நன்கொடைகள் உள்ளடங்கலாக வருடாந்தம் இந்தக் கல்வி உதவிகளை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.



iii. ரணவிரு சேவா அதிகார சபையின் விளையாட்டுக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓய்வுபெற்ற சார்ஜன்ட் மேஜர் அனில் பிரசன்ன ஜயலத் அவர்களுக்குத் தேவையாகவிருந்த விளையாட்டுப் பாதணி சோடியொன்று பெற்றோர் பாதுகாவலர் பிரிவின் தலைவர் திருமதி.துலானி தேவமித்த அவர்களின் ஒருங்கிணைப்பில் நன்கொடையாக வழங்கப்பட்டது. டீ.எஸ்.ஐ. கூட்டு வியாபாரத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு.துசித்த ராஜபக்ஷ அவர்களினால் இந்தப் பாதணி சோடிக்குத் தேவையான அனுசரணை வழங்கப்பட்டது.

iv. மூன்று இரட்டைக் குழந்தைகளைக் கொண்ட படைவீரர் குடும்பம் ஒன்றிற்கு நன்கொடையாளர்களின் பங்களிப்பில் அந்தக் குழந்தைகளுக்குத் தேவையான பால் மா வழங்குதல்.

v. இரத்தினபுரி மாவட்டத்தின் எம்பிலிப்பிட்டிய ரணவிரு மன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முழுமையாக ஊனமுற்ற படைவீரர் சார்ஜன்ட் திரு.ஏ.கே.உப்புல் அவர்களுக்குத் தேவையாகவிருந்த மருத்துவ மெத்தையொன்று நன்கொடையாளர் ஒருவரின் அனுசரணையில் நன்கொடையாக வழங்குதல்.

vi. படைவீரர் ஒருவரின் பிள்ளைக்குத் தலையில் ஏற்பட்ட பாதிப்புக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சைக்காக நன்கொடையாளர்களின் உதவி மூலம் ரூ.100,000/- வழங்குதல்.

vii. கண் பார்வையற்ற படைவீரர் ஒருவரின் தாய் வசிக்கும் வீட்டிற்குக் குளியலறை மற்றும் சமையலறைக்குத் தேவையான உபகரணங்களைப் போன்றே அவரது நோய் நிலைமைக்குத் தேவையான மருந்துப் பொருட்களை நன்கொடையாளர்களின் உதவி மூலம் வழங்குதல்.

07

மாகாண மற்றும் சிறப்புத் திட்டப் பிரிவு

7.1. அறிமுகம்

ரணவிரு சேவா அதிகார சபை மூலம் நாடு முழுவதும் பரந்து வாழும் படைவீரர் குடும்பங்களை ஒன்று திரட்டி செயற்பட்டு வரும் ரணவிரு மன்ற வலையமைப்பை முறையாகப் பேணுவதன் மூலம் மிக விரிவான சேவையொன்றை படைவீரருக்கு வழங்குவதற்கு மாகாண மற்றும் சிறப்புத் திட்டப் பிரிவின் மூலம் பல நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

படைவீரர்களின் தேவைகளை இனங்கண்டு தேவைப்பாடுகளை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு மாகாண பிரிவைச் சாரும். படைவீரர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் கோரிக்கைகளைக் கருத்திற் கொண்டு அவற்றிற்கு உடனடித் தீர்வுகளை வழங்குதல், திடீர் அனர்த்தங்களின் போது உதவிகளை வழங்குதல், ரணவிரு கிராமங்களை பராமரித்தல் போன்ற பல பணிகள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

7.2. திடீர் அனர்த்த உதவி வழங்கல் திட்டம்

செயற்பாட்டின் போது உயிர்த் தியாகம் செய்த படைவீரர் குடும்பங்களின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் அவயவங்களை இழந்த (ஊனமுற்று ஓய்வுபெற்ற) மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள ஊனமுற்ற படைவீரர்களுக்கு ஏற்படும் மண்சரிவு, சூறாவளி, தீப்பிடித்தல் போன்ற திடீர் அனர்த்தத்தின் போது வீடுகளுக்கு ஏற்படும் நட்டங்கள் மற்றும் அவயவங்களை இழந்த படைவீரரின் மரணத்தைக் கருத்திற் கொண்டு குறித்த படைவீரர் குடும்பங்களுக்கு ஆறுதல் அளிக்கும் நோக்கில் திடீர் அனர்த்த உதவித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

7.2.1. பலன்களை வழங்கும் முறை

செயற்பாட்டின் போது உயிர்த் தியாகம் செய்த படைவீரர் குடும்பங்களின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் அவயவங்களை இழந்த (ஊனமுற்று ஓய்வுபெற்ற) மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள ஊனமுற்ற படைவீரர்களுக்கு ஏற்படும் மண்சரிவு, சூறாவளி, தீப்பிடித்தல் போன்ற திடீர் அனர்த்தத்தின் போது வீடுகளுக்கு ஏற்படும் நட்டங்களுக்கு 100,000.00 ரூபா நிதி உதவியும் அவயவங்களை இழந்த படைவீரரின் மரணத்தைக் கருத்திற் கொண்டு குறித்த படைவீரரின் குடும்பங்களுக்கு 10,000.00 ரூபா நிதி உதவியும் ஏற்புடைய மாவட்டத்தின் மாவட்ட நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தரின் மற்றும் மாகாண பிரதி பணிப்பாளரின் பரிந்துரைக்கமைய கொடுப்பனவு செய்யப்படும்.

7.2.2. திடீர் இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளான படைவீரர்களின குடும்பங்களுக்கு உதவி வழங்கல்

தொ.இ.	பெயர்	விபரம்	மாவட்டம்	உதவித் தொகை (ரூ)
1	கே.எச்.எம். கருணாரத்ன ப.வீ/412467	தண்ணீர் மோட்டார் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக உதவு தொகை வழங்குதல்	அம்பாறை	100,000.00
2	ஆர்.ஏ.எம்.உதயசிறி ப.வீ /410601	வீட்டிற்கு சேதம் ஏற்பட்டதன் காரணமாக திடீர் அனர்த்த உதவு தொகை செலுத்துதல்	இரத்தினபுரி	100,000.00
3	பி.ரீ.எஸ்.தசநாயக்க ப.வீ /416116	வீட்டிற்கு சேதம் ஏற்பட்டதன் காரணமாக திடீர் அனர்த்த உதவு தொகை செலுத்துதல்	இரத்தினபுரி	100,000.00
4	பீ.ஜீ.ஜயமான்ன ப.வீ /34896	வீட்டின் பக்கச் சுவர்கள் மண்சரிவுக்கு உட்பட்டதன் காரணமாக திடீர் அனர்த்த உதவு தொகை செலுத்துதல்	கண்டி	100,000.00
5	கே.ஜினதாச ப.வீ /76030	அதிக மழைவீழ்ச்சியினால் வீடு அனர்த்தத்திற்கு உள்ளானதன் காரணமாக உதவு தொகை செலுத்துதல்	காலி	100,000.00
6	யூ.ஜீ.சீ.என்.விஜேகுல துங்க ப.வீ /423321	வீட்டின் பின்புற மண் மேடு உடைந்து விழுந்ததன் காரணமாக அதன் கட்டுமானத்திற்கு திடீர் அனர்த்த உதவு தொகை செலுத்துதல்	கண்டி	100,000.00
மொத்தம்				600,000.00





ப.வீ /410601 ஆர்.ஏ.எம்.உதயசிறி மரணமடைந்த படைவீரரின் மனைவி வாழும் வீட்டின் மீது மரமொன்று உடைந்து விழுதல்




ப.வீ /416116 பி.ரீ.எஸ்.தசநாயக்க மரணமடைந்த படைவீரரின் மனைவி வாழும் வீட்டின் மீது மரமொன்று உடைந்து விழுதல்




ப.வீ /34896 பீ.ஜீ.ஜயமான்ன படைவீரரின் வீட்டின் பக்கச் சுவர் மண் சரிவுக்கு உள்ளாதல்


7.2.3. திடீர் மரணமடைந்த படைவீரர்களுக்கு உதவி வழங்கல்

தொ.இ.	திடீர் மரணமடைந்த படைவீரரின் பெயர்	சேவை இலக்கம்	மாவட்டம்	வழங்கப்பட்ட தொகை
1	பி.குலதுங்க	ப.வீ/7P00675	அனுராதபுரம்	10000.00
2	என்.தர்மதாச	ப.வீ/5D00745	அனுராதபுரம்	10000.00
3	எம்.பி.என்.புண்யசோம	ப.வீ/456566	அனுராதபுரம்	10000.00
4	எம்.ஐ.அப்துல்லா	பொ.கா.52064	அம்பாறை	10000.00
5	காமிணி ரணதுங்க	ப.வீ/42836	களுத்துறை	10000.00
6	ஐ.பி.எம்.குணதிலக்க	ப.வீ/11745	களுத்துறை	10000.00
7	ஜே.கே.பெரேரா	ப.வீ/311345	கேகாலை	10000.00
8	எஸ்.கே.வீரசேகர	ப.வீ/307292	குருநாகல்	10000.00

9	டீ.எல்.சீ.சந்திரலால்	எக்ஸ்எஸ் 8489	கொழும்பு	10000.00
10	அஜித் பர்னாந்து	ப.வீ/453100	கொழும்பு	10000.00
11	கே.ஈ.செனெவிரத்ன	ப.வீ/357158	காலி	10000.00
12	ரீ.சமன் குணதிலக்க	ப.வீ/6Q01276	காலி	10000.00
13	பீ.எம்.எச்.ஜீ.உபசேன	ப.வீ/452353	நுவரெலியா	10000.00
14	எம்.ஆர்.பி.உதயசிறி	ப.வீ/402155	புத்தளம்	10000.00
15	பி.எச்.எம்.குணரத்ன	ப.வீ/308026	புத்தளம்	10000.00
16	பி.கே.எம்.சுகத்	ப.வீ/464581	புத்தளம்	10000.00
17	டப்ளியூ.ஜீ.சோமசிறி	ப.வீ/457211	கண்டி	10000.00
18	டப்ளியூ.எம்.அஜித்	ப.வீ/312556	மொணராகலை	10000.00

பயனாளிகளின் எண்ணிக்கை மாவட்ட ரீதியாக

தொ.இ.	மாவட்டம்	பயனாளிகளின் எண்ணிக்கை
1	அனுராதபுரம்	3
2	அம்பாறை	2
3	களுத்துறை	2
4	கேகாலை	1
5	குருநாகல்	1
6	இரத்தினபுரி	2
7	கொழும்பு	2
8	காலி	3
9	நுவரெலியா	1
10	புத்தளம்	3
11	கண்டி	3
12	மொணராகலை	1



செயற்பாட்டுக் காரணத்தினால் அவயவங்களை இழந்த படைவீரர்கள் திடீர் மரணமடையும் சந்தர்ப்பங்களில் நிதி உதவிகளை வழங்குவதற்கு மேலதிகமாக இராணுவப் படை அல்லது ஏற்புடைய சேவையின் கௌரவத்துடன் இறுதிக் கிரியைகளை மேற்கொள்வதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.





படைவீரர் ஒருவரின் மரணச் சடங்கின் போது இறுதி மரியாதை செலுத்துதல்

7.3. ரணவிரு கிராமங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்

ரணவிரு கிராமங்களில் வதியத் தொடங்கியதன் பின்னர் படைவீரர் குடும்பங்கள் முகங்கொடுக்கும் பிரதான சிக்கலாக அமைவது உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் காணப்படும் சிரமங்களாகும். அதன் பொருட்டு மத்திய அரசாங்கம் மற்றும் அதன் கீழ் பொறுப்புக் கூற வேண்டிய நிறுவனங்களை அறிவுறுத்தி ஏற்புடைய நடவடிக்கைகளை

மேற்கொள்வது தொடர்பில் தலையிட்டு செயற்படுகிறது. அதே போன்று அவர்களது வாழ்க்கை நிலைமையை உயர்த்தும் நோக்கில் குழு மனப்பான்மை விருத்தி அடையும் வகையில் முன்னுரிமை அடிப்படையில் மாகாண மட்டத்தில் சனசமூக நிலையங்களை நிர்மாணித்தல், கலாசார மத்திய நிலையங்களை அமைத்தல், நூலகங்கள் அமைத்தல், சூழல் மத்திய நிலையங்களை அமைத்தல், சமூக நீர்த் திட்டங்கள், உள்ளக வீதிகள் பராமரிப்பு மற்றும் கட்டுமானம் உள்ளடங்கலாக ரணவிரு கிராமங்களின் அத்தியாவசிய வசதிகள் இதன் மூலம் அபிவிருத்தி செய்யப்படுகின்

7.3.1. நாடளாவிய ரணவிரு கிராமங்கள்

தொ.இ.	கிராமத்தின் பெயர்	பிரதேச செயலாளர் பிரிவு	வதியும் குடும்பங்களின் எண்ணிக்கை
1	சாலாவ ரணவிரு கிராமம்	சீத்தாவக்க	108
2	பெலேதகொட ரணவிரு கிராமம்	ஹோமாகம	50
3	கேரகல ரணவிரு கிராமம்	தொம்பே	92
4	வத்துபிட்டிவல ரணவிரு கிராமம்	அத்தனகல்ல	111
5	உடுபில ரணவிரு கிராமம்	மஹர	57
6	வல்போத்தலே ரணவிரு கிராமம்	மீரிகம	25
7	ஹுணுபொல ரணவிரு கிராமம்	அத்தனகல்ல	10
8	நுகேதொலவத்தை ரணவிரு கிராமம்	மீரிகம	38
9	தொம்பகொடை ரணவிரு கிராமம்	ஹொரண	101
10	கல்கெட்டிய – க்ளைட் பிரிவு ரணவிரு கிராமம்	தொடங்கொட	0
11	கிதெல்பிட்டிய மில்லேவ ரணவிரு கிராமம்	ஹொரண	27
12	கோவின்ன ரணவிரு கிராமம்	புலத்சிங்ஹல	7
13	கோப்பியாவத்தை - தேவிருகம ரணவிரு கிராமம்	களுத்துறை	43
14	மில்லனிய தாமிந்தகமுவ ரணவிரு கிராமம்	மில்லனிய	9
15	அகலவத்தை ரணவிரு கிராமம்	அகலவத்தை	1
16	யட்டதொலவத்தை ரணவிரு கிராமம்	மத்துகம	1
17	பர்த் எஸ்டேட் ரணவிரு கிராமம்	இங்கிரிய	19
18	பெப்பிலியகஹலந்தை ரணவிரு கிராமம்	பேருவளை	5
19	குருவிட்டை ரணவிரு கிராமம்	குருவிட்ட	36
20	கலவான ரணவிரு கிராமம்	கலவான	4
21	பலாங்கொடை ரணவிரு கிராமம்	பலாங்கொடை	10
22	மாபெல்ட்டன் வத்தை ரணவிரு கிராமம்	குளியாப்பிட்டி	8
23	ஸ்ம்லைன் ரணவிரு கிராமம்	பன்னல	10
24	தெனவரவத்தை ரணவிரு கிராமம்	மாவத்தகம	10
25	டென்சில் கொப்பேகடுவ ரணவிரு	அம்பன்பொல	10

	கிராமம்		
26	பான்கொல்ல ரணவிரு கிராமம்	இப்பாகமுவ	99
27	சுந்தரகம ரணவிரு கிராமம்	வாரியபொல	7
28	சிலாபம் ரணவிரு கிராமம்	சிலாபம்	11
29	ரம்பேவ ரணவிரு கிராமம்	ரம்பேவ	26
30	கல்னேவ ரணவிரு கிராமம்	கல்னேவ	44
31	மரதன்கடவல ரணவிரு கிராமம்	கெக்கிராவை	34
32	ரணஜயபுர ரணவிரு கிராமம்	கெக்கிராவை	1120
33	பெரக்கும் தியபெதும -	எலஹெர	17
34	பல்லேகெலே ரணவிரு கிராமம்	குண்டசாலை	31
35	விருசஹன ரணவிரு கிராமம்	குண்டசாலை	14
36	ரணவிரு உயன ரணவிரு கிராமம்	குண்டசாலை	30
37	அலுவிஹாரை ரணவிரு கிராமம்	மாத்தளை	12
38	ஜயபுரவிரு - சஹன ரணவிரு கிராமம்	நாவுல	10
39	இராணுவ தேசப்பற்று (லக்கபுரத்தி) கிராமம்	அம்பலாங்கொடை	9
40	லக்கீ விஜேரத்ன கிராமம்	அக்மீமன	24
41	மாப்பலகம ரணவிரு கிராமம்	நாகொட	34
42	வெவஹமந்துவ ரணவிரு கிராமம்	மாத்தறை	7
43	லுணுகம்வெஹர ரணவிரு கிராமம்	லுணுகம்வெஹர	36
44	லுணம ரணவிரு கிராமம்	அம்பலந்தொட்டை	31
45	பெரஹெட்டிய ரணவிரு கிராமம்	ஹாலிஎல	24
46	ரணவிருபுர ரணவிரு கிராமம்	வெல்லவாய	12
47	ஹொரொம்புவ ரணவிரு கிராமம்	மொணராகலை	3
48	நவகம்புர ரணவிரு கிராமம்	அம்பாறை	20
49	வெல்கம்வெஹெர ரணவிரு கிராமம்	நகர மற்றும் கடவத் சத்தர	8

7.4. "ஹெல விரு சுவதரணி" பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டம்

"ஹெல விரு சுவதரணி" நிகழ்ச்சித் திட்டமானது அவயவங்களை இழந்த படைவீரர்கள் மற்றும் உயிர்த் தியாகம் செய்த படைவீரர்களின் நெருங்கிய உறவினர்களின் உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை வலுவான நிலையில் மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

7.4.1. பலன்களை வழங்கும் முறைகள்

ரணவிரு கிராமங்கள் மற்றும் நாடு முழுவதும் பரந்து காணப்படும் மன்றங்களின் உறுப்பினர்களுக்கு இந்த ஆயுர்வேத பிணியாய்வு நிலையங்கள் மூலம்

- போசனை மற்றும் சுகாதாரம் குறித்த விரிவுரைகளை நடாத்துதல்.
- சுதேச மருத்துவ அமைச்சின் அனுசரணையுடன் மூலிகை பானம் வழங்குதல்.

- இனங் காணப்பட்ட நோயாளர்களின் வீடுகளுக்கு வைத்தியர் ஒருவர் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை சென்று சிகிச்சையளிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

இந்த நிகழ்ச்சித் திட்டம் மூலம் நோயாளர்களை இனங் காணுதல், அவர்களுக்கான ஆலோசனைகள் மற்றும் மருத்துவ சிகிச்சைகள் வழங்கவும் பின்னர் வீடுகளுக்கு சென்று ஊனமுற்ற படைவீரர்களுக்கு அவர்கள் குணமாகும் வரை சிகிச்சை அளிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது

7.4.1.1. ஹெலவிரு சுவ தரணி பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டம் - கம்பஹா

ஆயுர்வேத திணைக்களம் மற்றும் ரணவிரு சேவா அதிகார சபை இணைந்து நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தும் "ஹெல விரு சுவதரணி" பிணியாய்வு நிலைய சுகாதார நிகழ்ச்சித் திட்டங்களின் ஆரம்ப நிகழ்வு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் கௌரவ சிசிர ஜயக்கொடி அவர்களின் தலைமையில் கேரகல ரணவிரு கிராமத்தில் இடம்பெற்றது. சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி.குமாரி வீரசேகர அவர்கள் உரை நிகழ்த்தியதோடு, இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்தினார். அத்துடன், பிரதம விருந்தினரான சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் கௌரவ சிசிர ஜயக்கொடி அவர்களும் உரை நிகழ்த்தினார். கேரகல ரணவிரு கிராமத்தினதும் தொம்பே ரணவிரு மன்றத்தினதும் உறுப்பினர்கள் இருநூறுக்கும் மேற்பட்டோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.









7.4.1.2.ஹெலவிரு சுவ தரணி பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டம்–பதுளை

ஆயுர்வேத திணைக்களம் மற்றும் ரணவிரு சேவா அதிகார சபை இணைந்து நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தும் "ஹெல விரு சுவதரணி" பிணியாய்வு நிலைய சுகாதார நிகழ்ச்சித் திட்டங்களின் இரண்டாவது நிகழ்வாக பதுளை மாவட்ட நிகழ்ச்சித் திட்டம் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி ஹாலிஎல சிறி பிம்பாராம விகாரையில் வெற்றிகரமாக இடம்பெற்றது. சுதேச சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்களினால் படைவீரர்களுக்கு ஆரோக்கியமாக வாழ்வது தொடர்பில் விழிப்புணர்வூட்டும் விரிவுரையொன்றுடன் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஊவா மாகாண ஆயுர்வேத ஆணையாளர் மருத்துவர் திருமதி.டில்மா பிரேமதிலக்க உட்பட மருத்துவப் பணிக் குழுவினர்களின் வளப் பங்களிப்புடன் இந்த நிகழ்ச்சித் திட்டம் இடம்பெற்றது





7.4.1.3. "ஹெலவிரு சுவ தரணி" பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டம்– நுவரெலியா

ரணவிரு சேவா அதிகார சபை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு இணைந்து ஏற்பாடு செய்யும் "ஹெலவிரு சுவ" பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டத்தின் நுவரெலியா மாவட்ட நிகழ்ச்சித் திட்டமானது 2022.11.17 ஆம் திகதி ஹங்குரன்கெத்த பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன் போது சுதேச மருத்துவ உத்தியோகத்தரினால் தொற்றா நோய்த் தடுப்பு குறித்து படைவீரர்களுக்கு விழிப்புணர்வூட்டும் விரிவுரையொன்று நடாத்தப்பட்டதோடு, இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணையாக ஊனமுற்ற படைவீரர்களுக்கு செயற்கைக் கால்கள், ஊன்றுகோல்கள், மருத்துவக் காலணிகள் மற்றும் கைத்தடிகள் போன்ற உதவி உபகரணங்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

ஹங்குரன்கெத்த உதவி பிரதேச செயலாளர், உதவி பணிப்பாளர் மற்றும் பிரதேச செயலகத்தின் படைவீரர் விடயப் பொறுப்பு உத்தியோகத்தர், ஹங்குரன்கெத்த சுதேச ஆயுர்வேத மத்திய நிலையத்தின் மருத்துவர் உட்பட மருத்துவப் பணிக்குழுவினர், ரணவிரு சேவா அதிகார சபையின் நுவரெலியா மாவட்ட உத்தியோகத்தர் செல்வி.அஜந்தா ஹேரத் மற்றும் ரணவிரு மன்ற உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



“ஹெலவிரு சுவ” பிணியாய்வு நிலைய நுவரெலியா மாவட்ட நிகழ்ச்சித் திட்டம்



7.4.1.4. “ஹெலவிரு சுவ தரணி” பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டம் – அநுராதபுரம்

“ஹெலவிரு சுவ” பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டத்தின் அனுராதபுர மாவட்டத்தின் முதலாவது நிகழ்ச்சித் திட்டம் ரம்பேவ ரணவிரு கிராமத்தில் 2022.11.18 ஆம் திகதி மிக வெற்றிகரமான முறையில் நடாத்தப்பட்டது. சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சந்தன திலக்கரத்ன, அபிவிருத்தி பணிப்பாளர் தயாநந்தன், உதவி செயலாளர் சமல் தேனுவர, அனுராதபுர சனசமூக சுகாதார பணிப்பாளர் மருத்துவர் ஆனந்த சமரநாயக்க உட்பட மருத்துவ உத்தியோகத்தர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். இதன் போது சுதேச சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் மருத்துவர் திரு.அருண இந்திக்க அவர்களினால் தொற்றா நோய்த் தடுப்பு குறித்து படைவீரர்களுக்கு விழிப்புணர்வூட்டும் விரிவுரையொன்று நடாத்தப்பட்டது.

அதே போன்று இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணையாக ரணவிரு சேவா அதிகார சபையின் வட மத்திய மாகாண பிரதி பணிப்பாளர் திரு.துஷார ஜயசிங்ஹ அவர்களின் தலைமையில் ஊனமுற்ற படைவீரர்களுக்கு செயற்கைக் கால்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைச்சினால் 1.8 மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துகள் வட மத்திய மாகாணத்திற்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.





7.4.1.5. "ஹெலவிரு சுவ தரணி" பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டம்- கம்பஹா உடுபில ரணவிரு கிராமம்

ஹெலவிரு சுவ தரணி பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டங்களின் கம்பஹா மாவட்டத்தின் இரண்டாவது நிகழ்ச்சித் திட்டம் டிசம்பர் மாதம் 04 ஆம் திகதி உடுபில ரணவிரு கிராமத்தின் விகாரையில் இடம்பெற்றது.

"ஹெலவிரு சுவ தரணி" பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாவது கட்டம் கம்பஹா மாவட்டத்தின் கேரகல ரணவிரு கிராமத்தில் 2022.12.11 ஆம் திகதி வெற்றிகரமாக இடம்பெற்றது. கம்பஹா விக்கிரமாரச்சி ஆயுர்வேத வைத்தியசாலையின் மருத்துவர்களினால் இந்த நிகழ்ச்சித் திட்டம் வெற்றிகரமாக நெறிப்படுத்தப்பட்டது.





7.4.1.6. "ஹெலவிரு சுவ தரணி" பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டம்- காலி மாப்பலகம

"ஹெலவிரு சுவ தரணி" பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டத்தின் காலி மாவட்டத்தின் முதலாவது நிகழ்ச்சித் திட்டம் 2022.12.08 ஆம் திகதி மாப்பலகம ரணவிரு கிராமத்தில் நடைபெற்றது. சுகாதார அமைச்சின் தென் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் திருமதி.கருணா ஹேவகே, காலி சனசமூக சுகாதார பணிப்பாளர் மருத்துவர் திருமதி.கயானி மஞ்சுளா மனதுங்க உட்பட மருத்துவ உத்தியோகத்தர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். இதன் போது சுதேச சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் மருத்துவர் ஜகத் விஜித்தமுல்ல மற்றும் ஜீ.வீ.சீ. டீ சில்வா ஆகியோரினால் உடல் மற்றும் உள சுகாதாரம் குறித்து படைவீரர்களுக்கு விழிப்புணர்வூட்டும் இரண்டு விரிவுரைகள் நடாத்தப்பட்டன.





7.4.1.7."ஹெலவிரு சுவ தரணி" பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டம்– மாத்தளை

"ஹெலவிரு சுவ தரணி" பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டத்தின் மாத்தளை மாவட்டத்தின் முதலாவது நிகழ்ச்சித் திட்டம் மன்ற உறுப்பினர்கள் 130 பேரின் பங்குபற்றலுடன் 2022.12.14 ஆம் திகதி அலுவிஹாரை ரணவிரு கிராமத்திலும் மாத்தளை அலுவிஹாரையிலும் நடைபெற்றது.

ரணவிரு சேவா அதிகார சபையின் மாத்தளை மாவட்ட நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் திருமதி.தனுஜா தர்ஷனீ அவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மாத்தளை சனசமூக சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் திருமதி.நயோமி சேனாநாயக்க உட்பட மூன்று வைத்தியர்கள் கலந்து கொண்டனர்.





7.4.1.8."ஹெலவிரு சுவ தரணி" பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டம்– அம்பாறை

"ஹெலவிரு சுவ தரணி" பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டத்தின் அம்பாறை மாவட்ட நிகழ்ச்சித் திட்டம் 2022.12.21 ஆம் திகதி நவகம்புர ரணவிரு கிராமத்தின் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் தமன சனசமூக சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் திருமதி. துல்கா மற்றும் மருத்துவர் செல்வி.தர்ஷிலா உட்பட பணிக்குழு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். இதன் போது சுதேச உடல் மற்றும் உள சுகாதாரம் குறித்து படைவீரர்களுக்கு விழிப்புணர்வூட்டும் விரிவுரை இடம்பெற்றது.

மேலும், இதற்கு இணையாக வருகை தந்திருந்த படைவீரர்களை ஆயுர்வேத வைத்தியர்கள் பரிசோதித்து சிகிச்சை அளித்ததுடன், இந்த நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமானதாக்குவதற்கு தமன, அம்பாறை ரணவிரு மன்றங்களின் உறுப்பினர்கள் ஏறத்தாழ 80 பேர் கலந்து கொண்டனர்.





7.4.1.9."ஹெலவிரு சுவ தரணி" பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டம்– மாத்தறை

"ஹெலவிரு சுவ தரணி" பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டத்தின் மாத்தறை மாவட்ட நிகழ்ச்சித் திட்டமானது மாத்தறை மாவட்ட நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் திரு.எச்.எல்.சீ.ஷிரான் அவர்களின் ஏற்பாட்டில் மாத்தறை பிரதேச செயலகத்தில் 2022.12.20 ஆம் திகதி இடம்பெற்றது.

மாத்தறை பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் திரு.டப்ளியூ.ஜே.பி.அனுர, மாத்தறை ஆயுர்வேத சனசமூக சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் திருமதி.நிஷானி ஹெந்திரிவித்தாரன, மருத்துவர் திரு.என்.ஏ.சேனாதீர, மருத்துவர் திருமதி.சுஜானி கோதாகொட, மருத்துவர் திருமதி.புத்திகா லியனகே மற்றும் ஆயுர்வேத அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.பி.வீ.ரேணுகா ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.




7.4.1.10. "ஹெலவிரு சுவ தரணி" பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டம்- புத்தளம்

"ஹெலவிரு சுவ தரணி" பிணியாய்வு நிலைய நிகழ்ச்சித் திட்டத்தின் புத்தளம் மாவட்ட நிகழ்ச்சித் திட்டமானது 2022.12.28 ஆம் திகதி சிலாபம் விஜயாராம விகாரையில் இடம்பெற்றது.

சனசமூக சுகாதார மேற்பார்வை மருத்துவ உத்தியோகத்தர் நர்மதா திசாநாயக்க, சனசமூக சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் திருமதி.குமாரி ராஜபக்ஷ உட்பட சில வைத்தியர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். இதன் போது சுதேச உடல் மற்றும் உள சுகாதாரம் குறித்து படைவீரர்களுக்கு விழிப்புணர்வூட்டும் விரிவுரை இடம்பெற்றதோடு, மாதாந்தம் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை பிரதேச மட்டத்தில் நடாத்துவதற்கும் கலந்துரையாடப்பட்டது.




08

படைவீரர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சி

8.1. அறிமுகம்

1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள ரணவிரு சேவா அதிகாரசபையின் பணியை அடைந்து கொள்ளுதல் மற்றும் சாதகமான அனைத்து செயல்களையும் விடயங்களையும் புரிதலின் கீழ் படைவீரரின் பெயரை தொடர்ந்தும் நிலைத்திருக்கச் செய்வதற்கு இந்தக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இராணுவப் படை, கடற் படை மற்றும் விமானப் படையைப் போன்றே பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் சேவையாற்றி நாட்டிற்காக உயிர் நீத்த தேசப்பற்று மிகுந்த படைவீரர்கள் மற்றும் தாய்நாட்டின் நிலைப்பேறு பொருட்டு தமது உடல் உறுப்புக்களை தியாகம் செய்த வீர சாகசம் நிறைந்த படைவீரர்களை நினைவுகூர்ந்து தேசத்தின் அஞ்சலியை செலுத்துதல், படைவீரரின் பெயரை தொடர்ந்தும் நிலைத்திருக்கச் செய்தல் போன்றே அவர்களது நலன்புரித் தேவைப்பாடுகள் இந்தக் கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

8.2. தேசிய படைவீரர் நினைவேந்தல் மாதத்தைப் பிரகடனப்படுத்தல்

தேசிய படைவீரர் நினைவேந்தல் மாதத்தைப் பிரகடனப்படுத்தி தேசிய படைவீரர் நினைவுக் கொடியை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஏழாவது நிறைவேற்றதிகாரம் கொண்ட சனாதிபதி, சேனாதிநாயக்க கோட்டாபய ராஜபக்ஷ அவர்களுக்கு 2022.05.06 ஆம் திகதி சனாதிபதி மாளிகையில் அணிவிக்கப்பட்டது. ரணவிரு சேவா அதிகாரசபையின் தலைவர் மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர (ஓய்வுநிலை) அவர்களினால் முதலாவது படைவீரர் நினைவுக் கொடி அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு அணிவிக்கப்பட்டதையடுத்து தேசிய படைவீரர் நினைவேந்தல் மாதத்தின் ஆரம்ப நிகழ்வு பூர்த்தியடைந்தது.

மூன்று தசாப்தங்களுக்கு மேல் நிலவிய பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, சுதந்திர தேசத்திற்காக அர்ப்பணிப்பு செய்த துணிச்சலான படைவீரர்களை நினைவு கூர்ந்து படைவீரர் மாதம் கொண்டாடப்படுகிறது. இலங்கை தேசத்தின் உண்மையான சுதந்திரத்தின் உரிமையாளர்களை நினைவு கூரும் பொருட்டு இலங்கைப் பிரசைகளுக்கு படைவீரர் நினைவுக் கொடியை வழங்குவது இந்தக் கருத்திட்டத்தின் நோக்கமாகும். அதன் மூலம் தேசத்தின் உன்னதமான படைவீரர்களினால் தமது தாய்நாட்டின் ஆட்புல ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் பாதுகாப்பதன் பொருட்டு தமது உயிர்த் தியாகத்தினால் செய்யப்பட்ட அர்ப்பணிப்பை நினைவு கூர்ந்து அவர்களை கௌரவித்தல் இதன் முக்கிய எதிர்பார்ப்பாகும்.







2022 ஆம் ஆண்டின் படைவீரர் கொடி தினத்திற்கு முப்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் பங்களிப்பு செய்யப்பட்டது. அனைத்து மாகாணங்களினதும் ஆளுநர்களின் தலைமையில் மாகாணத்தின் அரச நிறுவனங்கள் மற்றும் ரணவிரு சேவா அதிகாரசபையின் படைவீரர் மன்ற உறுப்பினர்கள், மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் சணச அபிவிருத்தி வங்கி மூலம் இந்தக் கொடிக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

இலங்கை முதலீட்டுச் சபைக்குச் சொந்தமான ஹொரண, அவிசாவளை சீத்தாவக்க, மல்வத்தை திஹாரிய, நிட்டம்புவை வத்துப்பிட்டிவல மற்றும் கொக்கல ஏற்றுமதி செயலாக்க வலயங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் பணிப்பாளர்கள் உட்பட பணிக்குழு உறுப்பினர்கள் மற்றும் தொழிற்பேட்டையில் பணி புரியும் ஊழியர்களினால் படைவீரர் தினத்தின் பொருட்டு படைவீரர் கொடிக்கான நிதி சார் பங்களிப்பு வழங்கப்பட்டது.








8.3. படைவீரர் நினைவேந்தல் தின நிகழ்வு

“13 ஆவது படைவீரர் நினைவேந்தல்” நிகழ்வானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிறைவேற்றதிகாரம் கொண்ட சனாதிபதி, சேனாதிநாயக்க கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் பத்தரமுல்லை பாராளுமன்ற வளாகத்திற்கு அருகாமையில்

படைவீரர் நினைவுத் தூபிக்கு முன்னால் 2022 மே மாதம் 19 ஆம் திகதி எளிமையாகவும் பெருமிதத்துடனும் இடம்பெற்றது.

மூன்று தசாப்தங்களுக்கு மேல் நிலவிய எல்.ரீ.ரீ.ஈ.பயங்கரவாதத்தைத் தோற்கடித்து வீரம் செறிந்த படைவீரர்கள் கைப்பற்றிய போர் வெற்றிக்கு 2022 ஆம் ஆண்டில் 13 வருடங்கள் பூர்த்தியாகின்றது. அதன் போது இராணுவப் படை, கடற் படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு படையணியின் ஏறத்தாழ இருபத்தெட்டாயிரம் (28000) படைவீரர்கள் சுதந்திரத்திற்காக உயிர் நீத்துள்ளதோடு, இருபத்தேழாயிரத்திற்கும் (27000) மேற்பட்ட படைவீரர்கள் போரின் போது ஊனமுற்றனர். முப்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் படைவீரர்களின் பங்குபற்றலுடன் தாய்நாட்டின் படைவீரர்கள் இந்த நிகழ்வின் போது கௌரவிக்கப்பட்டனர்.

ரணவிரு சேவா அதிகாரசபையின் தலைவர் மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர (ஓய்வுநிலை) அவர்களினால் அதிமேதகு சனாதிபதி அவர்கள் வைபவ இடத்திற்கு அழைத்து வரப்பட்டார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வுநிலை), சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளர், மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் (ஓய்வுநிலை), பாதுகாப்பு பதவி நிலை பிரதானி மற்றும் இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா, கடற் படைத் தளபதி வைஸ் அத்மிரால் நிஷாந்த உலுகேதென்ன, விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரண, பொலிஸ்மா அதிபர் சீ.டீ.விக்கிரமரத்ன, சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் ஜெனரல் மேஜர் ஜெனரல் ரஞ்சன் லமாஹேவாகே (ஓய்வுநிலை) மற்றும் ரணவிரு சேவா அதிகாரசபையின் தலைவர் மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர (ஓய்வுநிலை) அவர்களினால் படைவீரர் நினைவுத் தூபியின் காலடியில் மலர்கள் வைக்கப்பட்டு உயிரிழந்த படைவீரர்களுக்கு மரியாதை செலுத்தப்பட்டது.


























8.4. மயிலப்பிட்டி ரணவிரு நினைவுப் பூங்காவின் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்

இலங்கை தேசத்தை பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து மீட்கையில் உயிர் நீத்த படைவீரர்களை நினைவு கூர்வதற்காக நிர்மாணிக்கப்பட்ட இலங்கையின் முதலாவது படைவீரர் நினைவுப் பூங்கா இதுவாகும். ரம்மியமான நிலப்பரப்பில் பேணப்பட்டு வரும் மயிலப்பிட்டி ரணவிரு நினைவுப் பூங்காவில் உயிர் நீத்த அனைத்துப் படைவீரர்களினதும் பெயர்கள் கற் பலகைகளில் பொறிக்கப்பட்டு படைவீரர்களை நினைவு கூருவதற்காக நினைவுத் தூபியுடன் படைவீரர் நினைவுப் பூங்கா நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 2003 ஆம் ஆண்டு தேசிய படைவீரர் நினைவேந்தல் நிகழ்வு இங்கு இடம்பெற்றது.

ரணவிரு சேவா அதிகாரசபையினால் இந்தப் பூங்காவின் நீர், மின்சார மற்றும் பராமரிப்பு செலவுகள் செய்யப்படுவதோடு, பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு இலங்னை இராணுவப் டையின் ஒத்துழைப்பு வழங்கப்படுகிறது.

8.4.1. 2022 ஆம் ஆண்டில் மயிலப்பிட்டி பூங்காவின் பராமரிப்பு நடவடிக்கைகள்

மயிலப்பிட்டி பூங்காவின் பாதுகாப்பிற்காகப் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்கு முறைமையைப் புதுப்பித்தல்.





பூங்காவின் பாதுகாப்பிற்காக இராணுவப் படையினரின் முயற்சியில் பாதுகாப்பு வேலியை நவீனமயப்படுத்தல்

09

ஓய்வுபெற்ற படைவீரர் நலன்புரிப் பிரிவு

9.1. அறிமுகம்

நாட்டிற்காகத் தமது இளமைக் காலத்தை அர்ப்பணித்து ஓய்வு பெறும் படைவீரர்கள் அவர்களால் வளர்த்துக் கொள்ளப்பட்ட திறன்களைப் பயன்படுத்தி தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுத்துவதற்கு விவசாய மற்றும் தொழிநுட்ப தொழில்முனைவோராக உருவாக்குவதை நோக்காகக் கொண்டு செயலமர்வுகள், ஆலோசனை சேவைகள், பயிற்சி அமர்வுகள் இந்தப் பிரிவுனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மாவட்ட மட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள படைவீரர் மன்றங்களின் உறுப்பினர்களைப் பங்கு கொள்ளச் செய்து அவர்களை தொழில்முனைவோராக வலுப்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டலை வழங்குதல் மற்றும் அறிவைப் பெற்றுக் கொடுத்தல் இதன் அடிப்படை நோக்கமாகும். இதன்பொருட்டு பாதுகாப்பு அமைச்சு, முப்படை, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, விவசாய திணைக்களம் மற்றும் இலங்கை மகாவலி அதிகார சபை என்பன ரணவிரு சேவா அதிகாரசபையுடன் கைகோர்த்துள்ளன.

9.2.2022 ஆம் ஆண்டில் செயலாற்றுகை

தொ.இ.	திகதி	விபரம்	மாவட்டம்
1	2022.02.07	படைவீரர்களுக்கு 7000 தென்னங் கன்றுகள் விநியோகம்	அனைத்து மாவட்டங்களுக்கும்
2	2022.02.17	தேனீ வளர்ப்பு பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	மாத்தளை
3	2022.02.23	கரிம உரம், வீட்டுத் தோட்டம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	பொலன்னறுவை
4	2022.03.24		அம்பாறை
5	2022.03.31		நுவரெலியா
6	2022.04 26		கொழும்பு
7	2022.04.27		கேகாலை
8	2022.09.06		குருநாகல்
9	2022.10.05		அனுராதபுரம்
10	2022.10.14		இரத்தினபுரி
11	2022.11.03		இரத்தினபுரி
12	2022.11.04		இரத்தினபுரி
13	2022.11.30		இரத்தினபுரி
14	2022.12.16		பொலன்னறுவை
15	2022.12.29		குருநாகல்

16	2022.03.11	கரிம நெற் செய்கை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	இரத்தினபுரி
17	2022.03.25	கறவை மாடு வளர்ப்பு	அம்பாறை

9.2.1. 2022 ஆம் ஆண்டில் தேனீ பெட்டிகள் வழங்குதல்

தொ.இ.	திகதி	மாவட்டம்	படைவீரரின் பெயர்	தேனீ பெட்டிகளின் எண்ணிக்கை
1	2022.11.17	கேகாலை	டீ.எஸ்.என்.சமன் வத்தகே	10 பெட்டிகள்
2	2022.11.17	கம்பஹா	டீ.ஆர்.அருண குமார ஜயவர்தன	15 பெட்டிகள்
3	2022.12.14	இரத்தினபுரி	எம்.நிமல் ரஞ்சித்	15 பெட்டிகள்

9.3. 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

9.3.1.தேனீ வளர்ப்பு பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – மாத்தளை

ரணவிரு சேவா அதிகாரசபையின் தொழில்முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் மாத்தளை மாவட்டத்தை மையமாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட தேனீ வளர்ப்பு குறித்த விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டம் 2022 பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி மாத்தளை நாலந்தா பண்ணையில் நடாத்தப்பட்டது.

தேனீ வளர்ப்பு மற்றும் அதனுடன் தொடர்புபட்ட வியாபார வாய்ப்புக்கள் குறித்து விழிப்புணர்வூட்டும் இந்த விசேட நிகழ்ச்சித் திட்டத்தில் மாத்தளை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி படைவீரர் மன்றங்களின் உறுப்பினர்கள் ஏறத்தாழ 30 பேர் கலந்து கொண்டனர். இந்தக் கருத்திட்டத்திற்குத் தேவையான விரிவுரை உதவிகள் தேனீ வளப் பாதுகாப்பு நிறுவனத்தினால் வழங்கப்பட்டன. நடைமுறைப் பயிற்சியொன்றின் பின்னர் தேனீ வளர்ப்புக்குத் தேவையான உபகரணங்கள் படைவீரர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. ரணவிரு சேவா அதிகாரசபையைப் பிரதிநிதித்துவப்படுத்தி தொழில்முயற்சி அபிவிருத்தி பிரிவின் திட்டப் பொறுப்பு உத்தியோகத்தர் ஸ்கொட்ரன் லீடர் பியுமால் ரணசிங்ஹ அவர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டார்.





9.3.2. கரிம உரம், வீட்டுத் தோட்டச் செய்கை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – பொலன்னறுவை

ரணவிரு சேவா அதிகாரசபையின் தொழில்முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் பொலன்னறுவை மாவட்டத்தில் அவயவங்களை இழந்த படைவீரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நெருங்கிய உறவினர்களுக்கு கரிம நெற் செய்கை மூலம் அதிக விளைச்சலைப் பெற்றுக் கொள்ளக் கூடிய எளிமையான தொழிநுட்ப முறைகள் உள்ளடங்கிய நடைமுறைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் முதலாவது நிகழ்ச்சித் திட்டம் மெதிரிகிரிய, பிசோபுர கிராமத்தில் 2022.02.23 ஆம் திகதி இடம்பெற்றது.

கரிம நெற் செய்கை மூலம் அதிக விளைச்சலைப் பெற்றுக் கொள்ளக் கூடிய எளிமையான தொழிநுட்ப முறைகளைப் பயன்படுத்தி விவசாயத்தில் ஈடுபட்டுள்ள அவயவங்களை இழந்த படைவீரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வூட்டும் இந்த நிகழ்ச்சித் திட்டம் ரணவிரு சேவா அதிகாரசபையின் தலைவர் மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர (ஓய்வுநிலை) அவர்களின் ஆலோசனையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

நச்சுத் தன்மையற்ற இயற்கை விவசாயத்திற்கென சமூகத்திற்கு முன்னுதாரணமாக அமையக் கூடிய கருத்திட்டமொன்றாகவும் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது. நாடு முழுவதும் பரந்து வாழும் போரினால் காயமுற்ற பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகியுள்ள படைவீரர்களை ஒரு சமூக எடுத்துக்காட்டாகக் கொண்டு ஏனைய விவசாயிகளுக்கும் இதில் கலந்து கொள்வதற்கான ஓர் ஊக்குவிப்பாக இந்த நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்குத் தேவையான வளப் பங்களிப்பு மகாவலி அதிகார சபையினால் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டமானது ரணவிரு சேவா அதிகாரசபையின் தொழில்முயற்சி அபிவிருத்தி பிரிவின் விசேட பயிற்சி உத்தியோகத்தர் கோப்ரல் சுமித் குமார அவர்களினால் நெறிப்படுத்தப்படுவதுடன், மாகாண மற்றும் மாவட்ட உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் படைவீரர் மன்ற உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் இந்த நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.





9.3.3. கரிம உரம், வீட்டுத் தோட்டச் செய்கை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – பொலன்னறுவை மாவட்டம் (தியபெதும)





9.3.4. கரிம உரம், வீட்டுத் தோட்டச் செய்கை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – எம்பிலிபிட்டிய

ரணவிரு சேவா அதிகாரசபையின் தொழில்முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் இரத்தினபுரி மாவட்டத்தில் அவயவங்களை இழந்த படைவீரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நெருங்கிய உறவினர்களுக்கு சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்திற்கு இணையாக கரிம உரப் பாவனை, வீட்டுத் தோட்டச் செய்கை மற்றும் நெற் செய்கையை மேம்படுத்தும் நாடளாவிய நிகழ்ச்சித் திட்டங்களின் இரண்டாவது நிகழ்ச்சித் திட்டம் எம்பிலிப்பிட்டிய படைவீரர் மன்ற செயலாளர் திருமதி.என்.டீ.எஸ். சுதர்ஷனீ அவர்களின் இல்லத்தில் 2022.10.14 ஆம் திகதி இடம்பெற்றது.

கரிம உரப் பாவனை மூலம் அதிக விளைச்சலைப் பெற்றுக் கொள்ளக் கூடிய எளிமையான தொழிநுட்ப முறைகள் உள்ளடங்கிய நடைமுறைப் பயிற்சி இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது. நச்சுத் தன்மையற்ற இயற்கை விவசாயத்திற்கென சமூகத்திற்கு முன்னுதாரணமாக அமையக் கூடிய கருத்திட்டமொன்றாகவும் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

நாடு முழுவதும் பரந்து வாழும் போரினால் காயமுற்ற பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகியுள்ள படைவீரர்களை ஒரு சமூக எடுத்துக்காட்டாகக் கொண்டு ஏனைய விவசாயிகளுக்கும் இதில் கலந்து கொள்வதற்கான ஓர் ஊக்குவிப்பாக இந்த நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சித் திட்டமானது ரணவிரு சேவா அதிகாரசபையின் தொழில்முயற்சி அபிவிருத்தி பிரிவின் விசேட பயிற்சி உத்தியோகத்தர் கோப்ரல் சுமித் குமார அவர்களினால்

நெறிப்படுத்தப்படுவதுடன், தேவையான வளப் பங்களிப்பு மகாவலி அதிகார சபையினால் வழங்கப்படுகிறது.

சப்பிரகமுவ மாகாண பிரதிப் பணிப்பாளர் ரோஹண விஜேரத்ன, இரத்தினபுரி மாவட்ட நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர், கயான் விஜேவிக்கிரம மற்றும் எம்பிலிப்பிட்டிய, கொலன்னாவை மற்றும் கொடக்கவல படைவீரர் மன்றங்களின் உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.





9.3.5. கரிம உரம், வீட்டுத் தோட்டச் செய்கை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – எஹெலியகொட

ரணவிரு சேவா அதிகாரசபையின் தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் விசேட பிரிவின் பங்களிப்பில் செயற்பாட்டுக் கடமைகளின் போது அவயவங்களை இழந்த படைவீரர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்களைக் கொண்டு கரிம உரப் பாவனை, வீட்டுத் தோட்டச் செய்கை மற்றும் நெற் செய்கையை மேம்படுத்தும் நாடளாவிய நிகழ்ச்சித் திட்டங்களின் மற்றுமொரு நிகழ்ச்சித் திட்டம் எஹெலியகொட படைவீரர் மன்ற செயலாளர் டப்ளியூ.எல்.ஏ.சுசந்த குமார அவர்களின் முழுமையான ஏற்பாட்டில் 2022.11.03 ஆம் திகதி எஹெலியகொட சுமனதிஸ்சாராமவில் இடம்பெற்றது.

எஹெலியகொட படைவீரர் மன்ற உறுப்பினர்கள் ஏறத்தாழ 20 பேர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். ரணவிரு சேவா அதிகாரசபையின் விசேட விவசாயப் பயிற்சி போதனாசிரியர் கோப்ரல் சுமித் குமார அவர்கள் மற்றும் எஹெலியகொட வலய விவசாய உத்தியோகத்தர் மொஹான் சமரசிறி அவர்களின் வளப் பங்களிப்புடன் இந்த நிகழ்ச்சித் திட்டம் வெற்றிகரமாக இடம்பெற்றது.





9.3.6. கரிம உரம், வீட்டுத் தோட்டச் செய்கை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – இரத்தினபுரி மாவட்டம் (கஹவத்தை, நிவித்திகல)





9.3.7. 2022.03.11 ஆம் திகதி கரிம நெற்செய்கை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் இரத்தினபுரி மாவட்டம் - எம்பிலிப்பிட்டிய மன்றம்





9.3.8. கரிம உரம் மற்றும் வீட்டுத் தோட்டச் செய்கை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – அனுராதபுரம்





9.3.9. கரிம உரம் மற்றும் வீட்டுத் தோட்டச் செய்கை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – அம்பாறை மாவட்டம்

ரணவிரு சேவா அதிகாரசபையின் ஓய்வு பெற்ற படைவீரர் தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் விசேட திட்டப் பிரிவின் பங்களிப்பில் செயற்பாட்டுக் கடமைகளின் போது அவயவங்களை இழந்த படைவீரர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களைக் கொண்டு கரிம உரப் பாவனை மூலம் வீட்டுத் தோட்டச் செய்கை மற்றும் நெற் செய்கையை மேம்படுத்தும் நாடளாவிய நிகழ்ச்சித் திட்டங்களின் நான்காவது நிகழ்ச்சித் திட்டம் அம்பாறை மாவட்டத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் தரணி நிவர்த்திகா அவர்களின் ஏற்பாட்டில் மஹஓயா மன்ற உறுப்பினரான படைவீரர் திரு.ஏ.எம்.சுமதிகால அவர்களின் இல்லத்தில் 2022.03.24 ஆம் திகதி இடம்பெற்றது.

ரணவிரு சேவா அதிகாரசபையின் கோப்ரல் சுமித் குமார அவர்கள் மற்றும் மகாவலி அதிகார சபை யின் உத்தியோகத்தர்களின் வளப் பங்களிப்புடன் நடாத்தப்பட்ட இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தின் மஹஓயா மன்ற உறுப்பினர்கள் 25 பேர் பங்குபற்றினர்.

ரணவிரு சேவா அதிகாரசபையின் தலைவர் மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர அவர்களின் எண்ணக்கருவொன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இந்த நிகழ்ச்சித் திட்டம் மூலம் ஓய்வு பெற்ற அவயவங்களை இழந்த படைவீரர்களை நாட்டின் அபிவிருத்தியில் ஈடுபடுத்தி சமூகத்திற்கு முன்னுதாரணமொன்றை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.





9.3.10. உஹன படைவீரர் மன்ற உறுப்பினர்களுக்கான கரிம நெற்செய்கை குறித்த விசேட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்

ரணவிரு சேவா அதிகாரசபையின் ஓய்வு பெற்ற படைவீரர் தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் விசேட திட்டப் பிரிவின் பங்களிப்பில் செயற்பாட்டுக் கடமைகளின் போது அவயவங்களை இழந்த படைவீரர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களைக் கொண்டு கரிம உரப் பாவனை மூலம் வீட்டுத் தோட்டச் செய்கை மற்றும் நெற் செய்கையை மேம்படுத்தும் நாடளாவிய நிகழ்ச்சித் திட்டங்களின் மூன்றாவது நிகழ்ச்சித் திட்டம் அம்பாறை மாவட்டத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் தரணி நிவர்த்திகா அவர்களின் ஏற்பாட்டில் உஹன மன்ற உறுப்பினர்ரான படைவீரர் திரு.எல்.சமன்குமார அவர்களின் இல்லத்தில் 2022 மார்ச் மாதம் 24 ஆம் திகதி இடம்பெற்றது.

ரணவிரு சேவா அதிகாரசபையின் கோப்ரல் சுமித் குமார அவர்கள் மற்றும் மகாவலி அதிகார சபை உத்தியோகத்தர்களின் வளப் பங்களிப்புடன் இடம்பெற்ற இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் அம்பாறை மாவட்டத்தின் உஹன ரணவிரு மன்ற உறுப்பினர்கள் 45 பேர் கலந்து கொண்டனர்.

9.3.11. கறவை மாடு வளர்ப்பு பற்றிய பயிற்சி செயலமர்வு – அம்பாறை மாவட்டம்

அம்பாறை மாவட்டத்தின் மஹஓயா மன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமைய தற்போது கறவை மாடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள 25 படைவீரர் உறுப்பினர்களுக்கு கறவை மாடு வளர்ப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழிநுட்ப அறிவை வழங்குதல் குறித்த நிகழ்ச்சித் திட்டம் 2022 மார்ச் மாதம் 25 ஆம் திகதி திரு.ஏ.எம்.சுமதிபால அவர்களின் இல்லத்தில் இடம்பெற்றது.

ரணவிரு சேவா அதிகாரசபையின் அம்பாறை மாவட்டத்தின் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் தரணி நிவர்த்திகா அவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்குத் தேவையான ஆலோசனை உதவி மஹஓயா கால்நடை உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டது.




9.3.12. கரிம விவசாயம் குறித்த விசேட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் – நுவரெலியா

ரணவிரு சேவா அதிகாரசபையின் ஓய்வு பெற்ற படைவீரர் தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் விசேட திட்டப் பிரிவின் பங்களிப்பில் செயற்பாட்டுக் கடமைகளின் போது அவயவங்களை இழந்த படைவீரர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களைக் கொண்டு கரிம உரப் பாவனை மூலம் வீட்டுத் தோட்டச் செய்கை மற்றும் நெற் செய்கையை மேம்படுத்தும் நாடளாவிய நிகழ்ச்சித் திட்டங்களின் ஐந்தாவது நிகழ்ச்சித் திட்டம் நுவரெலியா மாவட்ட நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் செல்வி.அஜந்தா ஹேரத் அவர்களின் ஏற்பாட்டில் 2022.03.31 ஆம் திகதி நுவரெலியா மாவட்டத்தின் வலப்பனை பிரதேசத்தில் இடம்பெற்றது.

ரணவிரு சேவா அதிகாரசபையின் கோப்ரல் சுமித் குமார அவர்கள் மற்றும் விவசாய திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் வளப் பங்களிப்புடன் இடம்பெற்ற இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் நுவரெலியா மாவட்டத்தின் ரணவிரு மன்ற உறுப்பினர்கள் 30 பேர் கலந்து கொண்டனர்.




9.3.13. கரிம உரப் பாவனை வீட்டுத் தோட்டச் செய்கை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – குருநாகல் மாவட்டம்

படைவீரர் மன்ற உறுப்பினர்களை ஊக்கப்படுத்தி கரிம உரப் பாவனை மூலம் வீட்டுத் தோட்டச் செய்கை மற்றும் நெற் செய்கையை மேம்படுத்தும் நாடளாவிய நிகழ்ச்சித் திட்டங்களின் மற்றுமொரு நிகழ்ச்சித் திட்டம் பன்னல படைவீரர் மன்றத் தலைவரின் இல்லத்தில் 2022.09.26 ஆம் திகதி இடம்பெற்றது.

ரணவிரு சேவா அதிகாரசபையின் ஓய்வு பெற்ற படைவீரர் தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் விசேட திட்டப் பிரிவின் கோப்ரல் சுமித் குமார அவர்களின் ஆலோசனையில் இடம்பெற்ற இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு பன்னல வலய விவசாய உத்தியோகத்தர்களின் வளப் பங்களிப்பு வழங்கப்பட்டது.

குருநாகல் மாவட்ட நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் திரு.சத்சர பத்திராஜ அவர்களின் ஒருங்கிணைப்பில் இடமபெற்ற இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் பன்னல மன்ற உறுப்பினர்கள் 20 பேர் கலந்து கொண்டனர்.





9.3.14. கரிம உரப் பாவனை மற்றும் வீட்டுத் தோட்டச் செய்கை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – இரத்தினபுரி மாவட்டம் (இரத்தினபுரி நகரம்)





9.3.15. கரிம உரப் பாவனை மற்றும் வீட்டுத் தோட்டச் செய்கை குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – குருநாகல் மாவட்டம் அலவ்வ




9.3.16. சகல மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் 7000 தென்னங் கன்றுகளை படைவீரர்களுக்குப் பகிர்ந்தளித்தல்






10

பெற்றோர் பராமரிப்பு திட்டம்

10.1. அறிமுகம்

யுத்தத்தின் போது பயங்கரவாத தாக்குதலுக்கு இலக்காகி உயிர் நீத்த, காணாமல் போன மற்றும் அங்கவீன நிலைமைக்கு உள்ளாகி மருத்துவக் காரணங்களினால் ஓய்வு பெற்ற ரணவிரு சேவா அதிகார சபைச் சட்டத்தின் கீழ் கொள்ளப்படும் படைவீரர்களின் உயிர் வாழும் பெற்றோர்களுக்குச் செலுத்தப்படும் பெற்றோர் பராமரிப்புக் கொடுப்பனவாக 750.00 ரூபா மாதமொன்றிற்கு ஒரு தடவை ரணவிரு சேவா அதிகார சபையின் பெற்றோர் பராமரிப்புப் பிரிவின் மூலம் வழங்கப்படுகிறது. இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி போன்ற அரச வங்கிகளினால் வழங்கப்படும் பெற்றோர் பராமரிப்புக் கணக்கிற்கு மாத்திரமே இந்தக் கொடுப்பனவு வரவு வைக்கப்படும்.

படைவீரர்களின் குடும்பமொன்றில் பல உறுப்பினர்கள் இருந்த போதிலும் படைவீரரின் உயிர் வாழும் தாய் மற்றும் தந்தைக்கு வெவ்வேறாக மாதமொன்றிற்கு 750 ரூபா வீதமே கிடைக்கப்பெறும். படைவீரரின் தாய் அல்லது தந்தை உயிர் வாழும் வரை மாத்திரமே இந்தக் கொடுப்பனவு உரித்தாகும் என்பதோடு, வேறு எவருக்கும் இந்தக் கொடுப்பனவை மாற்ற முடியாது. தாய் தந்தையர் இறந்தவுடன் உடனடியாக ஏற்புடைய வங்கிக்கு பாஸ் புத்தகத்தை மீள ஒப்படைத்தல் வேண்டும் என்பதோடு, இறந்தவரின் மரணச் சான்றிதழ் பிரதியொன்றை ரணவிரு சேவா அதிகார சபையின் பெற்றோர் பராமரிப்புப் பிரிவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

ஒவ்வொரு வருடமும் ஜூன் 15 மற்றும் டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் 06 மாதங்களுக்கு ஒரு தடவை கொடுப்பனவைப் பெற்றுக் கொள்பவர் உயிர் வாழ்கின்றார் என்பதை கிராம உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்ட உயிர் வாழ்வுச் சான்றிதழை ரணவிரு சேவா அதிகார சபையின் பெற்றோர் பராமரிப்புப் பிரிவிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

10.2 கொடுப்பனவிற்கான தகைமைகள்

I. யுத்தத்தின் போது பயங்கரவாத தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த மற்றும் காணாமல் போன முப்படை மற்றும் பொலிஸ் படைவீரர்களின் பெற்றோர்களுக்கும் பயங்கரவாத தாக்குதலுக்கு இலக்காகி மருத்துவக் காரணங்களினால் ஓய்வு பெற்ற ஊனமுற்ற முப்படை மற்றும் பொலிஸ் படைவீரர்களின் பெற்றோர்களுக்கும் இந்தக் கொடுப்பனவு உரித்தாகும்.

II. படைவீரர்களாக சேவையாற்றும் பிள்ளைகள் எத்தனை பேர் இருந்தாலும் படைவீரரின் உயிர் வாழும் தாய் மற்றும் தந்தைக்கு வெவ்வேறாக மாதமொன்றிற்கு 750 ரூபா வீதமே கிடைக்கப்பெறும்.

III. உயிரிழந்த படைவீரர் மற்றும் படைவீரராக சேவையாற்றும் உயிர் வாழும் பிள்ளை ஒருவர் இருப்பின் உயிரிழந்த படைவீரர் சார்பாக கொடுப்பனவு வழங்கப்படும்.

IV. கொடுப்பனவைப் பெற்றுக் கொள்பவர் 06 மாதங்களுக்கு ஒரு தடவை ஒவ்வொரு வருடமும் ஜூன் 15 மற்றும் டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் உயிர் வாழ்கின்றார் என்பதற்கான சான்றிதழை கிராம உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தியதன் பின்னர் ரணவிரு சேவா அதிகார சபையின் பெற்றோர் பராமரிப்புப் பிரிவிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

V. தாய், தந்தை உயிர் வாழும் வரை மாத்திரமே இந்தக் கொடுப்பனவு உரித்தாகும் வேறு எவருக்கும் இந்தக் கொடுப்பனவை மாற்ற முடியாது. தாய் தந்தையர் இறந்தவுடன் உடனடியாக ஏற்புடைய வங்கிக்கு பாஸ் புத்தகத்தை மீள ஒப்படைத்தல் வேண்டும் என்பதோடு, இறந்தவரின் மரணச் சான்றிதழ் பிரதியொன்றை ரணவிரு சேவா அதிகார சபையின் பெற்றோர் பராமரிப்புப் பிரிவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

10.2.1. பெற்றோர் பராமரிப்புக் கொடுப்பனவிற்குத் தேவையான ஆவணங்கள்

I. பெற்றோர் பராமரிப்பு விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்தல்
II. உயிரிழந்த படைவீரர் எனின், உண்மைப் பிரதி என உறுதிப்படுத்தப்பட்ட படைவீரரின் மரணச் சான்றிதழின் நிழற் பிரதி
III. பயங்கரவாத தாக்குதலுக்கு இலக்காகி மருத்துவக் காரணங்களினால் ஓய்வு பெற்ற ஊனமுற்ற படைவீரர் எனின், படைவீரரின் அங்கவீனத்தின் சதவீத அறிக்கை அல்லது சேவையாற்றிய சேவை நிலையத்திலிருந்து பெற்றுக் கொண்ட இ.ப.நோ. 21 அல்லது சபையிடம் சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தின் பிரதி)
IV. உண்மைப் பிரதி என உறுதிப்படுத்தப்பட்ட படைவீரரின் பிறப்புச் சான்றிதழின் நிழற் பிரதி
V. தாய் தந்தையரின் தேசிய அடையாள அட்டைகளின் பிரதிகள்
VI. ஏற்புடைய வங்கியினால் உறுதிப்படுத்தப்பட்ட பெற்றோர் பராமரிப்புக் கணக்குகளின் பிரதிகள்

மேற்குறித்தத் தகைமைகளைப் பூர்த்தி செய்த படைவீரர்களின் பெற்றோர்களுக்குப் பின்வரும் ஒழுங்கில் பெற்றோர் பராமரிப்புக் கொடுப்பனவு செலுத்தப்படும்.

I. படைவீரர்களின் பெற்றோர்களினால் மாதாந்தம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் எழுதுநரினால் பரிசீலிக்கப்பட்டு ரணவிரு சேவா அதிகார சபைச் சட்டத்திற்குரிய ஆவணங்கள் முழுமையாகக் கொண்ட விண்ணப்பப் படிவம் கணனிமயப்படுத்துவதற்காக வழங்கப்படும்.
II. ஆவணங்கள் முழுமையாகக் கொண்ட விண்ணப்பப் படிவங்கள் கணனி இயக்குபவரினால் கணனிமயப்படுத்தப்படும்.
III. கணனிமயப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் மீளவும் பரிசீலிக்கப்படும்.
IV. பிரிவுத் தலைவரினால் தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் மற்றும் ஏற்புடைய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு சான்றுப்படுத்தப்படும்.

V. தலைவரின் அனுமதிக்காக பிரிவுத் தலைவரினால் அனுப்பி வைக்கப்படும் கணனிமயப்படுத்தப்பட்ட படைவீரர்களின் தரவுகள் தலைவரின் அனுமதியின் பின்னர் செயலிலுள்ள கணக்காக உறுதிப்படுத்தப்படும்.

10.2.2 அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் முறை


I. மேற்குறித்தவாறு படைவீரர்களின் பெற்றோர்களின் விண்ணப்பப் படிவங்கள் கணனிமயப்படுத்தல் செயன்முறையின் பின்னர் பின்வருமாறு பெற்றோர் பராமரிப்புத் திட்டத்தை மாதாந்தம் வரவு வைப்பதற்கு வங்கி உறுதிச்சீட்டு மூலம் அனுமதி பெறப்படும்.

II. பிரிவுத் தலைவரினால் கொடுப்பனவு பொழிப்பு தலைவர் அல்லது பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்படும்.


III. தலைவர் அல்லது பணிப்பாளரினால் அதற்கான அனுமதி வழங்கப்படும்.

IV. கொடுப்பனவு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் உதவிப் பணிப்பாளரினால் (நிதி) மாதாந்த பெற்றோர் பராமரிப்புக் கொடுப்பனவை வங்கியில் வைப்புச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

10.3. 2022 ஆம் ஆண்டில் பணத்தை வரவு வைத்தல்



10.4.2022 ஆம் ஆண்டில் பயனாளிகளின் எண்ணிக்கை




11

விருசர சிறப்புரிமை அட்டைகள் பிரிவு

11.1 விருசர சிறப்புரிமை அட்டைத் திட்டத்தின் நோக்கம்

இலங்கையின் இறையாண்மை மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புவதன் பொருட்டு செயற்பாட்டுக் கடமையின் போது உயித் தியாகம் செய்த மற்றும் ஊனமுற்ற முப்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் படைவீரர்கள் மற்றும் அவர்களின் நெருங்கிய உறவினர்களின் நலன்புரியை உயர்த்தும் அரச கொள்கைக்கு அமைய பாதுகாப்பு அமைச்சின் முழுமையான மேற்பார்வையின் கீழ் ரணவிரு சேவா அதிகார சபையினால் மேற்குறித்த படைவீரர்களுக்கு உரிய கௌரவத்தை அளித்தல் மற்றும் அந்த நடவடிக்கைகளை முன்னருமை அடிப்படையில் நிறைவேற்றும் ஒரு செயற்பணியாக "விருசர சிறப்புரிமை அட்டை" வழங்கப்படுகிறது.

11.2. விருசர அட்டைகளை வழங்கும் கட்டங்கள்



முதற் கட்டம் – யுத்தக் காலப் பகுதியில் முப்படை, பொலிஸ் திணைக்களம் மற்றும் சிவில் பாதுகாப்பு படையணியின் சேவையில் ஈடுபட்டிருக்கையில் செயற்பாட்டின் போது உயிர்த் தியாகம் செய்த மற்றும் காணாமற் போன படைவீரர்களின் நெருங்கிய உறவினர்கள் அல்லது பாதுகாவலருக்கு மற்றும் செயற்பாட்டின் போது அங்கவீன நிலைக்கு உள்ளான படைவீரர்களின் நலனை முன்னிட்டு முதலாவது கட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அட்டையைப் பெற்றுக் கொள்கையில் படைவீரர் மன்றங்கள் ஊடாக மாவட்டத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் மூலம் கீழ் ரணவிரு சேவா அதிகார சபையிடம் சமர்ப்பித்து அல்லது கீழ் ரணவிரு சேவா அதிகார சபைக்கு வருகை தந்து பெற்றுக் கொள்ளலாம்.

இரண்டாவது கட்டம் – 1983 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரை முப்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் சிறந்த நடத்தையுடன் சேவையாற்றி ஓய்வு பெற்ற மற்றும் குறித்த காலப் பகுதியில் முப்படையில், பொலிசில் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையணியில் இணைந்து தொடர்ந்தும் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து

படைவீரர்களுக்கும் மேற்குறித்த காலப் பகுதியில் முப்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கடமையில் ஈடுபட்டிருந்த வேளையில் உயிரிழந்த, காணாமற் போன மற்றும் ஊனமுற்ற சிவில் ஊழியர்கள் உட்பட உத்தியோகத்தர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட 20 வருட அல்லது ஏனைய அதிகாரிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட 22 வருட, மகளிருக்கு 15 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்து தற்போது ஓய்வு பெற்றுள்ள அல்லது சேவையில் ஈடுபட்டுள்ள படைவீரர்கள் விருசர அட்டை வழங்கப்படும். அட்டையைப் பெற்றுக் கொள்கையில் அலகுகள், படையணி மற்றும் ஏற்புடைய படைகளின் நலன்புரி பிரிவுகள் ஊடாக ரணவிரு சேவா அதிகார சபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

11.3.2022 சனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை அச்சிடப்பட்ட விருசர சிறப்புரிமை அட்டைகளின் எண்ணிக்கை

தொ.இ.	கட்டம்	இராணுவப் படை	கடற் படை	விமானப் படை	பொலிஸ்	மொத்தம்
1	**1 ஆவது கட்டம்**	202	6	4	6	218
2	**2 ஆவது கட்டம்**	159	468	48	3	678
மொத்தம்		361	474	52	9	896

11.4. விருசர அட்டைக்கான சிறப்புரிமைகளை வழங்கும் நிறுவனங்கள்


தொ.இ.	துறை	நிறுவனம்
1	தொடர்பாடல் நிறுவனங்கள்	லங்கா பெல் நிறுவனம்
		டெலிகொம் நிறுவனம்
2	கல்வி மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்கள்	ஜயசேகர முகாமைத்துவ மத்திய நிலையம் (JMC)
		அவுஸ்திரேலிய அமைப்பு ACBT
		கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகம் (ITI)
3	நுகர்வோர் நிறுவனங்கள்	மல்பியலி பப்ளிகேஷன் நிறுவனம்
		அபான்ஸ் நிறுவனம்
		சொனெம்ரோ ஜுவலர்ஸ்
4	சுகாதார நிறுவனங்கள்	ஆசிரி சர்ஜிகல் வைத்தியசாலை
		நவலோக்க வைத்தியசாலை
		போவத்த மருந்தகம்
		ஏஏ சமரசிங்ஹ ஒப்டிக்கல்ஸ்
		அத்தநாயக்க ஒப்டிக்கல்ஸ்
5	போக்குவரத்து	இலங்கை புகையிரத திணைக்களம்
		இலங்கை போக்குவரத்து அமைச்சு
		= லங்கன் எயார் லைன் விமான சேவை
6	அரச மற்றும் தனியார் வங்கிகள்	மக்கள் வங்கி

11.5. விருசர அட்டைக்கான சிறப்புரிமைகளை வழங்கும்/தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு இதுவரை கடிதங்களை சமர்ப்பித்துள்ள நிறுவனங்கள்

தொ.இ.	துறை	நிறுவனம்
1	நிதி மற்றும் குத்தகை நிறுவனங்கள்	சீடீபீ பினான்ஸ் தனியார் கம்பனி (CDB)
		இலங்கை காப்புறுதி நிறுவனம்
		கொன்ட்டினேட்டல் இன்சுரன்ஸ்
2	கல்வி மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்கள்	CIPM நிறுவனம்
		தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம்
		தொழிற் பயிற்சி அதிகார சபை
		விஜய கிராபிக்ஸ் தனியார் கம்பனி
		தேசிய வணிக மற்றும் முகாமைத்துவ நிறுவகம் (NIBM)
		இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவனம் (SLIIT)
		ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி நிறுவனம்
3	நுகர்வோர் நிறுவனங்கள்	கென்டி நிறுவனம்
		களனி கேபள்ஸ் (பிஎல்சீ) நிறுவனம்
		தம்ரோ நிறுவனம்
		காகிள்ஸ் புட்சிட்டி
		சிங்கர் இலங்கை கம்பனி
		லிட்ரோ எரிவாயு நிறுவனம்
		விஜய கூட்டு வியாபாரம் (CIB)
		பெஷன் பக்
		டொயோட்டா நிறுவனம்
		சொப்ட் லொஜிக் தனியார் கம்பனி
		DSI நிறுவனம்
		அரச மரக் கூட்டுத்தாபனம்
		டேவிட் பீரிஸ் கம்பனி
		யூனியன் ஹாட்வெயார்
4	சுகாதார நிறுவனங்கள்	மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்
		டர்டன்ஸ் வைத்தியசாலை
		நைன்வெல்ஸ்

11.6. 2022 ஆம் ஆண்டின் சனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை அச்சிடப்பட்ட அட்டைகளின் எண்ணிக்கை

தொ. இ.	மாதம்	இராணுவப் படை	கடற் படை	பொலிஸ்	விமானப் படை	மொத்தம்
1	சனவரி	29	1			30
2	பெப்ரவரி	23				23
3	மார்ச்	20	1			21
4	ஏப்பிரல்	70	1	2	3	76
5	மே	35		1		36
6	ஜூன்	14	1	1		19
7	ஜூலை	18			6	24
8	ஆகஸ்ட்	18	2			20
9	செப்டெம்பர்	26	6			32
10	ஒக்டோபர்	29	209	44	1	283
11	நவம்பர்	53	203	3		259
12	டிசம்பர்	26	49	1		76
மொத்தம்		361	473	52	10	896



கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

2022

ஊஈஎப்/டீ/ஆர்எஸ்ஏ/22/4 2023 மே மாதம் ஆம் திகதி

தலைவர்
ரணவிரு சேவா அதிகாரசபை

2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான ரணவிரு சேவா அதிகார சபையின் நிதி அறிக்கைகள் மற்றும் பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 இன் படி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ரணவிரு சேவா அதிகார சபையின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகை கூற்று, உரிமை மாற்றல் கூற்று மற்றும் அத் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், சாராம்சப்படுத்தப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளைக் கொண்ட 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரைக்கு இணங்க எனது அறிக்கை உரிய நேரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, அதிகார சபையின் நிதிக் கூற்றுக்கள் மூலம் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் நிதிப் பாய்ச்சல் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

i. 2019 ஆம் ஆண்டில் உறுதிப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் கொடுப்பனவு செய்தலுக்கு உட்பட்டு இனங் காணப்பட்ட 3917 கணக்குகளுள் நடைமுறை ஆண்டின் இறுதியில் பெற்றோர் பராமரிப்புக் கொடுப்பனவைப் பெறும் கணக்குகள் 1800 காணப்பட்டன. இலங்கை பொதுத் துறையின் கணக்கீட்டு

நியமங்கள் 1 ஆம் இலக்கத்தின் 129(ஈ) (I) பிரகாரம் அதற்குத் தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

ii. இலங்கை பொதுத் துறையின் கணக்கீட்டு நியமங்கள் 07 ஆம் இலக்கத்தின் 13 ஆம் பந்திக்கு அமைய ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் அவற்றின் ஒத்த தன்மை அல்லது செயற்பாடு சமனானது என்ற அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுதல் வேண்டும் எனினும் காணி மற்றும் கட்டிடங்கள் என்பன ஆதனங்கள் பொறித் தொகுதியிலிருந்து வேறாக இனங் காணப்பட்டிருந்தன.

iii. 2011 ஆம் ஆண்டில் ரணவிரு சேவா அதிகார சபையிலிருந்து பதவி விலகிய கணனி உதவி உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ.530,380 ஐ அறவிடுவதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன், அது குறித்து இலங்கை பொதுத் துறையின் கணக்கீட்டு நியமங்கள் 8 ஆம் இலக்கத்தின் (ஆ) பின்னிணைப்பு பிரகாரம் தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

iv. நிதிக் கூற்றுக்களில் திறைசேறி உண்டியல்கள் அடிப்படையில் வட்டி வருமானம் ரூ.5,372,849 ஆக இனங் காணப்பட்டிருப்பினும் திறைசேறி உண்டியல்கள் அடிப்படையில் குறிப்பிடப்பட்டிருந்த வட்டி வீதத்தின் அடிப்படையில் கணக்கிடுகையில் அதன் உண்மையான வட்டி பெறுமதியானது ரூ.3,770,210 ஆக இருந்தமையால் 2022 ஆம் ஆண்டின் திறைசேறி உண்டியல்கள் முதலீட்டு வருமானம் மற்றும் முதலீட்டுச் சொத்து ரூ.1,602,639 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

v. மொத்தம் ரூ.56,255,315 ஆக இருந்த ஜர்னல் பதிவுகளின் செம்மைத்தன்மை குறித்து கணக்காளரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்வில்லை என்பதோடு, ஜர்னல் உறுதிச்சீட்டுக்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், GG-1298 ஆம் இலக்க கெப் வண்டியை விற்பனை செய்வதற்கு வாகனக் கணக்கிலிருந்து ரூ.300,000 பெறுமதியை நீக்குதல் மற்றும் திரட்டிய தேய்மான ஒதுக்கீட்டுக் கணக்கிலிருந்து ரூ.155,342 பெறுமதி வாகன அகற்றல் கணக்கிற்கு மாற்றுவதற்குரிய ஜர்னல் பதிவுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

vi. அதிகார சபையினால் 2022 ஜூன் மாதம் 29 ஆம் திகதி முதல் 2596001000636707 ஆம் இலக்க நிலையான வைப்புக் கணக்கொன்று மக்கள் வங்கியில் ஆரம்பிக்கப்பட்டு பேணப்பட்டு வருவதுடன், அதன் வைப்பு வட்டி வருமானத்தைக் கணக்கிடுகையில் ரூ.396,364 குறைவாகக் கணக்கில் பதியப்பட்டிருந்தது. அதற்கமைய கிடைக்க வேண்டிய வட்டி நடைமுறைச் சொத்தும் ரூ.396,364 ஆல் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 ரணவிரு சேவா அதிகார சபையின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடங்கியுள்ள இதர தகவல்கள்

இந்தக் கணக்காய்வு அறிக்கையின் தினத்திற்குப் பின்னர் என்னிடம் ஒப்படைக்க எதிர்பார்க்கும் அதிகார சபையின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆனால் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது குறித்த எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத தகவல்கள், இதர தகவல்கள் என்பதனால் கருதப்படும். இந்த இதர தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக் கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாததோடு, அது குறித்து நான் எந்த உறுதிமொழியோ அல்லது கருத்தையோ தெரிவிக்கவில்லை.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான எனது கணக்காய்விற்கு அமைவாக, மேலே இனங் காணப்பட்ட இதர தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடிந்த போது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்கையில் இதர தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு வழியில் பெற்றுக் கொண்ட எனது அறிவுக்கு எட்டிய வகையில் பொருண்மை ரீதியில் பொருத்தமற்றதா என்பது குறித்து ஆராய்வதே எனது பொறுப்பாகும்.

அதிகார சபையின் 2022 ஆண்டறிக்கையை வாசிக்கையில், அதில் பொருண்மைசார் தவறான வெளிப்படுத்தல்கள் காணப்படுகின்றன என நான் முடிவு செய்தால், சீராக்குவதற்கு நிர்வகிக்கும் தரப்பினரிடம் அவ் விடயங்களைத் தொடர்பாடல் வேண்டும். தொடர்ந்தும் தவறான வெளிப்படுத்தல்கள் காணப்படுமாயின், அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிராகரம் என்னால் உரிய நேரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் அவை உள்ளடக்கப்படும்.

1.4 தரப்பினரிடம் நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்க உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத் துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகத் தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் அதிகார சபையைத் தொடர்ந்தும் பேணிச் செல்லும் ஆற்றலைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என்பதோடு, முகாமைத்துவமானது அதிகார சபையைக் கலைப்பதற்குக் கருதினால் அல்லது மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையில் கணக்குப் பதிதல் மற்றும் அதிகார சபையின் தொடர்ந்தியலுக்கு ஏற்புடைய விடயங்களை வெளிப்படுத்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகார சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உட்பிரிவின் பிரகாரம், அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலத்திற்கேற்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தமது வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள் பற்றி உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறு காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டவை என்பது குறித்து நியாயமான உறுதிப்பாட்டை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்கிய கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வை மேற்கொள்கையில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. தவறு மற்றும் மோசடி தனித்தனியாக அல்லது கூட்டுமொத்தமாக செல்வாக்கு செலுத்துமென்பதால் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் எழக்கூடுமென்பதுடன், அதன் பொருண்மையானது இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களினால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீதான செல்வாக்கின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர் தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர் தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்குகையில் மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களுக்கு ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக் கூடிய ஆபத்துக்களை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்கு சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறான வெளிப்படுத்தலினால் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தை விடவும் மோசடியினால் ஏற்படும் தாக்கமானது அலட்சியம், போலி

ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல் போன்ற காரணங்களினால் கூடுதலாக இருக்கும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் செயற்திறன் குறித்த அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும் நோக்கில் அல்லாத போதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் வடிவமைப்பதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு குறித்த அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் செய்யப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் மற்றும் நிலைமைகள் காரணமாக அதிகார சபையின் தொடர்ந்தியங்கல் குறித்த பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பது தொடர்பில் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டிற்கு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை குறித்த அடிப்படையைப் பயன்படுத்துவதன் பொருத்தப்பாடு தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என்ற முடிவுக்கு நான் வந்தால் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த் வேண்டும் என்பதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதுமானவை அல்ல எனின் எனது அபிப்பிராயத்தை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ந்தியங்கும் நிலை முடிவுறுத்தப்படலாம்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான முறையிலும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது குறித்தும் வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களில் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் குறித்தும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங் காணப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுக் குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களுக்கு அறிவுறுத்துகின்றேன்.

2. பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கும்.

2.1.1 எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர, 2018

ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் பிரகாரம், கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுப்படுத்தல்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான நிதி அறிக்கைகள் அதிகார சபையினால் பேணப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (i) (ஈ) (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் படி அதிகார சபையின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இணங்குகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (i) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் படி கடந்து ஆண்டு என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் மற்றும் பொருண்மையான விடயங்களுக்கு மட்டுப்படுத்தலில் பின்வரும் வெளிப்படுத்தல்களை செய்யும் அளவிற்கு எதுவும் எனது கவனத்தை ஈர்க்கவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் படி அதிகார சபையின் ஆளுகை சபையின் உறுப்பினர் எவராவது ஒருவருக்கு அதிகார சபையினால் செய்யப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடி அல்லது வேறு வகையில் சாதாரண நிலைமைக்கு அப்பால் தொடர்பு உள்ளது.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் படி பின்வரும் அவதானிப்புக்கள் தவிர ஏதேனும் குறிப்பிட்ட ஒரு ஏற்புடைய எழுத்து மூல சட்டத்திற்கு அல்லது அதிகார சபையின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதாகாக வகையில் செயற்பட்டுள்ளது.

விதிமுறைகள்/ஏற்பாடுகளுக்கான குறிப்பு	**அவதானிப்பு**
(அ) அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இலக்கம் PED/12 இன் 9.12 ஆம் பிரிவு	அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளாது அக்கிரகார காப்புறுதித் தவணையின் அரைவாசி செலவாக ரூ.131,000 அதிகார சபையினால் செலவிடப்பட்டிருந்தது.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் படி அதிகார சபையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு ஏற்புடையதாகாக வகையில் செயற்பட்டுள்ளது.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் படி அதிகார சபையின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் விளைத்திறனாக உரிய காலப் பகுதிகளில் ஏற்புடைய சட்ட திட்டங்களுக்கு அமைவாக பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை.

2.3 வேறு விடயங்கள்

i. 2014 ஆம் ஆண்டில் இரண்டு உத்தியோகத்தர்களினால் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூ.1,830,450 முற்பணமானது மீளாய்வு ஆண்டின் இறுதி வரை செலுத்தி முடிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பொருட்டு ஏற்புடைய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை மேற்கொண்டு அவர்கள் இருவரும் குற்றமற்றவர்கள் என நிரூபணமானதன் காரணமாக இந்தக் கொடுப்பனவு தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் இனங் காணப்பட்டிருக்கவில்லை.

ii. 2001 ஆம் ஆண்டில் அதிகார சபைக்கு வீடமைப்பிற்கென நன்கொடையாகக் கிடைத்த கிரலமெதகும்புர என்றழைக்கப்படும் 1 ஏக்கர் 1 ரூட் 09 பேர்ச்சானது ரூ.1,500,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த காணியொன்று மீளாய்வு ஆண்டின் இறுதி வரை பயன்படுத்தப்படாமலிருந்தது.

iii. வீட்டுக் கடன், சுயதொழில் கடன், மருத்துவக் கடன் மற்றும் திறன்களுக்கான கடன்களை வழங்குதல் தொடர்பில் தனிநபர் கடன் மீதிகளைப் பரிசீலிக்கையில் 5 தொடக்கம் 26 இற்கு இடைப்பட்ட கடன் தவணைகளுக்கு ரூ.2,527,509 பெறுமதியான நிலுவைக் கடன் தவணைத் தொகை காணப்பட்டது.

iv. ஆயுதப் படைகளின் மற்றும் பொலிஸ் யுத்த செயற்பாட்டின் போது அங்கவீனமுற்ற, உயிரிழந்த அல்லது தேடிக் கொள்ள முடியாதுள்ள நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களில் தங்கி வாழ்வோரின் நலனை மேம்படுத்தும் நோக்கில் அதிகார சபை தாபிக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வு ஆண்டின் இறுதி வரை அங்கவீனமுற்ற, காணாமற் போனோர் மற்றும் உயிரிழந்த அல்லது அவர்களின் தங்கி வாழ்வோர் தொடர்பில் முறையான மற்றும் சரியான தகவல் முறைமையொன்றை இற்றைப்படுத்திப் பேணிச்செல்வதற்கு அதிகார சபை தவறியிருந்தது.

v. அதிகார சபை மூலம் நடைமுறைப்படுத்தப்படும் விருசர அட்டைக்கு பாதுகாப்பு பிரிவு, இலங்கை டெலிகொம் நிறுவனம் மற்றும் வேறு தனியார் நிறுவனங்களிடமிருந்து 2016 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற ரூ.25,366,500 தொகையிலிருந்து ரூ.3,607,941 தொகையானது 2018 டிசம்பர் 31 ஆம் திகதி முதல் பயன்படுத்தப்படாமலிருந்தது.

vi. 2014 ஆம் ஆண்டில் அதிகார சபையின் தலைமை அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட க்ளெடின் பொருத்துதலுக்குப் பதிலாக ரீ.சீ.ஐ. நிறுவனத்தினால் (T.C.I ENTERPRISES PVT LTD) பிடித்து வைக்கப்பட்ட ரூ.224,063 நடைமுறை வருடத்தின் இறுதியிலும் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, 2014 ஆம் ஆண்டில் ரூ.4,481,269 ஆக இருந்த அக் கொடுக்கல் வாங்கலின் அடிப்படையில் காணப்பட்ட முறைகேடுகள் குறித்த விசாணை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

vii. அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட பணிக் குழுவானது (தலைவர் மற்றும் உப தலைவர் தவிர்த்து) 89 பேராகக் காணப்படினும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று உண்மையான பணிக் குழுவில் 64 சிவில் உத்தியோகத்தர்கள் மற்றும் 56 பாதுகாப்புப் பிரிவின் உத்தியோகத்தர்கள் என்ற வகையில் மொத்த பணிக்குழுவில் 120 பேர் காணப்பட்டமையால் 31பணிக்குழுவினர் மிகையாகக் காணப்பட்டனர்.

viii. 194 ஆவது முகாமைத்துவக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய நிதி முதலீடு செய்வதற்கு முன்னர் முகாமைத்துவ சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனினும் 2022 டிசம்பர் 22 ஆம் திகதி மக்கள் வங்கியில் ஆரம்பிக்கப்பட்ட ரூ.7,250,000 பெறுமதியான நிலையான வைப்புக்கு 2023 மார்ச் 15 ஆம் வரையிலும் ஏற்புடைய அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

ix. தேசிய லொத்தர் சபையின் சுப்பிரி வாசனா சம்பத்த மற்றும் ஹந்தஹன லொத்தர் டிக்கட் வருமானத்தில் நூற்றுக்கு 10 வீதம் அதிகார சபைக்கு திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தின் ஊடாக ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2022 ஆம் ஆண்டிற்கு அமைவாக அதிகார சபையின் லொத்தர் வருமானம் ரூ.129,826,112 ஆக இருந்த போதிலும் அதிகார சபைக்கு 2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று ரூ.10,193,960 மாத்திரமே கிடைக்கப் பெற்றிருந்தது. அதற்கமைய ரூ.119,632,152 செயற்பாட்டு திணைக்களத்திடமிருந்து கிடைக்க வேண்டியிருந்தது.

